*ஜோதியின் அகமியம் பாகம் 1 ன் தொடர்ச்சி...*

# ஜோதியின் அகமியம் 2

**வெற்றி பெற நினைவே பிரதானம்**

நினைவென்று சொல்லப்படுவதன் ரகசியம் மகா பெரியதாகும். நம்மில் பெரும்பாலோர் இதனை உணராமலேயே இருக்கின்றனர். நமக்குள் நடந்து வரும் சகல தத்துவங்களுக்கும் இந்த நினைவுதான் ஆதாரமாகும். எந்தவொரு விஷயமாயினும் அதை நினைவில் நிறுத்தி சிந்திக்க சிந்திக்க அதிலிருந்து அநேக வழிகளும், ரகசியங்களும் வெளியாகும். அதாவது, மனிதன் தன்னையும் மற்ற உலகங்களை பற்றியும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பானாயின் வானம், பூமி, அர்ஷ், குர்ஸி, லவ்ஹு, கலம் போன்ற உலகங்களெல்லாம் மிகச்சிறிய உலகங்களாகவும் மனிதன் மட்டும் மிகப்பெரிய உலகமாகவும் இருப்பதை தெரிந்து கொள்ளலாம்.

“**படைகோலக் கருணை**“ என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் சிலருக்கு வியப்பை கொடுக்கலாம். அப்படிப்பட்டவர் இல்முல் யகீனை அறிந்த ஞானிகளிடம் இதுபற்றிக் கேட்டறிந்து தன்னை நோட்டமிட்டு தான் மிகப் பெரிய உலகமாக இருப்பதை தெரிந்து கொள்வாராயின் இறைவன் அவனுடைய வேதத்தில் கூறியுள்ளவாறு வானத்தின் தட்டுக்களான ஏழு மர்தபாக்கள் என்னும், மனிதன் அஹதிய்யத்தில் இருந்து வஹ்தத், வாஹிதிய்யத்து, ஆலமுல் அர்வாஹ், ஆலமுல் மிதால், ஆலமுல் அஜ்ஸாம், ஆலமுல் இன்ஸான் வரை இறங்கி வந்து மனிதனென்னும் பெயரை பெற்றுக் கொண்ட ஏழு படித்தரங்களின் ரகசியமும் இதுதான் என்பதை தெரிந்து கொள்வான். இதனாலேயே...

وَفِيٓ أَنفُسِكُمۡۚ أَفَلَا تُبۡصِرُونَ

“**உங்களிலேயே இருக்கிறது. அதை நீங்கள் பார்க்கவில்லையா?**“

என்பதாக இறைவன் கேட்கிறான்.

மேலும் நினைவின்றி எந்தவொரு காரியத்தையும் சாதிக்கவே முடியாது. இதற்கு ஆதாரம் என்னவெனில், ஒருவன் ஒரு காரியத்தை செய்யும்போது அதில் நினைவை செலுத்தாது செய்வானாயின் அதனால் அக்காரியத்தில் அவன் பெறக் கூடிய பலனை இழப்பதோடு துன்புறவும் நேர்ந்து விடுகிறது. இதுபோன்றே கல்வி கற்கும் ஒரு மாணவன் தனது நினைவை இதர விஷயங்களில் செல்லவிடாவண்ணம் கல்வியில் மட்டும் நினைவை செலுத்தி வருவானாயின் அவன் விரைவில் முன்னேறி புகழுக்“குரியவனாகி விடுகிறான். இவ்வாறே வணக்கங்களில் ஒருவன் எந்த அளவுக்கு நினைவை ஒருங்கிணைத்து வணங்கி வருகிறானோ அந்த அளவுக்கு அவன் அதில் பலனைப் பெறுகிறான்.

இதுபோன்றே ஒருவன் ஒரு காட்சியை காண வேண்டுமென்று நினைத்தால் கண்கள் அந்த வேலையை செய்கின்றன. ஒரு சப்தத்தை கேட்க வேண்டுமென்று நினைத்தால் செவிகள் அந்த வேலையினை செய்கின்றன. ஒரு வாசனையை நுகர வேண்டுமென்று நினைத்தால் நாசி அந்த வேலையை செய்கிறது. ஒரு வார்த்தையை பேச வேண்டுமென்று நினைத்தால் வாய் அந்த

வேலையை செய்கிறது. ஒரு விஷயத்தை எழுத வேண்டுமென நினைத்தால் கைகள் அந்த வேலையை செய்கிறது. ஒரு இடத்திற்கு போக வேண்டுமென்று நினைத்தால் கால்கள் அந்த வேலையை செய்கின்றன. மலஜலம் கழிக்க வேண்டுமென்று நினைத்தால் அதற்குரிய கருவிகள் அந்த வேலையை செய்கின்றன. உறவு கொள்ள வேண்டுமென்று நினைத்தால் தேகத்தில் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டு அதற்குரிய மர்மக்கருவிகள் விம்மி ஒன்றோடு ஒன்று பொருந்தி கருவை சுமந்து குழந்தையை வெளிப்படுத்துகின்றன. அவ்வாறு உறவில் ஈடுபட்டிருக்கும்போது நினைவை வேறு பக்கமாக திருப்பி விட்டால் "நுத்பா"(நாதம்) வெளியாகாது நின்று விடுகிறது.

பின்னர் திரும்பவும் அதே விஷயத்தில் நினைவை கொண்டு சென்றால் நாதம் வெளிப்பட்டு கருத்தரித்து குழந்தை பிறக்கிறது. மேலும் நினைவிருக்கும் வரை மனிதன் எல்லா காரியங்களிலும் ஈடுபடுகிறான். நினைவை இழந்துவிட்டால் உறங்குகிறான் என்று சொல்லப்படுகிறது. திரும்பவும் நினைவு வந்து விட்டால் விழித்தெழுந்து தனக்குரிய காரியங்களில் ஈடுபடுகிறான். ஒருவேளை நினைவு திரும்பாமலேயே போய்விட்டால் தேகம் பிணம் என்னும் பெயரை பெற்றுக் கொள்கிறது.

இதுபோன்றே இப்பூமியில் மனிதனால் உருவாக்கபட்டுள்ள ஒவ்வொரு பொருளும், மாளிகை, கோபுரம், கப்பல், ரயில், விமானம், கிராமபோன், தந்தி, டெலிபோன், ரேடியோ, வயர்லெஸ், கம்ப்யூட்டர் போன்ற சாதனங்களெல்லாம் துவக்கத்தில் மனிதனுடைய நினைவுக்குள் மறைந்திருந்து பின்னர் அவைகள் போட்டாவாக உருப்பெற்று அதன்பிறகே சாதனங்களாக வெளிவந்துள்ளன. மேலும் பறவைகள் ஆகாயத்தில் பறப்பதும், தமது இனத்தை பெருக வைப்பதும், தம்முடைய இதர காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதும், இவ்வாறே மற்ற இதர வர்க்கங்களும் ஊர்வனங்களும் தத்தம் தமக்குரிய காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதும் இந்த நினைவென்னும் பிரதானமான சக்தியைக் கொண்டுதான் நடைபெற்று வருகின்றன.

இன்னும் இதேபோல புற்பூண்டுகளிலும் நினைவென்னும் சக்தி இருப்பதாக அகப்பார்வையை உடையோர் கூறுகின்றனர். இதற்குரிய ஆதாரம் என்னவெனில், அதை தமக்குத் தேவையான சத்துக்களை கிரகித்துக் கொள்வதையும், தேவையற்ற கழிவுகளை வெளியில் தள்ளுவதையும், தமக்குள்ளிருந்து பூ, இலை, காய், கனி போன்றவைகளை வெளிப்படுத்தி அவைகளுக்குத் தக்கவாறுள்ள உருவங்களையும் வர்ணங்களையும் சித்தரிப்பதையும் வெளிப்படையாகவே நாம் பார்க்கிறோம். இவ்வாறே கற்கரடுகளிலும் நினைவென்னும் சக்தியுள்ளது என்பதை அகப்பார்வை உடையோர் தெளிவாகத் தெரிந்துள்ளனர் என்பதை நாம் திண்ணமாகக் கூறுவோம்.

மேலும் ஒருவன் இறைவனை நினைத்தவனாகவே இருப்பானாயின் அவன்தான் விசுவாசி என்பதும், யார் அவ்வாறு நினைக்காதிருக்கிறானோ அவனே வழிகேடன் என்பதும் நாம் எல்லோருமே அறிந்துள்ள விஷயமாகும். ஆதலால் இறைவன் என்ற ஒருவன் இருக்கிறானென ஒப்புக் கொள்வதும் நினைவை பொறுத்த விஷயமாகவே இருப்பதால் இதுவே விசுவாசமாகவும் இருக்கிறது. மேலும் இது பேரறிவு என்னும் ரகசியத்தின் பொக்கிஷமாகவும் இருக்கிறது. இதனாலேயே...

فَاذْكُرُونِيْ اَذْكُرْكُمْ

**"நீங்கள் என்னை நினையுங்கள். நான் உங்களை நினைக்கிறேன்"**

என்பதாக இறைவன் தனது வேதத்திலும்,...

اَنَا عِنْدَ ظَنِّ عَبْدِيْ بِيْ فَالْيَظُنَّ مَا شَآءَ

**"எனது அடியார்கள் என்னை நினைக்கும் இடத்தில் நான் இருக்கிறேன். ஆதலால் அவர்கள் நாடியதை நினைத்துக் கொள்ளட்டும்"**

என ஹதீதெ குத்ஸியிலும் கூறுகிறான். இன்னும் தக்கலை பீர் முகம்மது அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

**ஒன்றென்று சொன்ன உயிர்நிலை யென்னடி சிங்கி – அது**

**உன்னால் உதிப்பல முன்னாள் நினைவடா சிங்கா!**

என்றும் கூறுகின்றனர். எனவே இவையனைத்தையும் நாம்யோசித்துப் பார்ப்போமாயின் சர்வ சிருஷ்டிப் பொருட்களும் இறைவனுடைய அறிவில் மறைந்திருந்து பின்னர் அவனுடைய நாட்டத்தில் உதயமாகி அதன்பின் பற்பல நாம ரூபங்"களாக வெளிப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படுவதன் உண்மையான கருத்து இன்னதென்பதையும்,...

وَمَا تَشَآءُوْنَ اِلَّا اَنْ يَّشَآءَ اللهُ

**"நீங்கள் நாட மாட்டீர்கள். இறைவனன் நாடினாலே ஒழிய"**.

என இறைவன் அவனது வேதத்தில் கூறியிருப்பதன் கருத்து இன்னதென்பதையும் ஆழமான அறிவுடையோர் அறிந்து கொள்வர். இதன்றி மேற்கூறப்பட்ட ஆதாரங்களையும் அனுபவங்களையும் உற்று நோக்கும்போது சர்வ தத்துவங்களுக்கும் மூலமாகிய எஜமானாக இருப்பது நினைவெனும் பிரதானமான சக்தியே என்பதும் நமக்குத் தெரிய வருகிறது.

**மனிதர் ஒருவருக்கொருவர் அன்னியமல்ல.**

"லா இலாஹ இல்லல்லாஹ்" என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான கருத்துப்படி நமது பூர்வீகமென்னும் எதார்த்தமாகிய நூரே முஹம்மதிய்யாவை நோக்கஇ மனிதர்கள் யாருமே ஒருவருக்கொருவர் அன்னியமல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். விஷயம் இவ்வாறிருந்தும் நாம் நமது பேதபுத்தியின் காரணமாக வேற்றுமை என்னும் தோஷத்தில் மூழ்கி ஒருவரையொருவர் அன்னியமாகக் கண்டு சாத்தானுடைய குணமும், மிருகக் குணமும் நம்மை அடிமைப்படுத்தி இறைவனுடைய திருச்சமூகத்தை தரிசிக்க முடியாமல் தடுத்துக் கொண்டுள்ளன.

ஏகத்துவத்தை உணர்ந்தால் ஒருவருக்கொருவர் அன்னியமல்ல என்னும் உண்மையை தெரிந்து கொள்ள முடியுமாதலால் அப்போது யாரும் யாருக்கும் தீங்கிழைக்க வழியில்லாது போய்விடும். உதாரணமாக ஒரே மின்சாரம் தான் பல பல்புகளில்வெளியாகி ஒளியை தருவது போலென்று சொல்லலாம். அதாவது, பல்புகள் என்பது மனிதன் குதிரை, கோழி, முட்டை என்னும் பல தோற்றங்களாக இருந்தாலும் அதில் பிரகாசிப்பது மட்டும் ஒரே மின்சாரமாகத்தானே இருக்கிறது! இந்நிலையில்அந்த பல்பு ஏதேனும் ஒரு காரணத்தினால் பழுதுபட்டுப் போனால் அதில் மின்சாரம் பிரதிபலிக்க வழியில்லாமல் போய்விடுகிறது.

இதில் மின்சாரத்தை ரூஹே இன்ஸானி (மனித ஆன்மாவு)க்கும் பல்பை தேகத்திற்கும் உவமையாகக் கொள்ள வேண்டும். மற்றுமோர் உதாரணமாகிறது, நாம் அணிந்துள்ள ஆடையை சுட்டிக்காட்டி இது என்ன என்று கேட்டால், இது எனது சட்டை என்றும், லுங்கி என்றும், தொப்பி என்றும் கூறுவோமேயன்றி இது நான் என்று சொல்ல மாட்டோம். இவ்வாறே நமது தேகத்தின் உறுப்புக்களை சுட்டிக் காட்டி இவை என்று கேட்டால் இது என் தலை என்றும், கை என்றும், கால் என்றும் கூறுவோமேயன்றி இவைகளெல்லாம் நான்தானென்று சொல்ல மாட்டோம். காரணம் இவையனைத்தும் நமது தேகமாக இருக்கிறதேயன்றி நாம் அல்ல. அப்படி நாமாக இல்லாவிட்டாலும் கேத்தை சார்ந்துள்ள ஒவ்வொரு இன்ப துன்பத்தையும் நாமும் சேர்ந்து அனுபவிப்தை போல நம்மை சார்ந்துள்ள ஒவ்வொரு இன்ப துன்பத்தையும் தேகமும் சேர்ந்தே அனுபவித்து வருகிறது.

அது எவ்வாறெனில், நமது கேத்தை அலங்காரம் செய்தால் அந்த சுகத்தை நாமும் சேர்ந்துதான் அனுபவிக்கிறோம். அதே தேகத்தை அடித்துத் துன்புறுத்தினால் அத்துன்பத்தையும் நாமும் சேர்ந்துதான் அனுபவிக்கிறோம். இவ்வாறே நமக்கு ஒருவர் புகழ்மாலை சூட்டினால் அதன் காரணமாக தேகமும் மகிழ்ச்சி அடைகிறது. அதுவே நம்மை ஒருவர் இகழ்ந்து பேசினால் அதன் காரணமாக தேகம் வாடி வதங்கி விடுகிறது. இவ்வாறு நமது சகல இன்ப துன்பங்களிலும் நாமும் நமது தேகமும் ஒருங்கிணைந்திருப்பதால், சில சந்தர்ப்பங்களில் பற்கள் நாக்கை கடித்து விட்டால் அந்த வேதனையை நாம் மட்டுமே அனுபவிப்பவர்களாகவும், அதற்கு பழிவாங்கும் வகையில் கடித்த பற்களை உடைத்து விடாமல் பொறுமையை கடைப்பிடிப்போராகவும் இருந்து வருகிறோம். இதற்குக் காரணம்என்னவெனில். ஒவ்வொரு உறுப்பும் நமது தேகத்திற்கு வேறானதாக இல்லாது இருப்பதால் ஒரு உறுப்பு செய்த குற்றத்திற்காக அதை பழுதுபடுத்தினால் அதனால் ஏற்படும் இழிச்சொல் மற்ற அவயங்களையும் சார்ந்து பழிப்புக்கு ஆளாக நேரிடும்.

இதுபோன்றே ஏகத்துவத்திற்குரிய கலிமாவை உணர்ந்த விசுவாசிகள் சர்வமும் ஒரே உள்ளமை பொருளுக்குரிய தோற்றம் தானென்று சந்தேகமின்றி அறிந்திருப்பதாலல் ஒருவனுக்கு தீங்கிழைத்தால் அத்தீங்கு தனக்குத்தானே இழைத்ததாகும் என்பதை உணர்ந்து அதை விட்டும் தம்மை பாதுகாத்துக் கொண்டனர். இதனாலேயே...

اَلْمُؤْمِنُ مِرْآةُ الْمُؤْمِن

**“ஒரு விசுவாசி இன்னொரு விசுவாசிக்கு கண்ணாடியாக இருக்கிறான்“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இதற்குரிய விளக்கம் யாதெனில், ஒரு கண்ணாடியில் நம்மை நாம் பார்த்தால் அதில் நமது தோற்றம் வெளிப்படுவதுபோல ஒரு விசுவாசி இன்னொரு விசுவாசியை சந்தித்தால், தான் காணும் அத்தோற்றமும் தான் தானேயன்றி வேறல்ல என்று அறிந்து கொள்வான். ஏகத்துவப்பாதையில் முதன்முதலாக அடியெடுத்து வைத்து நடப்பவன் இப்படிப்பட்ட பேணுதல்களை எல்லாம் நடைமுறையில் பழக்கப்படுத்தி வர வேண்டும். ஏனெனில் குழந்தை பருவம் முதல் ஷிர்க்கென்னும் வேற்றுமையிலேயே நம்மை நாம் பழக்கப்படுத்தி வந்துள்ளதால் துவக்கத்தில் அதை மாற்றுவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். என்னதான் கஷ்டமாக இருந்தாலும் வேற்றுமை என்னும் வழிகேட்டில் சிக்கி நரகுக்குரியவர்களாக நம்மை நாம்ஆக்கிக் கொள்ளாமல் அதிலிருந்து விடுதலை பெற்று நமது அசல் என்னும் நூரே முஹம்மதிய்யாவில் இணைய வேண்டியது நமது கடமையாகும். இதனாலேயே...

اَلْاَرْوَاحُ جُنُوْدٌ مُجَنَّدَةٌ فَمَا تَعَارَفَ مِنْهَا اِئْتَلَفَ وَمَا تَنَاكَرَ مِنْهَا اِخْتَلَفَ

**“ஆன்மாக்கள் கூட்டங்கூட்டமாக இருப்பவை. அவைகளில் ஒன்றையொன்று அறிந்தவை இணைந்து கொண்டன. அறியாதவை பிரிந்து விட்டன.“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவிலுகின்றனர். இதன் கருத்து, வேற்றுமை என்னும் தோஷமாகிய ஷிர்க்கை விட்டும் நீங்கி கலிமாவின் நிலையாகிய சர்வமும் ஒரே உள்ளமை பொருளுக்குரிய தோற்றம்தான் என்னும் ஏகத்துவத்தில் ஒன்றுபட வேண்டும் என்பதேயாகும். இதனாலேயே இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது “கீமியாயெ ஸஆதத்“ என்னும் நூலில்...

“மனிதன் துவக்கமில்லாத அனாதி நிலையை சேர்ந்தவனல்ல என்றாலும் சந்தேகமின்றி முடிவில்லாத நித்தியவனாக இருக்கிறான்“ எனக் கூறுகின்றனர். இதை ஆழ்ந்து கவனித்தால் நாம் முடிவில்லாத நித்திய நிலையைக் கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதன் உண்மையான கருத்து இதுதான் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி விளங்கிக் கொண்டால் நாம் யார்? என்னும் ரகசியத்தையும், இந்த ஸ்தூல தேகத்தோடு இவ்வுலகில் வந்து நாம் பிறந்திருப்பதற்குரிய காரணமென்ன என்பதையும், இதனுடைய உண்மை என்ன என்பதையும் விளங்கி மனிதர் ஈடேற்றமடைவதற்காக, இறைவனுக்கு அன்னியமாக எதுவுமே இல்லையென்னும் கருத்து நிறைந்த லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவை உலகிலுள்ள அனைத்து மனிதர்களுக்கும் அருட்கொடையாக அருளப்பட்டது என்பதையும் நற்பாக்கியத்தை தேடும் நல்லோர் புரிந்து கொள்வர்.

**உள்ளத்தின் மகத்துவம்**

உள்ளத்தின் மகத்துவத்தையும். அதனுடைய ரகசியத்தையும் தெரிந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவர் மீதும் கடமையாதலால் இப்போது அதைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம். அதை **“நப்ஸ்“** என்றும், **கல்பு** என்றும், **ஸிர்ரு** என்றும் பல்வேறு பெயர்களைக் கொண்டு பேசப்பட்டாலும் பொருள் ஒன்றேயன்றி பலதல்ல. இருப்பினும் நான்கு பெயர்களைக் கொண்டு

இந்த உள்ளம் அழைக்கப்படுவதற்குரிய காரணம், இது "**நாஸூத்துடைய உலகை**" எதிர்நோக்கி நின்று தேக உணர்வுகளுக்கு ஆட்பட்டு தீமையை செய்யும்போது **நப்ஸ்** என்றும், தீமை என்பதை உணர்ந்து நன்மையின் பால் ஈடுபட்டு அதில் நிலைத்து நின்று **சூட்சும லோகம்** என்னும் மலக்கூத்துடைய உலகை எதிர்நோக்கி நிற்கும்போது கல்பு என்றும். மலக்கூத்துடைய உலகில் சஞ்சரித்து காரண லோகம் என்னும் ஜபரூத்துடைய உலகில் சஞ்சரித்து மகா காரணலோகம் என்னும் லாஹூத்துடைய உலகை எதிர்நோக்கி நிற்கும் போது **ஸிர்ரு** என்றும் சொல்லப்படும். ஆதலால் மேற்கூறப்பட்ட பெயர்களில் எந்தவொரு பெயரை குறிப்பிட்டுச் சொன்னாலும் அது அந்த ஒரே மெய்ப்பொருளை குறித்தே சொல்லப்படுவதாக எண்ணிக் கொள்ள வேண்டும்.

அடுத்து **ரூஹ்** (ஆன்மா) உடைய ரகசியம் என்னவென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறெனில், அதனுடைய ரகசியத்தை அறிந்து கொள்வதுதான் மனிதன் தனது அந்தரங்கத்தை அறிந்து கொள்வதற்கு திறவு கோலாகவும், மனிதன் தன்னை அறிவதுதான் இறைவனை அறிந்து கொள்வதற்கு திறவுகோலாகவும், மனிதன் அமைந்துள்ளது. அதைப் பற்றி இறைவன் தனது வேதத்தில்....

يَسْئَلُونَكَ عَنِ الرُّوْحِ قُلِ الرُّوْحُ مِنْ اَمْرِ رَبِّيْ

"**ஆன்மாவை குறித்து உம்மிடம் கேட்போரிடம் ஆன்மாவானது எனது இரட்சகனுடைய கட்டளையில் நின்றுமுள்ளது என்பதாகக் கூறும்**" எனக் கூறுகிறான். இதனால் ஆன்மாவின் ரகசியத்தை யாருமே தெரிந்து கொள்ள முடியாதென்றோ அல்லது அதனுடைய ரகசியத்தை இறைவன் யாருக்குமே அறித்துத் தரவில்லை என்றோ எண்ணிவிடக்கூடாது. ஏனெனில் அதை அறிந்துக் கொள்வதைக் கொண்டுதான் மனிதன் முக்தியை பெறவேண்டியுள்ளது. எனவே அதனுடைய எதார்த்தத்தை அறிந்தேயாக வேண்டும். இருப்பினும் அதை அறிந்து கொள்ளுதல் என்பதும் அத்தனை இலேசான காரியமல்ல. மிகப்பெரும் முயற்சியைக் கொண்டே இது சாதிக்கப்படக் கூடியதாக இருக்கிறது. இருப்பினும் நாம் அதற்குரிய விதிமுறைகளை முறையாகக் கடைப்பிடித்து, அதாவது அழிந்துபோகும் சிருஷ்டிப் பொருட்களின் மீது நாம் வைத்துள்ள இச்சைகளை விட்டொழித்து இறைவனுடைய தரிசனையை பெற்றுக் கொள்ள வேண்டுமென்னும் உண்மையான பிரியத்தோடு முயற்சி செய்வோமாயின் இறைவன் தனது கிருபையை கொண்டு தானே அந்த ரகசியத்தை நமக்கு அறிவித்துக் கொடுப்பான். அது எவ்வாறெனில்....

وَعَلَّمْنَاهُ مِنْ لَّدُنَّا عِلْمًا

"**நாம் அவருக்கு நமது லதுன்னியான கல்வியை கற்றுக் கொடுத்தோம்**" என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறுகிறான்.

இனி உள்ளம் என்பது தேகமனைத்துக்கும் எஜமானாகவும்இ மற்றப் புலன்களனைத்தும் அதற்கு ஊழியர்களாகவும் அமைந்துள்ளன. ஏனெனில் மனிதன் மறுமையின் நற்பதவியை தேடிக் கொள்ளும்வரை தேகத்தை பாதுகாப்பதற்காக. மேலும் உள்ளத்தின் மகத்துவம் இதுதான்

என்பதை யாராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. அதனுடைய மகத்துவத்தில் ஒன்று யாதெனில்...

**"கல்பு என்னும் உள்ளத்திலிருந்து ஆலமுர் ரூஹானியான"** பரலோகத்திற்கு ஒரு வழி இருக்கிறது. அங்கிருந்து **"ஆலமுல் ஜிஸ்மானிய்யாவான"** இவ்வுலகுக்கு ஐந்து வழிகள் இருக்கின்றன. உறக்கத்தில் ஐயறிவுகளின் வழிகள் முழுவதும் அடைப்பட்டுப் போவதால் உள்ளத்திலுள்ள உள்வாசல் திறந்து கொள்கிறது. அப்போது **"ஆலமுல் மலகூத்தில்"** நடைபெறும் மறைவான விஷயங்களெல்லாம் தெரியத் துவங்கும். இதுபோலவே உறக்கமில்லாத நிலையில் புலன்களின் தாக்கத்தை விட்டும் உள்ளத்தை நீக்கி இறைவனுடைய நினைவில் நிலைத்து நிற்கும் **"ஞானிகளுக்கு"** அவர்கள் விழித்திருக்கும் போதே உள்ளத்தின் உள்வாசல் திறந்து **"ஆலமுல் மலகூத்திலுள்ள"** காட்சிகள் அனைத்தும் தெரியும்.

இதில் யார் இம்முறையை பின்பற்றி நடப்பாரோ அவர் எண்ணிலடங்கா புதுமைகளையெல்லாம் கண்டு கொள்வார். உள்ளம் தனக்குரிய நற்பதவியைத் தேடிப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வுலகுக்கு ஒரு வழிப்போக்கனாக வந்திருப்பதால் இவ்வுலகத் தேவைகளுக்காகப் படைக்கப்பட்டுள்ள புலன்கள் ஆலமுல் மலகூத்தை காண முடியாத வண்ணம் உள்ளத்தை தடுத்துக் கொண்டுள்ளன. ஏனெனில் உள்ளம் மலகூத்துடைய உலகின் பக்கம் திரும்பி விடுமாயின் புலன்களுக்கு எவ்வித வேலையும் இல்லாமலாகி இப்பூமியிலுள்ள காட்சிகளனைத்தும் பாழாகி விடும்.

இதனை எதற்கு ஒப்பிடலாமெனில், ஒரு அரசன் தன்னை யாரும் தெரிந்து கொள்ளாதவாறு மாறு வேடமிட்டு தனது அரண்மனையை விட்டும் வெளியேறி வேவு பார்ப்பதற்காக வரும்போது, அவன் ஒரு தாசியின் வீட்டுக்குள் நுழைந்தான். தனது வீட்டுக்கு வந்திருப்பவர் அரசர்தான் என்பதை அவள் தெரிந்து கொண்டு உள்ளம் பூரிக்க, எப்படியாவது அரசனை தனது மாயவலையில் சிக்கவைத்து விட வேண்டுமென எண்ணி அவனை மதுவைக் கொண்டு மயக்கி தனது இச்சையில் மூழ்க வைத்து அவனுக்கு அரண்மனையின் நினைவே வராதவண்ணம் மோசம் செய்யும் வேசியின் செயலுக்கு ஒப்பிடலாம்.

எனவே உள்ளம் எந்தக் காரியத்தின் நிமித்தம் இவ்வுலகுக்கு ஒரு பிரயாணியாக வந்துள்ளதோ அக்காரியத்தில் ஈடுபட்டு முக்தியடைவதே அதனுடைய குறிக்கோளாகும். இதனை ஒவ்வொருவரும் புரிந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

**மனோ இச்சைகளை அகற்றும் வழி**

நமது நடையுடை பாவனைகளை நோட்டமிட்டு அவைகளில் தீயகுணங்கள் ஏதாவது இருப்பதைக் கண்டால் அவைகளோடு போராடி அவற்றை வெல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். எவ்வாறெனில், ஒவ்வொரு மனித தேகக்கூற்றிலும் நான்கு வகை குணங்கள் கலந்துள்ளன. அவை, வானவரின் குணம், மேய்கின்ற மிருகத்தின் குணம், துஷ்டமிருகத்தின் குணம்இ சாத்தானுடைய குணம் என்பதை நாம் முன்பே எடுத்துக் காட்டியுள்ளோம். இவற்றில் மனிதனுக்குரிய எதார்த்தமான குணம் என்பது வானவரின் குணமேயன்றி மற்ற குணங்களல்ல

என்பதையும் நாம் முன்னால் குறிப்பிட்டுள்ளோம். ஆதலால் வானவருடைய குணத்தில் தன்னை நிலைநிறுத்தி மற்ற குணங்களையெல்லாம் வீழ்த்த வேண்டும்.

அதாவது, நம்மிடம் பொய், பொறாமை, மோசடித்தனம், கலகமூட்டல் போன்ற சாத்தானுடைய குணங்கள் இருப்பதை கண்டால் அழகான ஆடைகள் அணிவரை குறைத்து அழுக்கும் கிழிந்ததுமான ஆடைகளை அணிந்து வருவதோடு தம்மிடமுள்ள அழகான ஆடைகளையெல்லாம் ஏழைகளுக்கு தானமாக கொடுத்திட வேண்டும். மேலும் தனது வாழ்க்கையில் ஜனங்களிடம் ரகசியமாகவும் பகிரங்கமாகவும் எப்போதெல்லாம் நாம் கேவலமனைதிருக்கிறோமா அவற்றையெல்லாம் ஜனங்களிடம் பகிரங்கமாக சொல்லிக் காட்ட வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் ஜனங்கள் நம்மை இகழத் துவங்கி விடுவர். இதனால் சாத்தானுடைய குணம் வீழ்ச்சியடைந்து அறிவுக்குக் கட்டுப்படும்.

அடுத்து அதிகமான உணவு, தூக்கம், பானம் போன்ற மேய்கிற மிருகத்தின் குணங்கள் நமக்குள் இருப்பதைக் கண்டால் பல்வேறு வகை பதார்த்தங்களோடு உணவருந்துவதை விட்டு ஒரேயொரு பதார்த்தத்தோடு மட்டும் உணவருந்தி வர வேண்டும். பீடி, வெற்றிலை,புகையிலை போன்றவைகளை உபயோகிப்பவராக இருந்தால் அவைகளையெல்லாம் குறைத்துக் கொள்ள வேண்டும். இதுபோன்றே மெத்தை, கட்டில் போன்றவைகளில் படுத்துறங்கும் பழக்கமிருந்தால் அதற்குப் பதிலாக சாதாரண பாயில் தலையணையின்றி படுத்துறங்க பழகிவர வேண்டும். இவ்வாறு குறைத்தபின்பும் வழிக்கு வராவிட்டால் சோற்றுக்குப் பதிலாக கஞ்சியையும், தேனீருக்குப் பதிலாக வெறும் தண்ணீரையும், பாய், தலையணைக்குப் பதிலாக கட்டாந்தரையிலும் படுத்துறங்கி வருவதோடு போகத்தையும் இயன்றவரை குறைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் மேய்கிற மிருகத்தின் குணம் வீழ்ச்சியடைந்து அறிவுக்குக் கட்டுப்படும்.

அடுத்து ஜனங்களை துன்புறுத்துவதும், அடிப்பதுமான துஷ்ட மிருகங்களின் குணங்கள் நமக்குள் இருப்பதைக் கண்டால் நாம் தனிாயன ஓரிடத்தை தேர்ந்தெடுத்து நமது தேகத்திற்கு நாமே சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். எவ்வாறெனில், இரவில் படுக்கைக்குப் போனதும், அன்று காலையிலிருந்து இரவு படுக்கைக்கு வரும்வரை நாம் என்னென்ன செய்தோம் என்பதையெல்லாம் நமது மனசாட்சி என்னும் தராசில் தூக்கி வைத்து சீர்தூக்கிப் பார்த்து மார்க்கத்திற்கு புறம்பாக நாம் தவறேதும் செய்துள்ளதாக நமக்குத் தெரியவந்தால் அதற்குப் பரிகாரமாக பிரம்படியை தீர்ப்புச் செய்து நம்மை நாமே அடித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தும் கட்டுப்படாமல் மீண்டும் அது தவறு செய்யுமாயின் முதல்நாள் இரவு அடித்த அடியைவிட அதிகமாக அடிக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் துஷ்ட மிருகங்களின் குணம் வீழ்ச்சியடைந்து அறிவுக்குக் கட்டுப்படும்.

இதற்கு மற்றுமோர் ஆதாரம் யாதெனில், நாம் சிறுவர்களாக இருந்தபோது ஏதேனும் தவறு செய்தால் நமது பெற்றோர் நம்மை அடிப்பார்களென்று பயந்து அதை விட்டும் விலகிக்கொண்டதைப் போலவே, இப்போதும் தவறேதும் செய்தால் பிரம்படிபட நேரிடும் எனப்பயந்து மனம் கட்டுப்படும் என்பதாம். ஏனெனில் தற்போது நன்மை தீமை சம்பந்தமான விஷயங்களில் நம்மை வழிநடத்தி வரும் மனோ இச்சையானது நாம் சிறுவர்களாக இருந்தபோது நம்மை நடத்தி வந்த ஒன்றேயன்றி வேறல்லவாதலால் அப்போது பிரம்படிக்குப் பயந்த மனோ இச்சை இப்போதும் பிரம்படிக்குப் பயந்து கண்டிப்பாக நமக்கு வழிப்படும்

என்பதில் அறவே ஐயமில்லை. ஆதலால் தீயகுணங்களை விட்டு உள்ளத்தை பரிசுத்தப்படுத்தி இறைதரிசனையை பெற்று முக்தி பெற விரம்பும் ஒவ்வொருவரும் இம்முறையை கடைபிடித்து வந்தால் மட்டுமே மனோ இச்சையை வழிக்குக் கொண்டுவர முடியுமேயன்றி வேறு மந்திர தந்திரத்தாலெல்லாம் அறவே முடியாது.

மேலும் மேற்கண்ட முறைகளை ஒவ்வொருவரும் கடைபிடித்து வரவேண்டும் என்பதற்கு மற்றுமோர் ஆதாரம் என்னவெனில், எவ்வாறு அடுத்தவரின் பிள்ளை தவறேதும் செய்தால் அதனால் நமக்கென்ன என்று ஜாடையாக இருந்து விட்டு இதுவே நமது பிள்ளை தவறேதும் செய்தால் உடனே அதை நாம் கண்டித்துத் திருத்த முனைகிறோமோ அதைப்போலவே நம்முடைய உள்ளத்தின் மீது நாம் கவனம் கொண்டு அது தீமையான காரியங்களில் ஈடுபடாவண்ணம் அதை அவ்வப்போது தண்டித்து வர வேண்டும்.

காரணம் நமது பிள்ளை ஒரு தவறைச் செய்தால் அது அவனை மட்டுமே பாதிக்கும். அதேநேரம் நமது உள்ளம் ஒரு தவறைச் செய்தால் அது நம்மையே நரகத்திற்குரியவனாக்கி விடும் என்பதாலே. மேலும் இதுகுறித்து ஆழ்ந்து கவனித்தால் நமது மனம் மார்க்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்குமாயின் அதுவே நமது மறுமைக்குரிய பயணத்தில் நமக்கு உற்ற துணையாக இருக்கும். அவ்வாறின்றி மார்க்கத்திற்குரிய வரம்பை மீறி நடக்குமாயின் அதுதான் நம்மை நரகத்திற்கு இழுத்துச் செல்லும் மிகப்பெரும் துரோகியுமாகும். ஏனெனில்...

حَاسِبُوْا قَبْلَ اَنْ تُحَاسَبُوْا

**“உங்களிடம் கணக்கு கேட்கப்படும் முன் நீங்களே உங்களிடம் கணக்குக் கேட்டுக் கொள்ளுங்கள்“** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

பின்னும் ஒருவன் தான் செய்த தவறை உணர்ந்து அதற்காக மார்க்கத்தின் கட்டளைக்கேற்ப தன்னைத்தானே தண்டித்துக் கொள்வானாயின் அதே தவறுக்காக மீண்டும் ஒருமுறை அவன் தண்டிக்கப்படுவான் எனக் கூற முடியாது. உதாரணமாக, திருடிய ஒருவனது கையை இஸ்லாமிய மார்க்கச் சட்டப்படி வெட்டி விட்டால் அக்குற்றம் அப்போதே அவனை விட்டு அகன்று விடும். அதைப்பற்றி மீண்டும் ஒருமுறை மறுமையில் அவன் விசாரணைக்காக நிறுத்தப்பட மாட்டான். காரணம் கையை வெட்டியது மார்க்கத்துடைய சட்டப்படியே அன்றி மனிதர்களின் இஷ்டப்படியல்ல.

மேற்காணும் நிலையை ஒட்டித்தான் ஹழ்ரத் உமர் பின் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நாற்பது ஒட்டுப்போட்ட சட்டையை அணிகிறவர்களாகவும், ஒரே கறியுடன் உணருந்துகிறவர்களாகவும், இரவு நேரங்களில் தனித்திருந்து, தான் அன்று முழுவதும் செய்த காரியங்களை பற்றி தனது உள்ளத்திடம் கணக்குக் கேட்டு அதில் குற்றமேதும் இருப்பதைக் கண்டால் அதற்காக தனது தேகத்தில் தானே சவுக்கால் அடித்துக் கொள்கிறவர்களாகவும் இருந்தனர். இந்நிலையில் அவர்கள் இவ்வுலகைத் துறந்தபோது தோழர்கள் அவர்களின் பரிசுத்தமான தேகத்தை கழுவுவதற்காக திறந்து பார்த்தபோது, அதில் சவுக்கடிகளின் பல

தழும்புகள் காணப்பட்டதாக அறிவிக்கின்றனர். அவர்கள் அருமை நபியவர்களின் தோழராக இருந்தும் கூட தாம் செய்த தவறுக்காக தம்மை அவர்கள் தண்டிக்காமல் விட்டுவிடவில்லை.

ஏனெனில் முக்தி சாதனமாகிய வெட்டவெளியில் ஐக்கியமடைதல் என்பது அத்தனை எளிதானதோர் காரியமல்ல. இதையெல்லாம் இங்கே நாம் எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், நபித்தோழர்களின் தகுதியை எடுத்துக் காட்ட வேண்டும் என்பதோடு அறிவுள்ளவர் நற்பாக்கியத்தை அடைந்து அவர்களை பின்பற்றி அதன்மூலம் முக்தியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்னும் நோக்கமேயாகும். ஆதலால் இவ்வழியைப் பின்பற்றி நடக்க ஆசைப்படுவோர் மேற்கண்டவாறு தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதோடு அதை எவரும் அறியாவண்ணமும் நடத்தி வரவேண்டும்.

காரணம் மற்றவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் இவரை மாபெரும் வணக்கஸ்தர் எனப் புகழத் துவங்கி விடுவர். அதன் காரணமாக அவருக்குள் புகழாசை என்னும் சாத்தானுடைய குணம் ஏற்பட்டு விடும். அத்துடன் அவ்வாறு தெரிந்து கொள்வோரில் யாராவது மடையர்கள் இருந்தால் அவர்கள் இவரை பைத்தியக்காரர் என்று கூறி கல்லால் அடிக்கவும் துவங்கி விடுவார்கள். இதனால் அவருக்குள் கோபம் என்னும் துஷ்ட மிருகத்தின் குணமும் ஏற்பட்டு விடும். அதே நேரம் இவர் தம்மை பைத்தியக்காரன் எனக் கூறப்படுவதை கேட்டு சகித்துக் கொள்வாராயின் மனோ இச்சையின் பெருமை முற்றிலுமாக அழிந்து அவருக்குள் பொறுமைக்குரிய குணம் ஏற்பட்டு விடும். இதனாலேயே...

وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَقُوْلُ النَّاسُ اِنَّكَ مَجْنُوْنَ

**“மனிதர்கள் உன்னை பைத்தியக்காரனென்று சொல்லும் வரை நீ உனது ரட்சகனை வணங்குவாயாக“.**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். மேலும் அவர்கள் அவ்வாறு சொல்வதை கேட்டு கோபம் அடையாது பொறுமையாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்து...

وَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَاهْجُرْهُمْ هَجْرًا جَمِيْلًا

**“அவர்கள் கூறுவதை சகித்துக் கொள்வீராக. மேலும் அவர்களை அழகான வெறுப்பாக வெறுத்திருப்பீராக“** என்றும்...

وَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ فَاِنَّكَ بِاَعْيُنِنَا

**“நீர் உமது நாயன் விதித்த விதியை பொருந்திக் கொள்வீராக. மேலும் திடனாக நீர் நமது கண்காணிப்பில் இருக்கிறீர்“**

என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். மேலும் இதைப்பற்றி இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல“லாஹ் என்பார் தமது **“கீமியாயெ ஸஆதத்**’ என்னும் நூலில்...

**“இறைவன் அவனுக்குரிய பதவியை தனது சமூகத்தில் தீர்ப்புச் செய்து புதன், செவ்வாய் என்னும் இரு சுறுசுறுப்பான சேவகர்களை சவுக்காலடித்து அவனிடம் அனுப்பி சமூகத்தின் காலாட் சிப்பாய் என்னும் காற்றை கொண்டு அவனுடைய மூளையில் வறட்சியை போட்டு உலக சுகத்தை அவனுக்கு வெறுப்பாக்கி. சலிப்பும் அச்சமுமுள்ள சாட்டையால் அவனை அடித்து தேட்டம் என்னும் நாமத்தை கொண்டு இறைவன் அவனை தனது சமூகத்திற்கு அழைப்பதற்குரிய ஏற்பாட்டை செய்திருப்பதை இவாக்ள் அறிய மாட்டார்கள். இக்கல்வி வாதத்திலும் இல்லை. ஜோதிடத்திலும் இல்லை. இயற்கையிலும் இல்லை. மேலும் இக்கல்வி நபித்துவம் என்னும் ஞான சாகரமென்ற கல்வியிலிருந்து வெளியாகிறது“**

என்பதாம். மேலும் மனோ இச்சைகளை அகற்றுவதற்குரிய சம்பவங்களிலிருந்து ஒரு சம்பவத்தை உங்களில் பார்வைக்கு இப்போது தருகிறோம்...

ஹழ்ரத் பாயஸீத் பிஸ்தாமீ ரஹிமஹுல்லாஹ் என்பாருக்கு முஸக்கீ என்றொரு நண்பர் இருந்தார். அவர் ஒருநாள் ஹழ்ரத் அவர்களை நோக்கி, நான் முப்பது ஆண்டுகளாக இரவில் உறங்காது வணங்கி வருகிறேன். பகல் காலம் முழுவதும் நோன்பு நோற்கிறேன். (அப்படி இருந்தும் உங்களுக்கு வெளிப்படுவதாக) நீங்கள் கூறும் காட்சிகளில் ஒன்றுகூட எனக்கு வெளிப்படவில்லையே என்று கேட்டார். அதுகேட்ட ஹழ்ரத் அவர்கள், நீர் இவ்வாறு முன்னூறு ஆண்டுகள் வணங்கினாலும் அக்காட்சிகளில் ஒன்றுகூட உமக்கு வெளியாகாது என்றார்.

அதைக்கேட்ட அவர், ஏன் அப்படி? என்று கேட்க, அதற்கு ஹழ்ரத் அவர்கள்: உம்மையே நீர் உமக்கு திரையாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர் என்று கூறுனர். அதுகேட்ட அவர், அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்றுகேட்க, ஹழ்ரத் அவர்கள், அதற்குரிய பரிகாரத்தை உம்மால் செய்ய முடியாது எனக் கூறினர். இல்லையில்லை நான் செய்வேன் சொல்லுங்கள் என்று பிடிவாதமாகக் கேட்க, அதற்கு ஹழ்ரத் அவர்கள்: நீர் இப்போதே பார்பரிடம் போய் உமது தலையையும் தாடியையும் மழுங்கச் சிரைத்துக் கொள். இப்போது உடுத்தியுள்ள ஆடையைக் களைந்து விட்டு இடுப்பில் மட்டும் ஒரு துண்டுத் துணியை உடுத்திக் கொள். குதிரைக்குத் தீனி போடும் பையில் அக்ரோட்டை அள்ளியெடுத்து அதை உமது கழுத்தில் மாட்டிக் கொண்டு அப்படியே கடைவீதிக்குச் சென்று கூவிக்கூவி ஓ! பிள்ளைகளே! உங்களில் யார் எனது கன்னத்தில் ஒரு அறை அறைவார்களோ அவர்களுக்கு ஒரு அக்ரோட்டை நான் தருவேன் என்று சொல். அதன்பின் அப்படியே காஸியிடமும் நீதிபதியிடமும் போ என்று சொல்ல, அது கேட்ட அவர் வியப்படைந்து

சுப்ஹானல்லாஹ்! என்னைப் போன்றோருக்கு நீங்கள் இப்படியெல்லாம் சொல்லலாமா? என்று கேட்க, அதற்கு ஹழ்ரத் அவர்கள்: இப்போது நீர் சுப்ஹானல்லாஹ் எனக் கூறியது இறைவனை துதிப்பதற்காக அல்ல. மாறாக உமது கௌரவத்திற்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ என்பதை எண்ணியே அவ்வாறு சொன்னதால நீர் இறைவனுக்கு இணைவைத்து விட்டீரென்று கூறினர். அதைக் கேட்ட அவர், இது என்னால் முடியாது. வேறு பரிகாரம் ஏதேனும் இருந்தால்

இறுதியான பரிகாரம் என்று சொல்ல, அதற்கவர் இது என்னால் முடியாதென மீண்டும் சொல்லவேஇ உம்மால் முடியாதென்று தான் முன்பே நான் சொன்னேனே என்றனர்.

ஹழ்ரத் அவர்கள் அவரிடம் இவ்வாறு சொன்னதற்குக் காரணம் கௌரவத்தையும் பெருமையையும் தேடும் மனிதனை பிடித்துள்ள நோய்க்கு அதுதான் பரிகாரம் என்பதற்காக என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆதலால் மனோ இச்சைகளை ஒடுக்க வேண்டியது அவசியம் என்பதையும், இல்லையேல் நமது செயல்பாடுகளால் ஏற்படும் ஒவ்வொரு குணமும் நமது பட்டோலையில் பதிவாகி நம்முடனேயே இருந்து பின்னர் அவைந மது இறப்பின்போது ஒரு தோற்றமாகத் திரண்டு எந்தக் குணம் மிகைத்திருக்குமோ அந்தத் தோற்றத்தின் மீது நம்மை ஆட்டி வைக்கும் என்பதை நாம் உறுதியாக நம்ப வேண்டும்.

இதற்கு ஆதாரம் என்னவெனில், ஒருவன் உறங்கிக் கொண்டிருக்கும்போதுஇ தான் ஆகாயத்தில் பறப்பதைப் போன்றோ, அல்லது புலி, கரடி, யானை போன்ற மிருகங்களை தனது கரத்தால் வெட்டி வீழ்த்துவதைப் போன்றோ கனவு கண்டான். அதேநேரம் இவன் விழித்தெழுந்தால் இதையெல்லாம் அவனால் செய்ய முடியுமா எனில் அறவே முடியாது அப்படிப்பட்ட இவனுக்கு இச்சக்தி எங்கிருந்து எப்படி ஏற்பட்டதெனில், அப்படிப்பட்ட இவனுக்கு இச்சக்தி எங்கிருந்து எப்படி ஏற்பட்டதெனில், இவன் செய்த நன்மைமகள் ஒவ்வொன்றுக்கும் ஒருசக்தி பிறந்து அது இவனோடு இருந்து கொண்டிருந்தது என்பது இவனுக்குத் தெரியாது.

இந்நிலையில் இவன் உறங்கும்போது தேகத்துடைய உணர்வுகளின் தாக்கத்தை விட்டும் இவன் விலகிக் கொண்டதால் அந்தரங்கத்தில் உறைந்து கிடந்த அச்சக்தி அப்போது தனது வேலையை காட்ட ஆரம்பித்தது. இத்தகைய சக்திகள் எந்தெந்த வகையான காரியங்களை கொண்டு ஏற்படும் எனில், லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவுடைய பாதையில் ஈடுபட்டு உள்ளம் உறுதியடைந்துள்ள நிலையில் ஆகாயத்தில் பறப்பதைப் போலவும்இ குபாடத்தைத விட்டொழித்த நிலையில் யானையை கிழித்தெறிவதைப் போலவும், கோபத்தை விட்டொழித்த நிலையில் புலி கரடி போன்ற துஷ்ட மிருகங்களை வெட்டி வீழ்த்துவதைப் போலவும் காண முடியும்.

இன்னும் ஒருவன் உறங்கிக் கொண்டிருக்கும்போது தான் ஆடு, மாடு, பன்றி போன்றுள்ள மிருகங்களோடு உறவு கொள்வதை போன்றோ, அல்லது மலம் போன்ற பொருட்களை திண்பதைப் போன்றோ கனவு கண்டான். இவன் எத்தனைதான் அசுத்தமானவனாக இருந்தாலும் இவன் விழித்திருக்கும் போது மேற்கண்ட காரியங்களை செயவதற்கு ஒப்புக் கொள்ளவானானனில் ஒருக்காலும் ஒப்புக் கொள்ள மாட்டான். அப்படி ஒப்புக் கொள்ளாத இவனுக்கு கனவில் இக்காரியங்களை செய்ய எப்படி மனம் வந்தது எனில், இவன் செய்த தீமைகள் ஒவ்வொன்றும் ஒரு சக்தியாக மாறி இவனுக்குள் உறைந்து கிடந்தது. இதை இவன் தெரிந்து கொள்ள வில்லை. இனி உறக்க நிலையில் இவனுடைய தேகம் உணர்வுகளின் தாக்கத்தை விட்டும் பிரிந்து விட்டதால் அந்தரங்கத்தில் உறைந்து கிடந்த அச்சக்தி தனது வேலையைக் காட்ட ஆரம்பித்தது. இப்படிப்பட்ட சக்தி எந்தெந்த காரியங்களை கொண்டு ஏற்படும் எனில், சதா விபச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவன், ஆடு, மாடு, பன்றி போன்ற மிருகங்களோடு உறவு கொள்வதைப் போலவும், அடுத்தவரின் பொருளை மோசம் செய்து

அதைக் கொண்டு வாழ்ந்து வருபவனும் வட்டியை புசிப்பவனும் மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட பொருட்களை தின்பவனும் மலம் போன்ற பொருட்களை தின்பதாக கனவில் காண்பர்.

இக்காட்சிகளனைத்தும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தின் போதுதான் எடுத்துக் காட்டப்படுமேயன்றி ஒவ்வொரு காரியத்திற்குரிய பலனையும் உடனுக்குடன் எடுத்துக் காட்டப்பட மாட்டாது. ஆனால் அதேநேரம் மரணமடைந்தால் நிரந்தரமாக அவற்றையெல்லாம் அனுபவிக்க நேர்ந்து விடும். இதுபோன்றே கனவில் ஒரு பெண்ணோடு உறவு கொண்டு அதனால் ஸ்கலிதம் ஏற்பட்டு விடுவதுண்டு. இது பெரும்பாலோனோரின் அனுபவத்தில் காணப்படுவதாகும். இதைப் பற்றி சிலரிடம் கேட்டபோது அதற்கவர்கள், தேகத்திலுள்ள உஷ்ணத்தை கொண்டுதான் அவ்வாறு ஏற்படுகிறது என்பதாகக் கூறினர். ஆனால் இதை நாம் கொஞ்சம் ஆழ்ந்து கவனிப்போமாயின் யாருக்குள் போக இச்சை மிகைத்திருக்குமோ அவர்களுக்கு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படும் என்றும்இ அதேநேரம் யார் போக இச்சையை அடியோடு வெறுத்து ஒதுக்கி விட்டார்களோ அவர்களுக்கு இதுபோன்று ஏற்படாது என்றும் சில அறிவாளர்கள் தீர்க்கமாகக் கூறுகின்றனர்.

இதனாலேயே இவ்வுலக சுகபோகங்களை வெறுத்தொதுக்கி முக்தியடைந்த மகான்கள் மரணமடைந்தால் அவர்களுடைய தேகங்கள் சுத்தமாக இருப்பதாகவும், மற்றவர்கள் மரணமடைந்தால் அவர்களின் தேகத்தில் ஸ்கலிதம் ஏற்பட்டு குளிப்பு விதியாகி விடுகிறதென்றும், இதனாலேயே இறந்தபின் இறந்தோரது தேகத்தை நீரைக் கொண்டு சுத்தம் செய்யுமாறும் மார்க்கம் சட்டமியற்றி உள்ளது.

மேலும் கனவில் வெளியாகும் விஷயங்கள் பலவகைப்படும். சில காரியங்களுக்கு வியாக்கியானம் செய்யும் வகையிலும், சில காரியங்களுக்கு வியாக்கியானமே தேவையின்றி கனவில் எப்படிக் காணுகிறாரோ அப்படியே நிதர்சனமாக நினைவில் நடக்கும் வண்ணமும் காட்டப்படும். ஆதலால் அதற்குரிய கல்வியை பெற்றால் அதனுடைய விளக்கங்களை எல்லாம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

இன்னொரு ஆதாரம் யாதெனில், தூக்கத்திலிருக்கும் போது சிலசமயம் பல்வேறு விஷயங்களை வாய் புலம்புவதுண்டு. அவ்வாறு புலம்புவோர் விழித்தெழுந்த பின் அவரிடம் அதைப் பற்றி கேட்டால் அதற்கவர், தான் அவ்வாறு புலம்பவில்லை என மறுக்கிறார். பின்னர் சாட்சிகளைக் கொண்டு நிரூபிக்கப்பட்டால் அதை கேட்டு அவர் ஆச்சரியப்படுகிறார். அவர் புலம்பியதுஅவருக்கே தெரியாமல் போனதற்குக் காரணமென்ன? என்பதைக் கவனித்தால் தூக்கத்தில் மனித உணர்வுகளெல்லாம் அடங்கி மனிதனுடைய சுய தந்திரமும் மறைந்து போவதால் அந்த உணர்வுகளுக்குள் எப்படிப்பட்ட சக்தி மறைந்திருந்ததோ அது தனது வேலையை செய்ததென்றும், அவ்வாறு செய்யும்போது மனித உணர்வுகள் முழுவதும் மறைந்திருப்பதால் பின்னர் அவன் விழிக்கும்போது தனது சுயதந்திரத்தை கொண்டு உணர்வுடைய நிலைக்கு வந்து விடுவதால், தான் தூக்கத்தில் என்ன புலம்பினோம் என்பதை அவனால் தெரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

மற்றுமோர் ஆதாரம் என்னவெனில், உறக்கத்தில் சிலபோது உறங்குவோனின் மார்பில் ஒரு பெரிய பாறாங்கல்லை வைத்து அழுத்தி அவனை வேதனை செய்வதைப் போல சிலர் கனவில்

காணுகின்றனர். அவ்வாறு வேதனை செய்யப்படும் போது சிலர் உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்வதுமுண்டு. அவர்க்ள விழித்துக் கொண்டாலும் கூட அந்த வேதனையை விட்டும் தப்ப முடியாமல் பயத்தால் உறைந்து போயிருப்பார்கள். அவனுடைய மார்பை அழுத்தும் அப்பொருள் ஒரு திடப்பொருளாக இல்லாதிருந்தாலும் ஒரு திடப்பொருளுக்குரிய பாரத்தை போல அவனை அழுத்தி வேதனை செய்கிறது.

அவ்வாறு அவன் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது அவனுக்குப் பக்கத்தில் சிலர் பேசிக் கொண்டிருப்பதை அவன் தெரிந்து கொண்டாலும் அவர்களை அவன் தன்னுடைய உதவிக்காக அழைக்கவோ அல்லது தன்மீதுள்ள பாரத்தை தள்ளிவிடவோ சக்தியற்றுக் கிடக்கிறான். பின்னர் அப்பாரம் தானாக அவனை விட்டு விலகும்வரை அந்த வேதனையை அவன் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறான். இதை சிலர் அமுக்குப் பிசாசு என்பதாகக் கூறுகின்றனர். வேறுசிலர் இதை அனுபவரீதியாகப் பார்த்திருக்கவும் கூடும்.

எது எப்படி இருப்பினும் இதனுடைய ரகசியமென்ன? இது எங்கிருந்து வந்தது? பின்னர் எப்படி மறைந்து போனது? ஏன் வந்தது? ஏன் மறைந்தது? என்னும் விபரங்களையெல்லாம் நாம் யோசித்துப் பார்த்தால் நமது தீய நடத்தைகளின் சக்திதான் அவ்வாறு உருப் பெற்று நமக்குள் மறைந்திருந்தது. பின்னர் நம்மை அறியாமலேயே நமக்குள் மறைந்திருந்த அச்சக்தி திடீரென வெளிப்பட்டு நம்மை எச்சரிக்கை செய்து விட்டு அதன்பின் நமக்குள்ளேயே மறைந்து கொண்டதென்றும், நாம் ஏகத்துவத்திற்குரிய கலிமாவில் பூரணமடையாவிடில் இறப்பின் போதும் அதற்குப் பின்னும் அது நம்மை வேதனை செய்து கொண்டே இருக்கும் என்றும் தெரியவருகிறது.

நமது தேகமும் உணர்வும் அறிவும் ஆரோக்கியமாக உள்ள இவ்வுலகின் ஜீவியத்திற்குரிய காலத்திலேயே இப்படிப்பட்ட வேதனைகளை விட்டெல்லாம் தப்பித்துக் கொள்ள முடியாத நாம்இ உணர்வும் அவைகளுக்குரிய தத்துவங்களும் உரியப்படும் வேளையாகிய இறப்புக்குரிய நேரத்திலும் அதற்குப் பிறகும் அதை விட்டும் எவ்வாறு தப்பமுடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். மேலும் இவைகளெல்லாம் மனித செயல்பாடுகளை கொண்டு ஏற்படும் பலாபலன்கள் என்பதை அறிந்து கொள்வதற்குரிய ஓர் வழியாகவே நமக்குத் தெரிகிறது.

சுருங்கக் கூறின், மேற் கூறப்பட்டவைகளை போலவே மனித செயல்களுக்குத் தக்கவாறு நன்மை, தீமைக்குரிய சக்திகள் அந்தந்த குணாதிசியங்களுடைய தோற்றங்களில் நம்மை ஆட்டி வைக்கும் என்பதில் நமக்கு அறவே சந்தேகமில்லை. ஆதலால் இதைப் பற்றிய விஷயங்கள் முழுவதையும் விளக்க முடியாது. இருப்பினும் இயன்றவரை நாம் உங்களுக்காக எடுத்துக் காட்டினோம்.

ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் விழித்திருக்கும் போது அனுபவிக்கும் இன்பமோ அல்லது துன்பமோ எதுவாக இருந்தாலும் அவன் உறக்கத்திற்கு சென்று விட்டால் அவைகளெல்லாம் அவனை விட்டும் அகன்று விடுகின்றன. அது எவ்வாறெனில்இ செல்வச்செழிப்பில் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒருவன் உறக்க நிலைக்கு சென்றுவிட்டால் திருடர்கள் வந்து அவன் சேர்த்து வைத்துள்ள செல்வத்தை சூரையாடிக் கொண்டு போவதை அவனால் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் அதேநேரம் அவன் எங்காவது ஓரிடத்தில் சுகத்தையோ

அல்லது துக்கத்தையோ அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறான். பின்னர் விழித்தெழுந்து நாஸூத்துடைய உலகமென்னும் உணர்வுடைய நிலைக்கு வந்துவிட்டால் என் செல்வமெங்கே? என் பிள்ளைகள் எங்கே? எனத் தேடத் துவங்குகிறான்.

இவ்வாறே வறுமையில் பீடிக்கப்பட்டுள்ள ஒருவன் உறங்கும் போது அவனும் ஏதாவதொரு சுகத்தையோ அல்லது துக்கத்தையோ அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறான். பின்னர் விழித்தெழுந்து உணர்வுடைய நிலைக்கு வந்துவிட்டால் தனது வறுமை நிலையை அனுபவிக்கிறான். இதனால் உறக்கத்திலேயே ஒவ்வொரு மனிதனுடைய உலக சம்பந்தமான இன்பமும் துன்பமும் அவனை விட்டும் அகற்றப்பட்டு விடுகின்றன என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. இவ்வாறே நமது இறப்புக்குப் பின் இவ்வுலகப் பொருட்களும், உற்றாரும், உறவினரும் நம்மை விட்டும் எந்தவொரு சொந்தமும் இல்லாமலாகி துண்டிக்கப்பட்டு போய்விடுவார்கள் என்பதில் என்ன சந்தேகமிருக்க முடியும்? இதனை ஒருவர் ஆழ்ந்து கவனிப்பாராயின் அவருக்கு நற்புத்தி போதிக்க இதுவே போதிய ஆதாரமாகும் என்போம். இதனாலேயே...

إِنَّمَا يَتَقَبَّلُ اللهُ مِنَ الْمُتَّقِيْنَ

**“இறைவன் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்வதெல்லாம் பயபக்தியாளர்களில் நின்றுமே“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இதில் பயபக்தி என்பதன் கருத்து, நம்மை காப்பாற்றிக் கொள்வதற்காக உள்ளம் இறைவனை நினைப்பதில் பயபக்தியோடு பாடுபடுவதேயாகும். எனவே மனோ இச்சைகளை ஒழிப்பதற்கு மேற்காணும் முறைகளை கவனித்து அதுபோன்று நடந்து வருவதே சரியான வழியாகும்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, நாம் நமது புலன்களுடைய இச்சைகளின் மீது அதிகமான பிரியம் வைத்திருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். இது மாபொரும் தவறாகும். ஏனெனில், ஒரு அரசன் தனது அரண்மனையில் தனக்கு முன்னால் நடனமாடும் பெண்களை பார்த்துக் கொண்டும், சங்கீதம் இசைக்கப்படுவதை கேட்டுக் கொண்டும், மணமான வாசனைகளை முகர்ந்து கொண்டும், தனது தேகத்தை பல கன்னிப் பெண்கள் தொட்டுத் தழுவுவதை அனுபவித்துக் கொண்டும் இருக்கும்போது திடீரென அவனுக்கு தூக்கம் வந்துவிட்டால் உடனே தான் அனுபவித்துக் கொண்டுள்ள உணர்வுகளுடைய தாக்கத்தை கொண்டுள்ள அத்தனை சுகங்களையும் வேண்டாமென ஒதுக்கித் தள்ளிவிட்டு படுக்கையில் போய் படுத்துறங்கி விடுகிறான். உறக்கத்தில் இப்போது அவன் புலன்களுடைய உணர்வுகளின் தாக்கம் எதுவுமே இல்லாத நிலைக்குப் போய்விட்டான்.

மேலும் அவன் உறங்கப் போகுமுன் இந்த நிலைக்குத்தான் தான் போகப் போகிறோம் என்பதை அவன் தெரிந்துதான் வைத்திருக்கிறான். எனவே எதார்த்தத்தை கவனிப்போமாயின் உணர்வுகளால் கிடைக்கும் சுகத்தை அனுபவிப்பதை கவனிப்போமாயின் உணர்வுகளால் கிடைக்கும் சுகத்தை அனுபவிப்பதை விட அவற்றை இழப்பதையே ஒவ்வொரு மனித ஆன்மாவும் விரும்புவதாகத் தெரிகிறது. இதற்கு காரணமென்ன என்பதை சிந்தித்துப் பார்த்தால்

மனிதனில் ரூஹே இன்ஸானி என்பது ஆதாரப் பொருளாக இருப்பதாலும் உணர்வுகள் அதற்கு ஆதேயப் பொருளாக இருப்பதாலும் ஆதாரப் பொருளாகிய எஜமான் தனது அசல் இருப்பிடத்தை நோக்கிச் சென்று தனக்குரிய சுகத்தை அனுபவிக்க வேண்டுமென விரும்பும்போது தனது அடிமைகளான ஆதேயப் பெர்ருட்களின் - அதாவது உணர்வுகளைக் கொண்டு இதுவரை தான் அனுபவித்து வந்த சுகங்களையெல்லாம் இப்போது அது அற்பமாகக் கண்டு அவைகளை விட்டும் தனது முகத்தை திருப்பிக் கொண்டது எனத் தெரியவருவதால்...

இவ்விஷயத்தை ஒவ்வொருவரும் உற்றுணர்ந்து தனது அந்தரங்கமாகிய ரூஹே இன்ஸானியின் இயற்கை சுபாவமானது உணர்வுகளால் ஏற்படும் சுகங்களை அனுபவிப்பதை விட அவைகளை முற்றிலும் இழந்து அதற்கு அப்பாலுள்ள சுகத்தைதத்தான் அது பிரியப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் இதனை உறுதிப்படுத்தும் வகையில், ஒவ்வொரு மனிதனும் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தால் உடனே எழுந்திருப்பதற்கு மனமின்றி சிறிது நேரம் தாமதித்து அதன் பிறகேஇ அதுவும் மனமில்லாமலேயே எழுந்து இவ்வுலகக் காரியங்களில் ஈடுபடுகிறான்.

இதனை நாம் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் இறைவன் ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தேகத்தை படைத்து அதில் தனது ஹகீகத்தாகிய ரூஹுல் குத்ஸ் என்னும் ஆன்மாவை நுழையுமாறு கட்டளையிட்டபோது அது அந்த தேகத்திற்குள் நுழைய சிறிது தயங்கிற்று எனக் கூறப்படுவதற்குரிய கருத்து என்ன என்பதை அறிவுடையோர் அறிந்து கொள்வர். இதனாலேயே...

وَجَعَلْنَا نَوْمَكُمْ سُبَاتًا

**“உங்களின் உறக்கத்தை சுகத்திற்குரியதாக (நாம்) ஆக்கியுள்ளோம்“** என்பதாக இறைவன் அவனது வேதத்தில் கூறுகிறான்.

**மனிதத் தோற்றத்தின் மர்மம்**

هَلْ اَتٰى عَلَى الْاِنْسَانِ حِيْنٌ مِّنَ الدَّهْرِ لَمْ يَكُنْ شَيْـًٔا مَّذْكُوْرًا اِنَّا خَلَقْنَا الْاِنْسَانَ مِنْ نُّطْفَةٍ اَمْشَاجٍ نَّبْتَلِيْهِ

فَجَعَلْنٰهُ سَمِيْعًا بَصِيْرًا

**“திடனாக மனிதன் மீது ஒருகாலம் வந்து விட்டது. அதில் அவன் (முன்பு) கூறப்பட்டதைப் போல ஒரு பொருளாக இருக்கவில்லை. நிச்சயமாக நாம் மனிதனை கலங்கலான இந்திரியத்தை கொண்டு படைத்தோம். பின்னர் அவனை நாம் புரட்டிக் கொண்டே வந்து அதன் பின் அவன் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் ஆக்கினோம்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இந்த வசனத்தில் மனிதர்களாகிய நமது முந்தைய நிலையை பற்றியும், பின்னர் இறைவன் மனது பேரருளைக் கொண்டு நமக்கொரு அழகான தேகத்தையும், புலன்களையும், தத்துவத்தையும், அறிவையும் கொடுத்துள்ளதைப்

பற்றியும் விளக்கிக் கூறுகிறான். இதனை நாம் உற்றுணர்ந்து அவனது அளவற்ற கருணைக்கு நன்றி செலுத்தி அவனுக்கு வழிப்பட்டு நடக்காது வரம்பு கடந்த அநியாயக்காரர்களாக இருக்கிறோம். மேலும் இறைவன் ஹதீஸே குத்ஸியில்...

اَلْاِنْسَانُ سِرِّيْ وَاَنَا سِرُّهٗ

**“மனிதன் எனது இரகசியமாகவும் நான் அவனுடைய ரகசியமாகவும் இருக்கிறேன்“**

எனக் கூறியிருப்பதையும் தீர்க்க ஆராய்ந்து நமது பூர்வீகத்தை நாம் நோட்டமிட்டு பார்ப்போமாயின் நாம் “**வெட்டவெளி**“ என்னும் “**தாத்து முத்லக்காக**“ இருந்து பின்னர் “**அறிவு**“ என்னும் ஜோதியாகி“ “**ரூஹுல் குத்ஸ்**“ (பரிசுத்த ஆன்மா) என்னும் பெயர் பெற்று அதன்பின் “**பரமாணுக்(சர்வ தத்துவங்)களாகி**“ அதன்பின் “**உஷ்ணம், சதுப்பு, குளிர்ச்சி, வறட்சி** என்னும் தன்மைகளாக மாறி, அதன்பின் “**தாது வர்க்கம், தாவர வர்க்கம், நீர்வாழ் வர்க்கம், ஊர்வன வர்க்கம், பறவை இனம், மிருக வர்க்கம்**“ போன்ற தரத்திற்கு இறங்கி அதன்பின் “தாய், தந்தையின் உணவாக மாறி அவர்களுக்குள் சென்று, பின்னர் அவ்வுணவுகளின் “**சத்துக்களாக**“ மாறி “**உதிரமாகி**“ அதன்பின் தந்தையின் “**நாட்டமாக**“ உருப்பெற்று “**இஷ்காகி**“ (பூரண எழுச்சி) அதன்பின் அந்த இஷ்க் பொங்கியெழுந்து ஒருதுளி “**நீராகி**“, நுத்பா என்னும் பெயரைக் கொண்டு “**நுக்தா**“(புள்ளி) என்னும் தோற்றத்தில் மறைந்து, “**மத்**“ என்னும் வாகனத்தில் ஏறி “**ஷத்**“ என்னும் வாசல் வழியாக தாயின் கர்ப்பத்தில் வந்துதரித்து, பின்னர் தாயின் “**ஜோதியில்**“ கலந்து “**ரூஹானி**“ என்னும் தத்துவம் உண்டாகி, கர்ப்பத்தில் தரித்த பிண்டத்திற்கும் நமக்கும் “தொப்புள் கொடி“என்னும் ஒரு தந்திக்குழாய் ஏற்பட்டு, அதன் வழியாக நமது ரூஹானி என்னும் தத்துவத்திற்கு நம்முடைய பிளான் “**போட்டோ**“வாக எடுத்துக் காட்டப்பட்டு, “**அலிப்**“ முதல் “**யே**“ வரையுள்ள இருபத்தொன்பது அட்சரங்களின் கோலங்களாக உச்சி முதல் பாதம் வரையுள்ள அந்தரங்க வெளிரங்க உறுப்புக்களெல்லாம் சித்தரிக்கப்பட்டு பின்னர், “**விதி, மதி, இன்பம், துன்பம், இரணம், மரணம்**“ போன்ற அம்சங்களனைத்தும் பதிவு செய்யப்பட்டு....

280வது நாள் இந்த இந்த தேகமென்னும் கப்பலில் சவாரியாகி, “**ஃபுஅத்**“ என்றும், “**மூலக்குகை**“ என்றும் சொல்லப்படும் இடத்தில் “**உஜூத்தன்பு**“ என்னும் நமது இரகசியம் பதிவு செய்யப்பட்டு, “**குர்ஸி**“ என்றும் “**ஆகாய மண்டல மூளை**“ என்றும் சொல்லப்படும் ஸ்தலம் நமது ஜோதியின் அருள்விளையும் மண்டலமாகி, “**அர்ஷ்**“ என்றும் “**கல்பு**“ என்றும் “**தாமரைக்காய்**“ என்றும் சொல்லப்படும் நமது ஜோதி தஜல்லியாத்திற்குரிய பிரசன்ன மண்டலமாகி, நாம் இப்பூவுலகை நோக்கி ஆட்சி செய்ய நாடும்போது திறந்து கொள்ள கூடியதும், இதை விட்டும் அகன்று மற்ற உலகங்களை நோக்கிச் செல்ல விரும்பும்போது மூடிக் கொள்ளக் கூடியதுமான “**கண் இமை**“ என்னும் விசித்திரமான கதவுகளை கொண்ட நேத்திர மண்டலமாகிய “**ஆகாயம், நெருப்பு, காற்று, நீர், மண்**“ என்ற பௌதீகங்களின் நிறங்களாகி “**நீலம், கருப்பு, பச்சை, சிவப்பு, வெள்ளை**“ எனனும் பஞ்சவர்ணத் தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள “**காபகௌஸைனி**“ என்னும் சிம்மாசனத்தில் ஒரு புள்ளியாகப் பீடம் கொண்டு, “**அலஸ்து பிரப்பிகும்**“ (நான் உங்களின் இரட்சகன் அல்லவா?) என்ற கேள்வியையும், “**காலூ பலா**“ (ஆம். நீ எங்களின் இரட்சகன்தான்) என்ற பதிலையும் தந்து, நம்மையே நமக்கு வேற்றுமையாக கற்பனை செய்து

கொண்டு பின்னர் "பனிக்குடம்" எனும் மடையை உடைத்து தேகமென்னும் கப்பலை பிரணாயமாக்கி, நீர்த்தாரையான ஆற்றின் வழியாக ஓடி வந்து "ஃபர்ஜ்" என்னும் துறைமுகத்தில் தலையை நீட்டி இப்பூமண்டலத்தை நோக்கி வந்து கீழே விழுந்து இவ்வுலக விவகாரங்கள் எதுவுமே தெரியாமல் கீச்கீச் என்று கத்திக் கொண்டு கிடந்ததும், பின்னர் ஒரு பெயர் சூட்டப்பட்டு தாயின் மார்பை சுவைத்து கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து இப்போது அடிமையென்னும் பெயரில் மாய்கையில் சிக்கித் தவிப்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நம்மை நாம் நோட்டமிட்டு, நமது பூர்வீகமாகிய துவக்கமும், முடிவுமற்ற வெட்டவெளி என்னும் தாத்து முத்தலக்கிலிருந்து மகாகாரணம், காரணம், சூட்சுமம் மற்றும் ஸ்தூல திரேகத்திற்குரிய உலகம்வரை இறங்கி வந்து மனிதன் என்னும் பெயரை பெற்றுக் கொண்ட வரலாற்றை அறிவதற்குத்தான் மஃரிபா என்று சொல்லப்படும். இதனால்தான்....

اَوَّلُ الدِّيْنِ مَعْرِفَةُ اللهِ

**"மார்க்கத்தில் முதன்மையானது இறைவனை அறிவதாகும்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இதன்கருத்து, மனிதன் தான் யார்? தனது பூர்வீகம் என்ன? என்பதற்குரிய வரலாற்றை அறியவேண்டும் என்பதாம். இன்னும் இதைப் பற்றி தக்கலை பீர் முஹம்மது அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**வானத்தில் மேகம்பொழிய - இந்த**

**வையகத் தானிய மெங்கும் நெளிய**

**ஊனினான் மாதா பிதாவும் - அவ**

**னுதிரமே நாதமா யோசை முழங்கி**

**ஆணோடு பெண்ணு மிணங்கி – வந்த**

**வாசையி னவனொளி வாசந் துலங்கித்**

**தானத்தில் வந்து தரித்தே – உருத்**

**தானெடுத் தானையான் கண்டு கொண்டேனே!**

என்றும்...

**எப்படி யுலகத்தி லிப்படி யுருவானோம் சிங்கி – அது**

**அப்பன்றன் நட்புக்கு ஒப்பிய தாயாலே சிங்கா!**

என்றும் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும்..

**“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்“**

என்னும் மூதோரின் வாக்கையும் நாம் கவனித்தால் பெற்றோரின் படித்தரமென்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

**மனிதன் இறக்காதிருக்க வழியுண்டு**

மனித வர்க்கத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் மிக மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் மனிதன் இறக்காதிருக்க வழியுண்டு என்பதாம். அது எவ்வாறெனில்...

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللهِ اَمْوَاتًا بَلْ اَحْيَاءٌ

**“இறைப்பாதையில் வெட்டப்பட்ட (வேற்றுமை என்பதை நீக்கிய)வர்களை நீங்கள் இறந்தவர்கள் என்று சொல்லாதீர்கள். எனினும் அவர்கள் உயிரோடுதான் இருக்கின்றனர்“.**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறியிருப்பதால் மனிதன் இறக்காதிருக்க வழியுண்டு என்பது இவ்வசனத்தின் வாயிலாகத் தெரியவருகிறது. இந்நிலையில் அவ்வாறு இறப்பை விட்டும் தப்பித்துக் கொள்வதற்குரிய வழி யாதெனில், அதைப் பற்றி அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

مُوْتُوْا قَبْلَ اَنْ تَمُوْتُوْا

**“இறக்குமுன் நீங்கள் இறந்து விடுங்கள்“**

எனக் கூறியுள்ளவாறு வெளிப்படையான மரணம் வந்து நம்மை பிடிக்கும் முன் அந்தரங்கமான **“மௌத்துல் அக்பர்“** என்பதை நாம் அனுபவித்துக் கொள்ள வேண்டும். அதாவது, மனோ இச்சைகளை ஒழிக்கும் வழி என்னும் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருப்பதை தெளிவாகத் தெரிந்து உணர்வுகளின் இச்சைகளை அடக்கி, ஒரு காமிலான ஷெய்கிடததில் பைஅத்துப் பெற்று, அவர்களின் கட்டளைக்கேற்ப **“முஷாஹதா, முறாகபா“** போன்றவைகளில் ஈடுபட்டு **“ஃபனா ஃபிஷ்ஷைகு, ஃபனாஃபிர்ரஸூல், ஃபனாஃபில்லாஹ்“** என்னும் தகுதியை பெற்று “தாத்து முத்லக்காகிய வெட்டவெளியில்“ ஐக்கியமடைவதாம்.

இவ்வழிகளை பின்பற்றி நடந்ததாலேயே முக்தியடைந்த வலிமார்களெல்லாம் மனிதர்களின் வெளிப்பார்வைக்கு மட்டும் தாங்கள் இறந்து போய் விட்டதாக அவர்களுக்கு காட்டி விட்டு அந்தரங்கத்தில் உயிருடனேயே இருந்து வருகின்றனர். இதனால்தான்...

اَلَا اِنَّ اَوْلِيَاءَ اللهِ لَا يَمُوْتُوْنَ بَلْ يَنْتَقِلُوْنَ مِنْ دَارٍ اِلٰى دَارٍ

**"இறைவனுடைய நேசர்கள் மரணிப்பதில்லை. இருப்பினும் ஒரு இல்லத்திலிருந்து இன்னொரு இல்லத்திற்கு மாறி விடுகின்றனர்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், நாஸூத்துடைய உலகமென்னும் இந்த தேகத்திலிருந்து பயணப்பட்டு ஆலமுல் மலகூத் என்னும் சூட்சும தேகத்தையும், ஆலமுல் பர்ஸக் உதாரண தேகத்தையும் கடந்து **மகா காரணம்** என்றும் **லா மகான்** என்றும் கூறப்படும் துவக்கமும் முடிவுமற்ற தனது பூர்வீகமாகிய எதாஸ்தானமான வெட்டவெளியில் அவர்கள் ஐக்கியமடைந்துள்ளனர் என்பதாம்.

மேலும் நபிமார்கள் விஷயத்திலும் வலிமார்கள் விஷயத்திலும் **"கியாமத்"** என்பதையும், **"கேள்வி கணக்கு"** என்பதையும் நாம் மறைக்க வேண்டியுள்ளது. ஏனெனில் ம.ஃரிபாவுடைய அறிவைப் பெறாத பாமரர்கள் இதனுடைய கருத்தை அறிந்தால் திகைத்துப் போய் விடுவார்கள். இருப்பினும் அறிவாளர்களின் கவனத்திற்காக சில சைக்கினையை மட்டும் உங்கள் பார்வைக்கு தருகிறோம்...

கியாமத் என்பதும் கேள்வி கணக்கு என்பதும் இறந்தோருக்குத்தானேயன்றி உயிரோடு இருப்பவர்களுக்கு அல்ல என்பதையும், வேற்றுமை என்னும் மனிதப் பண்பானது இறைவனில் ஐக்கியமடைந்து விட்டபின் கேள்வி கணக்குக்கு வழி எங்கே இருக்கிறது? என்பதை நல்லறிவைப் பெற்றோர் திண்ணமாகத் தெரிந்து கொள்வர். இதனால்தான்...

أَلَا إِنَّ أَوْلِيَاءَ اللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

**"உஷார் இறைவனுடைய நேசர்கள் அஞ்சவோ கவலைப்படவோ மாட்டார்கள்"**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். மேலும் இறைநேசர்களுக்கு கேள்வி கணக்கு உண்டெனில், அவர்கள் பயத்தை விட்டோ, சலிப்பை விட்டோ நீங்கியிருக்க முடியாது. ஆனால் வேதத்தில் இறைவன் அவர்களுக்கு அவ்விரண்டுமே இல்லையெனக் கூறுவதால் இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

விஷயம் இவ்வாறு இருப்பதால் இதை உற்றுணர்ந்து இறப்பை விட்டும் தப்பித்துக் கொள்ளும் வழியை அறிந்து அதில் முயற்சி செய்து வெற்றி பெறுவதற்குப் பதிலாக ஆடு மாடுகளைப் போல செத்துப் போவதை விட மிகப்பெரும் கைச்சேதம் வேறென்னவாக இருக்க முடியும்.? கஞ்சத்தனம் படைத்த செல்வந்தர் கூட இறப்பெனும் வலையை வீசி தம்மை பிடிப்பதற்காக இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் என்னும் வானவர் வந்துவிட்டதாக அறிவாராயீன், அந்நேரத்தில் அவர் தமது சொத்துக்கள் முழுவதையும் உங்களுக்கு இனாமாகத் தந்து விடுகிறேன். என்னை விட்டு விடுங்கள் என்று கெஞ்சுவார்.

ஆதலால் மேற் கூறப்பட்ட விஷயங்களைளெல்லாம் ஒவ்வொருவரும் தீர்க்கமாக யோசித்து இவ்வுலகப் பற்றை விட்டும் நீங்கி நித்தியானந்த வாழ்க்கையாகிய வெட்ட வெளியில் ஐக்கியமடைய முயல வேண்டும்.

**வேற்றுமையை நீக்கி ஏகத்துவத்தை ஏற்றல்**

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَاٰمِنُوْا بِرَسُوْلِهٖ يُؤْتِكُمْ كِفْلَيْنِ

**“விசுவாசிகளே! நீங்கள் இறைவனுக்கு அஞ்சி அவனது ரஸூலை (தூதரை) விசுவாசம் கொள்ளுங்கள். இறைவன் உங்களுக்கு இருமடங்கு கூலியைத் தருவான்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இவ்வசனத்தின் கருத்து, இறைதூதரை முன்னர் விசுவாசம் கொண்டது அவர்களின் அந்தரங்கம் என்ன என்பதை விளங்கி விசுவாசித்த விசுவாசமல்ல என்பதால், இறைவனை அஞ்சி அவனுடைய கட்டளைக்கு வழிப்பட்டு எவ்வாறு முஹம்மத் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் வெளிரங்கத்தையும் அந்தரங்கத்தையும் அறிந்து விசுவாசம் கொள்ள வேண்டுமோ அவ்வாறு வேற்றுமையை நீக்கி ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்திற்கேற்ப விசுவாசம் கொள்ள வேண்டும்.

அவ்வாறு விசுவாசம் கொள்வோமாயின் நாம் இறைவனை அவனது தன்மயம் மற்றும் குணாதிசியங்களின் தரப்பை கொண்டு அறிந்து விசுவாசம் கொண்டவர்களாகி விடுவோம். விஷயம் இவ்வாறு இருப்பதாலேயே விசுவாசிகளே என்பதாக இறைவன் நம்மை அழைத்தாலும், நாம் மீண்டும் விசுவாசம் கொள்ள வேண்டுமென கட்டளையிடுகிறான். மேலும் வேதத்தில் இறைவன்...

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ

**“விசுவாசிகளே! நீங்கள் இறைவனையும் இறைத்தூதரையும் விசுவாசம் கொள்ளுங்கள்“**

என்றும் கூறுகிறான். இந்த வசனத்திலும் இறைவன் நம்மை விசுவாசிகளே! என அழைத்ததில் நாம் விசுவாசம் கொண்டுள்ளோம் என்றாகும்போது, மீண்டும் இறைவனையும் அவனது தூதரையும் நாம் விசுவாசிக்க வேண்டுமெனக் கூறுவதற்குக் காரணம், முதலில் விசுவாசிகளே என அழைத்ததில் அந்த விசுவாசம் ஏகத்துவத்திற்குரிய விசுவாசமல்லவாதலால் இறைவனையும் அவனது தூதரையும் தஷ்பீஹுடைய முறையை (ரூப அம்சத்தை)க் கொண்டும் தன்ஸீஹுடைய முறையை (அரூப அம்சத்தை)க் கொண்டும் இறைவனை அறிய வேண்டிய முறைப்படி அறிந்து வேற்றுமையை நீக்கி ஒன்றுபடுத்துதல் என்னும் விசுவாசம் கொள்ள வேண்டுமெனத் தெரிய வருகிறது.

அஃது எவ்வாறெனில் நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் இஸ்லாமிய மார்க்கம் சம்பந்தமான கல்விகள் நமக்கு போதிக்கப்பட்டபோது நம்முடைய அறிவு அப்போது எந்த அளவுக்கு விளங்கும் தன்மையுடையதாக இருந்ததோ அந்த அளவுக்கே நமக்கு பெற்றோர்களைக் கொண்டோ அல்லது ஆசிரியர்களைக் கொண்டோ கற்பிக்கப்பட்ட விசுவாசம் எதார்த்தத்தில் வேற்றுமைக்குரிய விசுவாசமாகத்தான் இருந்ததேயன்றி, இறைவனையும் அவனது தூதரையும் அவர்களின் தன்மயம் மற்றும் குணாதிசயங்களின் தரப்பில் ஒன்றுபடுத்தி அறிந்து கொள்ளும் ஏகத்துவத்திற்குரிய விசுவாசமாக இல்லை. அதன்பின் நாம் வாலிபப் பருவத்தை அடைந்த போது நம்மீது இஸ்லாத்தின் பர்ளான கடமைகள் அனைத்தும் விதியாக,

இறைவனையும் அவனது தூதரையும் எவ்வாறு விளங்கி விசுவாசம் கொள்ள வேண்டுமோ அவ்வாறு அறிந்து விசுவாசம் கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டது. இதனை நமக்கு உணர்த்திக் காட்டும் வண்ணம் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

**மாதா பிதாவும் வருத்தி வருத்தி வைத்த**

**போதனையை பார்க்கிற் பிழைகா னிராமயமே!**

எனக் கூறுகின்றனர். இக்கவிதையின் கருத்தென்னவெனில், மெய்ஞானப் பொக்கிஷமாகிய ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை உணர்ந்த போது, நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது தாயும் தந்தையும் எனக்குக் கற்பித்த கல்வியானது ஹகீகத் என்னும் உள்ளமையை தோலுரித்துக் காட்டும் கல்வியாக இல்லை என்பதாம்.

மேலும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவிலுள்ள விசுவாசத்திற்குரிய கருத்து இதுதான் என்பதை நாம் முறையாக அறிந்து உயர்ந்த பதவிகளையெல்லாம் பெற வேண்டுமென்னும் நோக்கத்தில் ஞானவான்கள்...

اَلْاِيْمَانُ عِبَارَةٌ عَنْ وَجْدَانِ الْحَقِّ اَنَّ الٰهَ تَجَلّٰى بِنَفْسِهٖ مِنْ نَفْسِهٖ اِلٰى نَفْسِهٖ فِيْ نَفْسِهٖ عَلٰى نَفْسِهٖ وَرَاءَ نَفْسِهٖ

“**விசுவாசம் என்பது இறைவன் தன்னைக் கொண்டு, தன்னிலிருந்து, தன்னளவில், தன்னில், தானே வெளியாகி, தன்னைத்தானே கண்டான் என்னும் மெய்பொருளுடைய அறிவைப் பெறுவதாகும்**“ என்றும், மேலும் இதை “**கமால்தாத்தி**“ என்றும் சொல்லப்படுகிறது. இதன் கருத்து “**தாத்(தன்மயத்)துடைய பூரணத்துவம்**“ என்பமாகும். அதாவது...

اِنَّ اللّٰهَ لَغَنِيٌّ عَنِ الْعَالَمِيْنَ

**“இறைவன் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்“**

என்பதாகும். மேலும் இதில் அகிலம் என்பதற்கு “**வேற்றுமை**“ என்பது கருத்தாகும். இன்னும் “**அவன்**“ என்பது யாதெனில், “**அவனல்லாதது எதுவுமேயில்லை**“ என்பதாகும். பின்னும் அவனல்லாதது என்பது “**நீதான்**“ என்பதாகும். இவ்வாறு விசுவாசம் கொள்வதைத்தான் விசுவாசம் என்று சொல்லப்படும். இனி இஸ்லாம் என்பதற்குரிய விளக்கம் என்னவென்றால்,

وَالْمُرَادُ بِالْاِسْلَامِ اِنْقِيَادُ النَّفْسِ بِاَحْكَامِ الرَّبِّ

**“இஸ்லாம் என்பதன் கருத்து இறைக் கட்டளைக்கு உள்ளம் வழிப்படுவதாகும்“**

இதற்கும் ஞானவான்களின் விளக்கம் யாதெனில்...

இறைவன் தனது “**ரஹ்மான்**“ என்னும் நாயகத்தனத்திலிருந்து தோன்றிய பல்வேறு நாமங்களாக வெளிப்பட்டதில், தன்னைத்தானே இறைவன் என்னும் கட்டளையை கொண்டு வெளிப்படுத்திக் கொண்டதற்குப் பெயர்தான் இஸ்லாம் என்று சொல்லப்படும். இது ஐந்து வகைப்படும். முதலாவது....

اَشْهَدُ اَنْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ اَيْ اَنْظُرُ بِعَيْنِيْ شُهُوْدًا اَنْ لَا فِي الْوُجُوْدِ شَيْئٌ اِلَّا اللّٰه

**“தோற்றுவிக்கப்பட்ட சிருஷ்டிப் பொருட்களில் எதுவுமே அவனல்லாதது இல்லையென (தானும் இன்மையாகி அவன்தான் என்பதாக) ஷுஹூதில் எனது (மனக்) கண்ணைக் கொண்டு அவனை கண்டேன்“** என்பதற்கு கலிமா ஷஹாதத் என்று சொல்லப்படும்.

இரண்டாவது தொழுகையாகும். அதாவது...

اَلصَّلٰوةُ نِسْيَانُ مَاسِوَي اللّٰه

**“இறைவனல்லாத (ஒன்று உண்டு என்ப)தை மறந்து விடுவதற்கு தொழுகை என்று சொல்லப்படும்“** அதாவது, உள்ளம் பல்வேறு விஷயங்களில் ஓடி அலைமோதுவதை நினைவென்னும் சக்தியைக் கொண்டு கட்டுப்படுத்தி **“காப கௌஸைனி“** என்னும் புருவத்திற்கு மத்தியில் ஷெய்குடைய கட்டளைக்கேற்ப ஷுஹூதுடைய நிலையில் நிலைப்படுத்தி, தனக்கொரு தனித்தன்மை என்னும் உள்ளமை தோற்றம் (உஜூத்) உண்டு என்னும் வேற்றுமையை விட்டும் நீங்கி இறைவனல்லாதது எதுவுமே இல்லை. சர்வமும் அவன்தான் என்னும் ஏகத்துவத்திற்குரிய நிலையில் நிலைத்து நிற்பதாகும்.

اَلزَّكٰوةُ تَزْكِيَةُ النَّفْسِ

மூன்றாவது ஸகாத். **“நப்ஸை (வேற்றுமையை நீக்கி) சுத்தப்படுத்துவதற்கு ஸகாத் என்று சொல்லப்படும்“**

اَلصَّوْمُ تَرْكُ التَّعَلُّقِ عَنِ التَّعَلُّقِ

நான்காவது நோன்பு. **“தொடர்புகளை விட்டு தொடர்பை நீக்கிக் கொள்வதற்கு நோன்பு என்று சொல்லப்படும்.“** இதற்கு ஞானவான்கள், **“உபூதிய்யத்து, முஹம்மதிய்யத்து“** என்னும் தொடர்பை விட்டு விடுவதற்கு பெயர்தான் நோன்பாகும் எனக் கூறுகின்றனர்.

اَلْحَجُّ النُّهُوْضُ مِنَ الْمَعَادِ اِلَى الْمَبْدَءِ

**“ஆலமுல் இன்சான் என்னும் உலகத்திலிருந்து அஹதிய்யத்து என்னும் உலகம் வரையுள்ள அனைத்தையும் ஒரே தோற்றத்திற்குரிய பொருளாகக் காண்பதற்கு**

**ஹஜ்ஜென்று சொல்லப்படும்"** என்பதாகக் கூறுகின்றனர். ஆதலால் இந்த நுணுக்கங்களையெல்லாம் நாம் அறிந்து வெளிப்படையான வணக்கங்கள் அனைத்தையும் மேற்கண்ட ஏகத்துவக் கருத்துக்கேற்ப செயல்படுத்தி வரவேண்டும். இன்னும்...

لَوْ اَنَّ السَّمٰوَاتِ السَّبْعَ وَعَامِرَهُنَّ غَيْرِيْ وَالْاَرَضِيْنَ السَّبْعَ وَعَامِرَهُنَّ غَيْرِيْ فِيْ كَفَّةٍ وَلَا اِلٰهَ اِلَّا اللّٰهُ فِيْ كَفَّةٍ

لَمَالَتْ بِهِنَّ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ

**'என்னையன்றி உள்ள ஏழு வானமும் அதிலுள்ளவைகளையும் இன்னும் என்னைத் தவிரவுள்ள ஏழு பூமியும் அதிலுள்ளவைகளையும் ஒரு தட்டிலும், லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்கப்பட்டால் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவுள்ள தட்டு கனத்து தாழ்ந்து விடும்'**

என்பதாக இறைவன் ஹதீதே குத்ஸியில் கூறியிருப்பதன் முழு கருத்தையும் நாம் ஆய்ந்தறிய வேண்டும். எவ்வாறெனில், அதிலுள்ளவைகளும், இறைவனுக்கு வேறானவை என நீ எண்ணிக் கொண்டுள்ள உனது வேற்றுமை என்னும் ஷிர்க்கானது, லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான கருத்தை ஆய்ந்து பார்க்க, சர்வமும் ஒரே உள்ளமை பொருளுடைய தோற்றம்தான் என்பதை தெரிந்து கொண்ட போது வீழ்ச்சியடைந்தது என்பதே. மேலும் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது தோழர்களை நோக்கி....

جَدِّدُوْا اِيْمَانَكُمْ قَالُوْا يَا رَسُوْلَ اللّٰهِ كَيْفَ نُجَدِّدُ اِيْمَانَنَا قَالَ اَكْثِرُوْا مِنْ قَوْلِ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ

**'உங்களுடைய விசுவாசத்தை புதுப்பித்துக்** கொள்ளுங்கள் **என்று சொல்ல, அதற்கு தோழர்கள்: யாரஸூலல்லாஹ்! எங்களின் விசுவாசத்தை எவ்வாறு புதுப்பித்துக் கொள்வது? என்று கேட்க, அதற்கு நபியவர்கள்: லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவை அதிகப்படுத்துங்கள் என்று கூறினர்.'**

இந்த நபிமொழியின் கருத்து, கலிமாவை அதிகமாக ஓதிவருதல் என்றும் சொல்லலாம். இதுதான் இந்த நபிமொழியின் கருத்தென்று இருந்தால் விசுவாசத்தை புதுப்பித்துக் கொள்ளுங்கள் என்னும் வாக்கியம் வந்திருக்காது. ஆதலால் விசுவாசத்தை புதுப்பித்துக் கொள்ளுதல் என்பதன் கருத்தானது, இறைவனையும் அவனது தூதராகிய என்னையும் வௌ;வேறு என்பதாக நீங்கள் எண்ணிக் கொண்டுள்ள அந்த வேற்றுமையை விட்டும் நீங்கி ஏகத்துவத்தை கொண்டு ஒன்றுபடுத்தி சர்வமும் ஒரே உள்ளமைப் பொருளுக்குரிய தோற்றம்தான் என நம்பிக்கை கொண்டு உங்களுடைய விசுவாசத்தை புதுப்பித்துக் கொள்ளுங்கள் என்பதாம்.

மேலும் எங்களின் விசுவாசத்தை எவ்வாறு புதுப்பித்துக் கொள்வது என தோழர்கள் கேட்டபோது, அதற்கு நபியவர்கள்: லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவுடைய

உண்மையான கருத்து உள்ளமைக்குரிய தோற்றம் என்பது ஒன்றுதான் என்பதை ஆதாரப்படுத்துவதால் அந்த ஒரே உள்ளமைக்குரிய பெருள்தான் தனது நாமரூபங்களை கொண்டு பல்வேறு பெயர்களாகவும் தோற்றங்களாகவும் வெளிப்பட்டு பல்வேறு வகையாகத் தோற்றமளிக்கிறது என்பதை புரிந்து உங்களுடைய விசுவாசத்தை நீங்கள்; புதுப்பித்துக் கொள்ளுங்கள் எனக் கூறினர்.

**தௌபாவும் சாதனையும்**

இதுவரை நாம் மேலே கூறியவையனைத்தும் வேதம் மற்றும் நபிமொழிகளின் ஆதாரங்களை கொண்டு லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்தை அறிந்து நமது விசுவாச்தை நாம் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும் என்பது நமக்குத் தெரியவருவதால், நாம் இவ்வுலகில் தோன்றிய நாள்முதல் இதுவரை நமது தேக உறுப்புகளாலும், உள்ளத்தாலும் இரவுபகலாக தெரிந்தோ அல்லது தெரியாமலோ, வெளிப்படையாகவோ அல்லது அந்தரங்கமாகவோ செய்த பாவங்களனைத்தையும் குறித்து வெட்கப்பட்டு பாவ மன்னிப்புக் கோரி தெய்வ நீரோடை என்னும் கண்ணீரால் திரும்பத் திரும்ப உள்ளத்தை கழுவிச் சுத்தப்படுத்தி வேற்றுமை என்னும் ஷிர்க்கை விட்டும் நீங்கி 'கஃபூருர் ரஹீமா'கிய இறைவனிடம் அழுது மன்றாடி அவன் நமது பாவங்களையெல்லாம் மன்னிப்பான் என ஆதரவு வைக்க வேண்டும். ஏனெனில்...

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا اِنَّهٗ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ

**'நபியே! கூறும். தமது ஆன்மாக்களின் மீது** (பாவத்தை கொண்டு) **வரம்பு கடந்த எனது அடியார்களே! இறைவனுடைய ரஹ்மத்தாகிய ரட்ஷிப்பை விட்டும் நீங்கள் நிராசையாகி விட வேண்டாம். நிச்சயமாக இறைவன் உங்களுடைய பாவங்களை மன்னிப்பான். மேலும் அவன் பாவங்களை மன்னிப்போனாகவும் கிருபையாளனாகவும் இருக்கிறான்'** என்றும்...

اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ

**'இன்னும் நிச்சயமாக இறைவன் பாவமன்னிப்புக் கோருவோரை நேசிப்பவனாகவும் அசுத்தங்களை விட்டு நீங்கி சுத்தமானவர்களையும் நேசிப்பான்'**

என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இந்நிலையில் பாவமன்னிப்பு என்பதற்குரிய சரியான கருத்து யாதெனில், ஷிர்க் என்னும் வேற்றுமையை விட்டு நீங்குவதேயாகும். இதனாலேயே ஹழ்ரத் ஸெய்யித் முஹம்மத் தானீ ஷுத்தாரி ரஹிமஹுல்லாஹ் என்பார்....

**'பாவமன்னிப்பு என்பதன் கருத்து, ' மஜாஸியான தோற்றங்கள் என்னும் சகல படைப்புக்களையும் இறைவனுடைய வாஜிபுல் உஜூதில் மறைத்தல்'**

என்பதாகும் எனக் கூறுகின்றனர். ஆதலால் ஷிர்க் என்னும் வேற்றுமையை அகற்றி இனிமேல் பாவங்கள் செய்வதில்லை என நமக்குள்ளேயே நாம் சத்தியம் செய்து அதற்கேற்ப வாழ்ந்து வர வேண்டும். மேலும் எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும் நமது சத்தியத்தை முறிக்காமல் வைராக்கியத்தோடு இருப்போமாயின் நமது இறுதி முடிவு சந்தேகத்திற்கு அறவே இடமின்றி வெற்றிதான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மேலும் இதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**வஞ்சவேல் கொண்டு மார்பி லெறியினும்**

**விஞ்ச வேதழல் மீட்டி யெரிக்கினும்**

**நஞ்சி னூரழ னாக நலியினும்**

**அஞ்சி டாதவ ரானந்த மாவரே!**

என்று கூறுகின்றனர்.

**பார்வையின் பரம ரகசியம்**

பார்வையை குறித்து இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லர் என்பார் தமது **'கீமியாயெ ஸஆதத்'** என்னும் நூலில், பார்க்கும் கண்கள் தோற்றத்தில் சிறிதாகக் காணப்பட்ட போதிலும் அதைக் குறித்த அறிவு பெரும் பெரும் நூல்களைக் கொண்டு கூட விபரிக்கப்பட முடியாத ஒன்றாகுமெனக் கூறுகின்றனர். மேலும் இதைப் பற்றி ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**நேத்திரம் ரண்டினும் நேரே யிலங்கிய**

**நீடொளி போன்றது தேடரி தாகிய**

**காத்திர முள்ளது யாவும் பொதிந்தது**

**கையிலுங் காலிலும் எட்டப் படாததோர்!**

என்றும்...

**கண்ணே மணியேயென் கண்ணிறைந்த காரணமே**

**விண்ணே மெய்ஞ் ஞானவெளியே நிராமயமே!**

என்றும்...

**எண்ணரிய தாக விருந்தாடுஞ் சூத்திரமோ**

**கண்ணிலொளி பாய்ந்ததுவோ கண்ணே ரஹ்மானே!**

என்றும்...

**விண்ணுக்குள் வெளியிருன் மாற்றி – அதில்**

**வேதாந்த மூல விளக்கினை யேற்றிக்**

**கண்ணுக்குள் மணியாகத் தோற்றி – வருங்**

**காரண மான கடவுளைப் போற்றி!**

என்றும், திருப்பத்தூர் ஹழ்ரத் பீர் முஹம்மது சாகிப் அவர்கள் தமது 'ஜோதி மணி விளக்கம்' என்னும் நூலில்...

**முத்தி யிருக்கின்ற மூல் குகையை நீ**

**மூடித் திறக்கு முகப்பு வழி**

**பத்தி யுடனிருந்து பார்த்திடப் பார்த்திட**

**பாதை தெரியுமே கண்மணியே!**

என்றும், ஹழ்ரத் காட்டானை ஷைகு வலியுல்லாஹ் அவர்கள்...

**பார்க்க மணியின் பார்வை யசையாமல்**

**நோக்க வெளியாமே நுன்சூட்சம் - யார்க்கும்**

**பொதுவென்று பேசுகின்ற மெய்ஞானம்**

**அதுவறிந்தோர் ஐயமற்றோராம்**

என்றும்...

**கற்பித்தார் கற்பித்தார் கஷ்கஷாவின் பிரமாணம்**

**கற்பித்தா ரேயெனக்கு கற்பித்தார் - மெய்ப்பித்தார்**

**கைசீட்டுத் தந்தாரிக் கசினியெல் லாம்ஆள**

**மைச்சீட்டுக் குள்ளே மயம்!**

என்றும் தக்கலை பீர் முஹம்மத் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**ஐனென்ற கலிமாவை அறிந்துளத்திற் பொதிந்து**

**ஆசைநடு விருபுறமும் காபகௌ ஸைனி**

**காபகௌ ஸைனியதின் கருவையறி யாமல்**

**காலமெல்லாம் கருத்தறியாப் போகுதே அல்லாஹு**

**கருவுக்குள்ளே கருவான கருவையறி யாமல்**

**காலமெல்லாம் வீண்கால மாகுதே அல்லாஹு**

**உருவுக்குள்ளே யருவமில்லா துருவையறி யாமல்**

**உலகமெல்லாங் கருத்தறியாப் போகுதே அல்லாஹு**

என்றும்…

**தன்னை யறியுந் தலமெது சொல்லடி சிங்கி – அது**

**கண்ணிடை யான நடுநிலை யல்லவோ சிங்கா!**

என்றும் கூறியுள்ளனர். மேற்காணும் கவிதைகள் ஒவ்வொன்றும் பார்வையின் ரகசியத்தை நமக்கு விளக்கிக் காட்டுவதாக அமைந்திருப்பதை நாம் ஆய்ந்தறிய வேண்டும். மேலும் பார்வை என்பது நமது தேக உறுப்புக்களில் ஒன்றாக இருந்தாலும் அதனுடைய தரமோ மிகப்பெரும் மகத்துவத்திற்குரிய ஒன்றாக அமைந்திருப்பதை நாம் பார்க்கலாம். இன்னும் இப்பூவுலகின் சகல தோற்றங்களின் அழகும் அதற்காகத்தான் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் தெரிந்து கொள்ளலாம். அதாவது, நமது தேகத்திலுள்ள கண்ணைத் தவிர மற்ற உறுப்புக்களெல்லாம் தமக்குரிய காரியங்களில் மட்டுமே தமது கவனத்தை செலுத்தி வரும்போது கண்கள் மட்டும் அந்த அவயங்களின் ஒவ்வொரு காரியத்திலும் தனது விருப்பத்தையோ அல்லது வெறுப்பையோ காட்டி வருகிறது.

உதாரணமாக, இசை என்பது செவிக்குரிய ஒன்றாக இருப்பதால் அந்த இசையைப் பற்றி வாயோ மூக்கோ கொஞ்சமும் இலட்சியம் செய்வதில்லை. ஆனால் கண் மட்டும் அந்த இசையை இசைப்பவனை காண வேண்டுமென விரும்புகிறது. இதுபோலவே வாசனையை முகர்வதற்குரிய வேலை மூக்குக்கு உரியதாக இருப்பதால் அதைப் பற்றி வாயோ காதோ கொஞ்சமும் லட்சியம் செய்வதில்லை. ஆனால் கண் மட்டும் எதிலிருந்து அந்த வாசனை வருகிறதோ அதைப் பார்க்க வேண்டுமென ஆசைப்படுகிறது. இதுபோன்றே பதார்த்தங்களின் சுவையை அனுபவிப்பதற்குரிய வேலை நாவுக்குரியதாக இருப்பதால் அதைப்பற்றி காதோ மூக்கோ கொஞ்சமும் லட்சியம் செய்வதில்லை. ஆனால் கண் மட்டும் எது அச்சுவையை தனக்குள் கொண்டுள்ளது என்பதை பார்க்க விரும்புகிறது.

மேலும் மெய், செவி, வாய், மூக்கு போன்ற உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தனர் அனுபவிக்கும் இன்பத்தை கண் பார்த்து அனுமதித்தால் மட்டுமே அவைகளை ஏற்றுக் கொள்கிறது. கண் பார்க்கவில்லையெனில் அவற்றை அவைகள் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகின்றன.

உதாரணமாக ஒருவனுடைய கண்ணை கட்டிவிட்டு அவனுடைய வாயில் ஒரு பதார்த்தத்தை திணித்து சாப்பிடு என்று சொன்னால் கண் பார்த்தால் மட்டுமே சாப்பிடுவேன். இல்லையேல் சாப்பிட மாட்டேன் எனக் கூறி வாய் அதை துப்பி விடுகிறது. இவ்வாறே ஒருவனுடைய கண்ணை மூடிக் கொண்டு அவனது மூக்கில் ஒரு பொருளை வைத்து இதை முகர்ந்து பாரென்று சொன்னால் கண் பார்த்தால் மட்டுமே முகருவேன். இல்லையென்றால் முகர மாட்டேனென மூக்கு மறுத்து விடுகிறது.

இதுபோன்றே ஒரு தெருவின் வழியாக சென்று கொண்டிருக்கும்போது எங்கிருந்தோ ஒரு ராகம் வந்து செவியில் விழுந்தால் அவன் சிறிது நின்று பாடுவது யாராக இருக்குமென்று யோசித்து அவனைப் பார்க்க வேண்டுமென கண்கள் விரும்புகிறது. ஒருவேளை பாடுபவனை காண முடியாமல் போய்விட்டால் செவியும் அந்த இசையை ரசிப்பதிலிருந்து தனது கவனத்தை திருப்பிக் கொண்டு வெறுப்பைக் காட்டத் துவங்கி விடுகிறது.

இவ்வாறே ஒருவனுடைய மனைவி தனது கணவனுடைய கண்களை ஒரு துணியால் கட்டிவிட்டு அவனோடு உறவுகொள்ள முயன்றால் கண் பார்த்தால் மட்டுமே அதில் ஈடுபடுவேன். இல்லாவிட்டால் வேண்டாமென்று விலகிக் கொள்கிறது. இதுபோன்றே ஒருவனுடைய கண்களை கட்டிவிட்டு அவனது கையில் ஏதாவதொரு பொருளைக் கொடுத்து இதைப் பிடி என்று சொன்னால், கண் பார்க்காத வரை நான் அதை பிடிக்க மாட்டேன் என கை நிராகரித்து விடுகிறது. இன்னும் ஒருவனுடைய கண்களை கட்டிவிட்டு அவனை நடந்து செல்லென்று சொன்னால் கண் பார்க்காமல் நான் நடக்க மாட்டேனென கால்கள் மறுத்து விடுகின்றன.

இவ்வாறே மனிதர்களில் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் வாக்குறுதியை நிறைவேற்றும் விஷயத்தில் கூட கண்களைத்தான் முக்கிய சாட்சியாக குறிக்கப்பட்டுகிறதே அன்றி மற்ற உறுப்புக்களை குறிப்பதில்லை. இன்னும் ஒருவர் இன்னொருவரது முகத்தைப் பார்த்து பேசும்போது, குறிப்பாக காதைப் பார்த்தோ அல்லது மூக்கைப் பார்த்தோ அல்லது வாயைப் பார்த்தோ பேசினால் பேச்சு சாதாரணமாகவே நடைபெறுகிறது. அதேநேரம் கண்ணைப் பார்த்துப்பேசினால் இருவருக்குள்ளும் ஒருவிதமான உணர்;ச்சி ஏற்படுகிறது. இதுவே பார்வையின் ரகசியத்தை அறிந்து கொண்டுள்ள ஒரு ஞானிக்கு முன்னால் நின்று ஒருவன் ஒரு பொய்யை சொல்வானாயின் அப்போது அவனது முகக்குறி வித்தியாசப்பட்டு அவனுடைய திருட்டுத்தனத்தை காட்டிக் கொடுக்கிறது. இவ்வாறே ஒருவர் இன்னொருவரை புகழும்போது, கண்ணே மணியே என்றுதான் புகழுகின்றனரேயன்றி காதே மூக்கே என யாரும் புகழுவதில்லை. மேலும் தேகத்தில் எத்தனையோ அவயங்கள் இருக்க அவைகளையெல்லாம் விட்டுவிட்டு கண்ணை மட்டும் எல்லா ஞானிகளும் கவிஞர்களும் வர்ணித்தும் புகழ்ந்தும் பேசுகிறார்களே தவிர மற்ற அவயங்களை பற்றி அந்த அளவுக்கு அவர்கள் ஏன் பேசவில்லை என்பதையும் நாம் யோசிக்க வேண்டும்.

இதேபோல முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திவ்வியத் திருநாமத்தை கேட்க நேரும்போது கையிலுள்ள பெருவிரல் நகத்தைப் பார்த்து ஸலவாத்துச் சொல்வதிலும் ஒரு ரகசியம் இருக்கத்தான் செய்கிறது. அவ்வாறு நகத்தை பார்க்கும்போது நகத்தில் பார்க்க வேண்டுமேயன்றி நகத்தை பார்ப்பதல்ல என்பதை புரிந்து பார்க்க வேண்டும்.

காரணம் கண்ணாடியை பார்க்கும் ஒருவன் அதில் தெரிகிற தனது உருவத்தை தான் பார்க்கிறானேயன்றி கண்ணாடியை பார்ப்பதில்லை. அதேபோல நகத்தைப் பார்க்கும்போது அதில் தெரியும் தெய்வீக ரகசியம் என்னவென்பதை உற்றுணர்ந்து பார்க்க வேண்டும். இந்த ஸ்தானத்தில் 'நேத்திரம் இரண்டினும் நேரே இலங்கிய' என்னும் வாக்கியத்தையும் நாம் நோட்டமிட்டு பார்க்க வேண்டும்.

இவ்வாறே தொழுகையிலும் மற்ற தியானங்களிலும் இரு விழிகளின் பார்வையையும் ஒன்றாகச் சேர்த்து காப கௌஸைனி என்னும் புருவத்திற்கு மத்தியில் பார்ப்பதிலும் ஒரு ரகசியம் இருக்கிறது. இவ்வாறே ஒருவன் தனது இரு கண்களையும் மூடிக் கொண்டால் அவனை பொறுத்தவரை இவ்வையகத்தின் சகல தோற்றங்களும் இல்லாமலாகி விடுகின்றன. பின்னர் கண்களை திறந்தால் இல்லாமல் போன சகல தோற்றங்களும் அவன்முன் தோற்றமாகி அவனுடைய மற்ற உறுப்புக்களனைத்தும் தத்தம் தமது வேலையை செய்யத் துவங்கி விடுகின்றன.

இதுபோலவே ஒருவனுடைய இறப்பின் போது அவனுடைய ஆன்மா அந்த தேகத்திலிருந்து தனது ஆட்சியை அகற்றிக் கொண்டதென்றும், இனிமேல் அது அந்த தேகத்தில் ஆட்சி செய்யாதென்றும் ஜனங்களுக்குத் தெரியவந்தால் அவர்கள் இறந்துபோன அவனுடைய கண்களை கசக்கி மூடி விடுகின்றனர். இது ஒரு அரசன் கொலுமண்டபத்திற்கு வந்துவிட்டால் அங்குள்ள காரியஸ்தர்கள் அனைவரும் அரசனால் ஏவப்படும் கட்டளைகளை செயல்படுத்திக் கொண்டிருப்பதை போலவும், பின்னர், அரசன் தனது ஆசனத்தை விட்டும் எழுந்து சென்றுவிட்டால் கொலுமண்டபத்திலுள்ள வேலையாட்களுக்கு எந்த வேலையும் இல்லாமல் போய்விடுவதை போலவும், அரசன் திரும்பவும் கொலுமண்டபத்திற்கு இனிமேல் நான் வரமாட்டேன் எனக் கூறிவிட்டுப் போய்விட்டால் அங்குள்ள அனைத்து காரியஸ்தர்களும் அந்த இடத்தை விட்டும் வெளியேறி அந்த மண்டபமே பாழாகிப் போய்விடுவதைப் போலுமிருக்கிறது. இதனை நாம் கொஞ்சம் ஆழமாகக் கவனித்தால் இறைவனுக்கு வானவர்கள் வழிப்படுகின்றனர் எனக் கூறப்படுவதற்குரிய ரகசியம் இதுதான் என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். மேலும் இறைவன் தனது வேதத்தில்...

وَمَا يَعْلَمُ جُنُودَ رَبِّكَ إِلَّا هُوَ

**'இன்னும் உமது ரட்சகனுடைய சேனைகளை அவனையன்றி வேறுயாரும் அறிய மாட்டார்கள்'** எனக் கூறியிருப்பது இதைக் குறித்த சைக்கினையே என்பதை அறிவாளர்கள் அறிந்து கொள்வர்.

ஆதலால் மேற்காணும் இவ்விளக்கத்தைக் கொண்டு பார்வையின் பரம ரகசியம் இதுதான் என்பதை நாம்அறிய வேண்டியது நம்மீது கடமை என்பதையும் தெரிந்து கொள்கிறோம். இன்னும் இதைப் பற்றி தக்கலை பீர் முஹம்மத் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**ஆதிபெரி யோனே ரப்புல் ஆலமீனே யாதி**

**யஹதுநிலை ஸமதாக ஆலநிறைந் தோனே**

**அஹதிய்யத்தி லுஹதிய்யத்தும் வாஹிதிய்யத்து மாகி**

**அருபவுரு பத்துள்ளே தானல்லவோ தாத்து**

**தாத்தல்லவோ பாத்தினது ழாஹிருஸி பாத்து**

**ழாஹிருக்குள் பாத்தினான ரகசியத்தின் பொருளே**

**பாத்தில்லோ தோத்திரமாய் நேத்திரத்தின் கலிமா**

**ஆத்துமத்திற் கதுதானே ஐனென்ற கலிமா!**

எனக்கூறி இருப்பதன் கருத்தையும் நாம் விளங்க வேண்டும். மேலும் இதன் சிறப்பை இதற்குமேல் விபரித்தல் ஒழுக்கத்திற்கு மாற்றமாகுமாதலால் இதை இத்தோடு நிறுத்திக் கொள்கிறோம். அதேநேரம் இதுகுறித்த இன்னும் அதிகமான விளக்கத்தைத் தேடுவோர் தத்தம் தமது ஷைகுமார்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்க.

**கலிமாவை அறிதல் கடமை**

اَوَّلُ مَا يُحَاسَبُ بِهِ الْعَبْدُ يَوْمَ الْقِيَامَةِ بَعْدَ التَّوْحِيْدِ اَلصَّلٰوةُ

**'இறுதி நாளன்று அடியானிடம் ஏகத்துவத்திற்குப் பின் கேட்கப்படும் கேள்வியில் முதன்மையானது தொழுகையாகும்'**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். விஷயம் இவ்வாறிருக்க நம்மிலே சிலர், ஏகத்துவத்திற்குரிய அறிவு என்பது ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமே உரியதென்றும் மற்றவர்கள் அதைப் பற்றி யோசிக்கக் கூடாதென்றும் நினைத்துக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட தவறான எண்ணத்தில் இவர்கள் சிக்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம்...

هَلَاكُ اُمَّتِيْ عَلٰى يَدِ اثْنَيْنِ شَيْخٍ جَاهِلٍ وَعَالِمٍ فَاسِقٍ

**'எனது சமூகத்தார் இரு நபர்களின் கரத்தை பிடிப்பதைக் கொண்டு வீழ்ச்சியடைவர். அவர்கள் முட்டாளான ஷைகும், பாவிகளான ஆலிம்களுமாகும்'**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதால், சில வழிகேடர்கள் உண்மையான உலமாக்களை போன்றும், ஷைகுமார்களைப் போன்றும் தம்மை ஆலிம்கள் என்றும், ஷைகுமார்கள் என்றும் கூறிக் கொண்டு பாமரர்களிடம் தங்களின் குருட்டுத்தனமான கொள்கையை சரியான கொள்கையென போதித்திருப்பதே இதற்குக் காரணமாகும். இப்படிப்பட்டவர்களிடம் எவரேனும் ஏகத்துவத்திற்குரிய அறிவைக் குறித்துக் கேட்டால் அதைப் பற்றிய அறிவில்லாத அவர்கள் தமது போலித்தனம் எங்கே வெளிப்பட்டு விடுமோ என்றெண்ணி, அதைப் பற்றியா கேட்கிறீர்கள். அது மாபெரும் விஷயமாயிற்றே. அதை எல்லோராலும் விளங்கிக்கொள்ள முடியாது.

அது மகான்களுக்கு மட்டுமே உரியதாகும். ஆதலால் நீங்கள் வெளிப்படையான வணக்கங்களை மட்டும் செய்து கொண்டு என்னைப் போன்றோருக்கு செய்ய வேண்டிய உதவிகளை செய்து

கொண்டிருந்தால் அதுவே உங்களை சுவர்க்கத்திற்குக் கொண்டுபோய் விடும் என்று கூறி எங்கே நாம் மாட்டிக் கொள்வோமோ எனப் பயந்து ஊரை விட்டே ஓடி விடுகின்றனர். இதை உண்மையென நம்பிவிடும் பாமரர்களும் நேர்வழிக்குரிய ஏகத்துவம் சம்பந்தமான அறிவைத் தேடாது வழிகேட்டில் சிக்கிக் கொள்கின்றனர். இதைப் பற்றி அண்ணலெம்பெருங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

مَنْ قَالَ لَا اِلٰهَ اِلَّا اللهُ اَلْفَ مَرَّةٍ بِلَا تَحْقِيْقٍ فَهُوَ كَافِرٌ

**“ஒருவன் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவை உள்ளத்தால் உண்மைப்படுத்தாது ஆயிரம் முறை கூறினாலும் அவன் மறுப்பாளனாகத்தான் இருப்பான்“**

எனக் கூறியிருப்பதை நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனெனில் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமா மார்க்கத்தின் ஐந்து கடமைகளில் முதன்மையான கடமையாக இருப்பதால் அது சரியானால்தான் மற்றவைகளெல்லாம் சரியாகும். அதற்கு மாறாக என்னுடைய பெற்றோர் முஸ்லிம்களாக இருப்பதால் நானும் முஸ்லிமாக இருக்கிறேன் என நாவைக் கொண்டு மட்டும் சொல்லப்படும் சொல் இறைவனுடைய சன்னிதானத்தில் அங்கீகாரத்தை ஒருபோதும் பெறாது.

பாருங்கள்! ஹழ்ரத் நூஹ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மைந்தன் கன்ஆன் என்பான் இறைக்கட்டளைக்கு மாறாக நடந்ததால் இறுதியின் அவன் இறைமறுப்பாளானாகிப் போய் விட்டதாகவும், அதேநேரம் அபூஜஹ்லுடைய மைந்தர் இக்ரிமா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இறைக்கட்டளைக்கு வழிப்பட்டு நடந்ததால் அருமை நபியவர்களின் தோழர்களில் ஒருவராகும் பாக்கியத்தை பெற்றார் என்பதையும் நாம் இவ்விஷயத்தில் நன்கு போதிய ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

**கலிமாவின் ஷர்த்துக்கள்**

லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவில் பூரணமடைவதற்கு நான்கு ஷரத்துக்கள் உள்ளன. அவை முழுவதும் நிறைவானால் தான் கலிமா பூரணமாகும். அதில் முதலாவது ஷரத்து, லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவை நாவால் மொழிவதாகும். இரண்டாவது ஷரத்து, அதனுடைய அர்த்தத்தை விளங்குவதாகும். மூன்றாவது ஷரத்து, அந்த அர்த்தத்தை வேதம் மற்றுமு நபிமொழியின் கருத்துக்கு நேராக ஆய்வு செய்து சந்தேகத்தை அகற்றி உள்ளத்தால் ஒப்புக் கொண்டு சொல்லாலும் செயலாலும் அந்தரங்கத்தாலும் பகிரங்கத்தாலும் அதற்கேற்ப நடந்து வருவதாகும். நான்காவது ஷரத்து, அந்த நடைமுறையில் இறப்புவரை நிலைத்திருப்பதாகும்.

**கேள்வி:** அந்த நடைமுறையில் இறப்புவரை நிலைத்திருக்க வேண்டுமெனக் கூறப்படுவதால் இந்த நான்காவது ஷரத்து நிறைவேறிவிட்டதென்பது இறப்புக்குப் பின்னர்தானே தெரியும்?

**பதில்:** நான்காவது ஷரத்தில் கூறப்பட்டுள்ள இறப்பு என்பதற்குரிய கருத்து **“மௌத்தே இறாதி“** என்றும், **“மௌத்தே தபயி“** என்றும் இரு வகைப்படும். அதாவது...

لَا يَذُوقُونَ فِيهَا الْمَوْتَ إِلَّا الْمَوْتَةَ الْأُولَى

**“அவர்கள் முந்தைய மரணத்தை தவிர இரண்டாவது மரணத்தை அனுபவிக்க மாட்டார்கள்“** என்பதாக இறைவன் வேதத்திலும்...

مُوتُوا قَبْلَ اَنْ تَمُوتُوا

**“நீங்கள் இறக்குமுன் இறந்து விடுங்கள்“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூறுகின்றனர். அதாவது, வெளிரங்கமான மரணம் வந்து உன்னை பிடிக்குமுன் **“மௌத்துல் அக்பர்“** எது என்பதை விளங்கி அதை அனுபவித்துக் கொள்வோமாயின் பிறகு இன்னொரு மரணம் என்பதைக் கொண்டு நாம் இறந்து போகாமல் காலாகாலத்திற்கும் உயிரோடு இருக்கலாம் என்பதாம். இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல் காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**எமனார்விடுதூ தெனும் பாசக் கட்டறுத்தோர்**

**நமனார் தமக்கு நமனா னிராமயமே!**

என்றும், மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**வெளிச்சடம் போலுன் தேகம் வெளியாகி விட்டபின்பு**

**ஒளிவாம் மிஸாலை யுன்ஜடமாய்த்- தழுவியே**

**எப்போதும் வீற்றிருந்தால் னமனா ருனக்குண்டோ**

**அப்போது சாவேதறி!**

என்றும், ஹழ்ரத் நூஹ் லெப்பை வலியுல்லாஹ் அவர்கள்...

**தௌஹீது செய்வோர்க் கஸலாது**

**தானே பேச்சற்று மூச்சுமற்று**

**பவுசரம் பார்வையுங் கேள்வியற்றுப்**

**பகரும் மனமற்று நினைவுமற்று**

**நப்ஸுதனிற் கத்திபோட்டு வெட்டில்**

**நார மதுபோல கூடிக் கொள்ளும்**

**மௌத்தாந் தகுத்திலே யிருந்து கொண்டு**

**மாயுமுன் மாய்ந்தே யிருப்பார்களே!**

என்றும் கூறியுள்ளனர். ஆதலால் நம்மை வெளிரங்கமான மரணம் வந்து பிடிக்குமுன் சிருஷ்டிகர்த்தாவுக்கு சிருஷ்டிவேறு என்னும் வேற்றுமையை மௌத்துல் அக்பதை அனுபவிப்பது கொண்டு நம்மை இன்மையாக்கி நாம் வெட்டவெளியில் ஐக்கியமடைவதே நான்காவது ஷரத்தின் கருத்தாகும். அதனால்தான்...

قَلِيْلُ الْغَلَطِ فِى التَّوْحِيْدِ كُفْرٌ وَكَثِيْرُ الْغَلَطِ فِى الشَّرِيْعَةِ مَعْصِيَةٌ

**“ஏகத்துவத்தில் ஒரு சிறிய தவறு(நேர்ந்தாலு)ம் குப்ராகும். இதுவே ஷரீஅத்தில் அதிகமான பாவம் (ஏற்பட்டாலும்) அது பாவமாக மட்டுமே இருக்கும்“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இந்த நபிமொழியில் ஏகத்துவத்திற்குரிய கலிமாவை விளங்கிக் கொள்வதில் ஒருசிறு தவறு நேர்ந்தாலும் அது இறைமறுப்பாகி விடும் எனக் கூறப்பட்டுள்ளதால் மனிதன் தபயியா(சாதாரணமா)ன மரணத்தை அடையுமுன் ஏகத்துவத்திற்குரிய கலிமாவுடைய நான்கு ஷரத்துகளிலும் பூரணமடைய வேண்டியது அவசியமாகும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**கலிமாவின் அர்த்தமும் கருத்தும்**

“லா இலாஹ இல்லல்லாஹ்“

என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான அர்த்தம் யாதெனில், இலாஹ் என்பதில்லை அல்லாஹ் என்னும் மெய்ப்பொருளை தவிர என்பதாகும். இதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய முறை எவ்வாறெனில், இலாஹ் என்னும் அரபி வாக்கியம் தமிழ் இலக்கணப்படி தெய்வமெனக் கூறப்படுகிறது. இதில் தெய்வமென்னும் வாக்கியம் பல பொருட்களுக்கு வழங்கப்படுகிற ஒரு பொதுப் பெயராகும்.

உதாரணமாக சாமான் என்பது பல பொருட்களுக்கு வழங்கப்படும் ஒரு பொதுப் பெயராகும். இந்த சாமான் என்பதில் மேஜை, நாற்காலி, கட்டில், மெத்தை போன்ற பல பொருட்களும் அடங்கும். அதேநேரம் இவைகளை தனித்தனியாக பிரித்துப் பார்க்கும்போது ஒவ்வொரு பொருளும் அதனதன் தோற்றத்திற்குரிய பெயர்களை கொண்டு அழைக்கப்படுகின்றன. இவ்வாறே ஆபரணம் என்பது ஒரு பொதுப் பெயராகவும் அவைகளின் தோற்றங்களை கவனிக்கும்போது தோடு, மூக்குத்தி, மோதிரம், நெக்லஸ் என பல்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுவதைப் போல.

இந்த உதாரணத்திற்கு ஏற்ப “**இலாஹ்**“ என்பதும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒரு பொதுப் பெயரேயாகும். இதனை **“இலாஹுல் பாத்தில்“ “இலாஹுல் ஹக்கு“ “இலாஹுல் முத்லக்**“ என்ற சொல்லப்படும். இதில் ஒவ்வொரு பிரிவும் இலாஹ் என்னும் பெயருடையதாகவே இருப்பதால் கலிமாவில் இலாஹ் எனக் கூறப்பட்ட வாக்கியம்

இம்மூன்று பிரிவுகளையும் தனக்குள் உள்ளடக்கிக் கொண்டுள்ள ஒரு பொதுப் பெயரேயாகுமென்று சொல்லலாம்.

இனி "**இலாஹூல் பாத்தில்**" என்னும் அரபி வாக்கியத்திற்கு தமிழில் "**பொய்யான தெய்வம்**" என்பது அர்த்தமாகும். அதாவது, இணைவைப்போர்களால் வணங்கப்படுகிற பொன், வெள்ளி, செம்பு, கல், மண், மரம், சூரியன், சந்திரன், நெருப்பு, நீர், மாடு, பருந்து பாம்பு போன்றவைகளாகும். இதில் தாதுவர்க்கம், தாவர வர்க்கம்இ மிருகவர்க்கம், பறவையினம், கிரகங்கள், பூதங்கள் போன்றவையனைத்தும் இணைந்து விட்டன.

அடுத்து "**இலாஹூல் ஹக்**" என்பதற்கு "**உரிமைக்குரிய தெய்வம்**" என்பது அர்த்தமாகும். அதாவது, பெற்றோருக்கு பிள்ளைகள் வழிப்பட வேண்டியதும், கணவனுக்கு மனைவி வழிப்பட வேண்டியதும், எஜமானுக்கு வேலைக்காரன் வழிப்பட வேண்டியதும் உரிமைக்குரிய ஒன்றானதால் இது மனிதனுக்குள்ள பெயராகும்.

இவ்வாறே "**இலாஹூல் முத்லக்**" என்பதற்கு "**சர்வமும் தன்னில் தானாய் அமைந்துள்ள ஒரு பொருள்**" என்பது இதற்குரிய அர்த்தமாகும். அதாவது, கண்டித்தலானவைகளுக்கும் கண்டித்தலல்லாதவைகளுக்கும் உள்ளும், புறமும் முன்னும் பின்னும் இடமும் வலமும் மேலும் கீழும் எந்தப் பொருள் தோற்றப் பொருளாக இருந்து தனக்குத்தானே ஆதாரமாகவும் ஆதேயமாகவும் இருக்கிறதோ அந்த மெய்ப்பொருளாகும்.

எனவே மேற்கண்ட மூன்று இலாஹுகளும் இலாஹ் என்னும் பதத்தை கொண்டதாகவே இருப்பதால் "**கலிமாவில்**" இலாஹ் இல்லை இறைவனைத் தவிர எனக் கூறப்பட்டதற்குரிய கருத்தானது, இலாஹூல் பாத்திலுக்கும் இலாஹூல் ஹக்குக்கும் என தனித்தனியான உள்ளமைக்குரிய தோற்றம் என்பது எதுவுமேயில்லை. மாறாக சர்வமுமாக இருப்பது இலாஹூல் முத்லக் என்னும் இறைவனுடைய தோற்றம் மட்டுமே என்பதாகும்.

**உஜூத் என்பதன் கருத்து**

உஜூத் என்பதன் கருத்து, எது தனது உண்மைக்குத் தானே ஆதாரமோ, எதனுடைய ஆதாரத்தின் மீது சர்வ சிருஷ்டிகளும் இருப்பதாகத் தோன்றுகிறதோ, வெளித்தோற்றத்திலும் எதற்கு வேற்றுமை என்பது அறவே இல்லையோ அதற்கு உஜூதென்று சொல்லப்படும்.

உதாரணமாக, சட்டை என்பது பொய்யான ஒரு பெயராகவும், அதனுடைய உள்ளமையை நோக்க நூல் அதனுடைய உஜூதாக இருப்பதைப் போலவும், இவ்வாறே நூல் என்பது பொய்யான ஒரு பெயராகவும் அதனுடைய உள்ளமையை நோக்க பஞ்சு அதனுடைய உஜூதாக இருப்பதைப் போலவும், பஞ்சு என்பதும் ஒரு பொய்யான பெயராகவும் அதனுடைய உள்ளமையை நோக்க ஒருவகை செடியின் காயே அதனுடைய உஜூதாக இருப்பதை போல என்று சொல்லலாம்.

மற்றுமோர் உதாரணமாகிறது, மோதிரம் என்பது பொய்யான ஒரு பெயராகவும், அதனுடைய உள்ளமையை நோக்க தங்கம் அதனுடைய உஜூதாக இருப்பதைப் போலவும் என்று சொல்லலாம். மற்றோர் உதாரணம், கடல் என்பது பொய்யான ஒரு பெயராகவும் அதனுடைய உள்ளமையை நோக்க தண்ணீர் அதனுடைய உஜூதாகவும் இருப்பதைப் போலவும் என்றும்

சொல்லலாம். ஆக இவ்வாறு ஆய்வு செய்வோமாயின் அனைத்துக்கும் வழங்கப்படுகிற ஒவ்வொரு பெயரும் அவைகளின் தோற்றத்தை மட்டுமே குறிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதையும், இந்தத் தோற்றங்கள் அனைத்தும் மண், தண்ணீர், காற்று, நெருப்பு போன்ற பௌதீகங்களால் ஒருங்கிணைந்துள்ள தன்மைகளாகவே இருக்கின்றன என்பதையும், இப்பௌதீகங்கள் ஒவ்வொன்றும் ஒன்று மற்றொன்றுக்கு அசலாக இருக்கிறது என்பதையும், அதாவது மண்ணுக்கு அசலாக இருப்பது தண்ணீர் என்பதையும், தண்ணீருக்கு அசலாக இருப்பது காற்று என்பதையும், காற்றுக்கு அசலாக இருப்பது நெருப்பு என்பதையும், நெருப்புக்கு அசலாக இருப்பது ஜோதி என்பதையும், ஜோதிக்கு அசலாக இருப்பது ஸிர்ரு என்பதையும், இதில் ஸிர்ரு எனக் கூறப்பட்டது தான் வெட்டவெளி என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு புரிந்து கொள்வதைத்தான் "**சுனன்ஹிமத்**" என்று சொல்லப்படுகிறது.

அதாவது, ஸீன் என்பது "**ஸிர்ரு**". நூன் என்பது "**நூர்**". நூன் என்பது "**நார்**". 'ஹே' என்பது "**ஹவா**". மீம் என்பது "**மா:**". 'தே' என்பது "**துராப்**" என்பதாகும். இதை விளங்க வேண்டிய முறை எவ்வாறெனில், ஸிர்ராகிய வெட்டவெளியிலிருந்து நூரும், நூரிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும் தோன்றின என்பதாம். விஷயம் இவ்வாறிருக்க தோற்றமில்லாத நிலையில் நிறம், குறி, ஒப்புவமை போன்ற தன்மைகளை விட்டெல்லாம் அதீதமாக இருப்பதும், தோற்றத்திற்குரிய நிலையில் பல்வேறு பெயர்களாகவும், உருவங்களாகவும் வெளிப்பட்டிருப்பது அந்த ஒரே மெய்ப் பொருளாகிய உஜூதென்னும் உள்ளமைக்குரிய பொருள்தான் என்பதையும் நாம் கண்டு தெரியும்போதுதான் உண்மையான ஏகத்துவத்திற்குரிய விசுவாசம் என்பது நமது உள்ளத்தில் உறுதி பெறும்.

**ஏகத்துவத்தை குறித்த சில வேதவசனங்கள், நபிமொழிகள்**

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

"**விசுவாசிகளே! இறைவனும் அவனது வானவர்களும் நபியின் மீது ஸலவாத்துச் சொல்கின்றனர். எனவே நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லி ஸலாம் சொல்லும் விதமாக ஸலாமும் சொல்லுங்கள்**"

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இவ்வசனத்தை ஏகத்துவத்திற்குரிய கருத்திற்கேற்ப நாம் யோசித்தபோது துதிப்பதும், துதிக்கப்படுவதும், துதியும் மெய்ப்பொருளாகவே இருப்பதால்தான் இறைவனும் அவனுடைய வானவர்களும் நபியின்மீது ஸலவாத்துச் சொல்கின்றனரெனக் கூறப்பட்டதாக நமக்குத் தெரியவருகிறது. ஏனெனில், அவ்வாறு இல்லாவிடில் ஒரு அடிமையை பல அடிமைகள் ஒன்றுசேர்ந்து துதிப்பதைப் போல அவைகளை சிருஷ்டித்த இறைவனும் தமது அடிமையை அதே வாக்கியத்தைக் கொண்டு துதித்தல் என்பது பொருத்தமாகாது. விஷயம் இவ்வாறு இருப்பதாலேயே நபிகள் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காபிர்கள் மீது மண்ணை எறிந்தபோது அதை சுட்டிக் காட்டும் வண்ணம் இறக்கப்பட்ட வசனத்தில்..

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ اللَّهَ رَمَىٰ

**“(முஹம்மதே) நீர் எறிந்தபோது நீர் எறியவில்லை. எனினும் இறைவன் எறிந்தான்“**

என்றும், நபித்தோழர்கள் பத்ருப் போரில் இறைமறுப்பாளர்களை வெட்டியபோது அதை குறிக்கும் வகையில் இறக்கப்பட்ட வசனத்தில்...

فَلَمْ تَقْتُلُوْهُمْ وَلٰكِنَّ اللّٰهَ قَتَلَهُمْ

**“(நபித் தோழர்களாகிய) நீங்கள் அவர்களை வெட்டவில்லை. எனினும் இறைவன் அவர்களை வெட்டினான்“**

என்றும் இறைவன் அவனது வேதத்தில் கூறுகிறான். மேலும்...

وَلَوْ اَنَا مِنْ غَيْرِ اللّٰهِ وَكُلُّ شَيْءٍ مِنْ غَيْرِيْ

**“நான் இறைவனுக்கு அன்னியமாகி விடுவேனாயின் சகல சிருஷ்டிப் பொருட்களும் இறைவனுக்கு அன்னியமாகிப் போய்விடும்“** என்றும்,...

اَنَا فِيْ وَرَاءِ الْعَرْشِ اَحَدٌ وَفِي السَّمَآءِ اَحْمَدٌ وَفِي الْاَرْضِ مُحَمَّدٌ وَفِي التَّحْتَ الثَّرَاءِ مَحْمُوْدٌ

**“நான் அர்ஷுக்கு கீழே அஹதாகவும், வானத்தில் அஹ்மதாகவும், பூமியில் முஹம்மதாகவும், பாதாளத்தில் மஹ்மூதாகவும் இருக்கிறேன்“** என்றும்...

كُنْتُ نَبِيًّا وَّ آدَمُ بَيْنَ الْمَاءِ وَالطِّيْنِ

**“ஆதம் மண்ணுக்கும் தண்ணீருக்குமிடையில் இருந்தபோதே நான் நபியாக இருந்தேன்“** என்றும்...

اَنَا اَحْمَدٌ بِلَا مِيْمٍ

**“நான் மீம் இல்லாத அஹ்மதாக இருக்கிறேன்“** என்றும்...

اَنَا عَرَبِيٌّ بِلَا عَيْنٍ

**“நான் ஐன் இல்லாத அரபியாக இருக்கிறேன்“** என்றும்....

اَنَا اَبُو الْاَرْوَاحِ وَآدَمُ اَبُو الْبَشَرِ

**“நான் ஆன்மாக்கள் அனைத்துக்கும் தந்தையாகவும் ஆதம் நபி தேகங்கள் அனைத்துக்கும் தந்தையாகவும் இருக்கிறோம்“** என்றும்...

مَنْ رَآنِيْ فَقَدْ رَأَى الْحَقَّ

**“யார் என்னைக் கண்டாரோ அவர் திடனாக ஹக்கைத்தான் கண்டார்“**

என்றும் அண்ணலெங் கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். எனவே மேற்காணும் இந்த நபி மொழிகளை கவனமாக நோட்டமிட்டு நபியவர்களின் மகத்துவம் என்ன என்பதை நாம் உணர்ந்து வேற்றுமையை விட்டும் நீங்கி ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்தில் நிலைத்து நிற்க வேண்டும். மேலும்...

لَوْ كَانَ فِيْهِمَا آلِهَةٌ إِلَّا اللّٰهُ لَفَسَدَتَا

“(வானம் பூமியாகிய அவ்விரண்டிலும்) **இறைவனல்லாத வேறு இலாஹு இருக்குமாயின் அவ்விரண்டும் இந்நேரம் வரை அழிந்து போயிருக்கும்“** என்றும்...

وَإِلٰهُكُمْ إِلٰهٌ وَّاحِدٌ لَا إِلٰهَ إِلَّا هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ

**“உங்களுடைய நாயன் ஒரே நாயன். அவனுடைய உள்ளமையைத் தவிர வேறொரு உஜூத் இல்லை. அவன் இவ்வுலகில் அனைவருக்கும் கிருபை செய்பவனாகவும் மறுமையில் விசுவாசிகளுக்கு மட்டும் கிருபை செய்பவனாகவும் இருக்கிறான்“** என்றும்...

وَهُوَ مَعَكُمْ أَيْنَمَا كُنْتُمْ

**“நீங்கள் எங்கே இருந்தாலும் அவன் உங்களோடு இருக்கிறான்“** என்றும்...

نَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

**“நான் மனிதனில் அவனது பிடரி நரம்பை விட மிகச் சமீபமாக இருக்கிறேன்“** என்றும்...

فَأَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ

**“நீங்கள் எந்தப்பக்கம் திரும்பினாலும் அங்கே இறைவனது திருத்தோற்றம் இருக்கிறது“** என்றும்....

يَدُ اللّٰهِ فَوْقَ أَيْدِيْهِمْ

**“அவர்களின் கைகளுக்கு மேல் இறைவனுடைய கை இருக்கிறது“** என்றும்...

اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا

**“திடனாக சர்வ சக்தியும் இறைவனுக்கே உரியது“** என்றும்....

فَلِلّٰهِ الْمَكْرُ جَمِيْعًا

**“சர்வ மக்கரும் இறைவனுக்கே உரியது“**

என்றும் இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். எனவே மேற்கண்ட வேத வாக்கியங்களை நாம் கவனமாக நோட்டமிட்டு பார்ப்போமாயின் முதல் வசனத்தில், முன்னால் நாம் இலாஹ் என்னும் வாக்கியத்திற்குக் கூறியுள்ள கருத்துப்படி விண்ணிலும் மண்ணிலும் இலாஹுல் பாத்திலாகவும், இலாஹுல் ஹக்காகவும், இலாஹுல் முத்லக்காகவும் இருப்பவைகளில் இறைவனல்லாத அவனுக்கு அன்னியமான வேறு இறைவன் என்பது ஏதேனும் இருக்குமாயின் இதுவரை வானமோ பூமியோ நிலைத்திருக்காது என்றும்,...

இரண்டாவது வசனத்தில், எந்தவொரு படைப்புக்கும் சொந்தமான உள்ளமை தோற்றம் என்பது எதுவுமே இல்லை. மாறாக சர்வ படைப்புகளுக்கும் ஆதாரமாக, ஆதேயமாக இருப்பது இறைவனுடைய உள்ளமைக்குரிய தோற்றம்தான் என்றும்...

மூன்றாவது வசனத்தில், இறைவன் மட்டுமே நிலைத்திருப்பவனாகவும் நாம் என்னும் பொய்யான பொருள் அழியக் கூடியதாகவும் இருப்பதால் நிரந்தரமான மெய்பொருள் இருக்கும் பூரணமான ஸ்தானத்தில் அழிந்து போகும் நாம் என்னும் பொருள் இருப்பதற்கு எவ்வகையிலும் அறவே இடமில்லையாதலால் நாம் என்னும் தோற்றமும் இறைவனுக்குரிய தோற்றமாகத்தான் இருக்கிறதென்றும்...

நான்காவது வசனத்தில், நமது உயிர் நரம்பை விட நமக்கு மிகச்சமீபமாக இருப்பது ரூஹே இன்ஸானியே அன்றி வேறு எதுவும் இல்லையாதலால் ரூஹே இன்சானி என்னும் பெயரும் இறைவனுடைய தோற்றத்திற்குரிய பெயரே என்றும்...

ஐந்தாவது வசனத்தில், நாம் நமது அறிவைக் கொண்டு எதை நோட்டமிட்டாலும் உருவமும் உருவமின்மையும் இறைவனுக்குரிய எதார்த்த நிலையாகவே இருக்கிறதென்றும்...

ஆறாவது வசனத்தில், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அவர்களது தோழர்கள் பைஅத்துச் செய்தபோது இந்த வசனம் இறங்கியதால் நபியவர்களின் சிறப்புக்குரிய அக்கரம் இறைவனுக்குரிய கரமாகவே இருக்கிறதென்றும்....

ஏழாவது வசனத்தில், மனிதன் தனக்கென்று சொந்தமாக ஒரு சக்தி இருப்பதாகக் கூறுவது அபத்தமென்றும், மனிதனிலிருந்து வெளிப்படும் சக்தியனைத்தும் மனிதனுக்குச் சொந்தமாக இருந்தால் அவைகள் அவனுடைய உத்திரவின்றி மறைய முடியாது. மேலும் மனிதன் அச்சக்திகளுக்கு எஜமானாகவும் அவைகள் அவனுக்கு அடிமைகளாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறின்றி காது செவிடாகிப் போவதும், கண்கள் குருடாகிப் போவதும், வாய் ஊமையாகிப் போவதும், கைகால்கள் ஊனமாகிப் போவதும், பைத்தியம் பிடிப்பதுமான இவைகளெல்லாம் மனிதக் கட்டுப்பாட்டில் அச்சக்திகள் இல்லை என்பதையும்....

இவ்வாறே மனிதனில் வெளிப்பட்டுக் கொண்டுள்ள ஜீவியம், அறிவு, நாட்டம், ஆற்றல், பார்வை, கேள்வி, பேச்சு போன்றவையனைத்தும் தனது அசலை நோக்கித் திரும்பி விடுமாயின் மனிதனென்னும் பெயரே மறைந்து போய் விடுவதால் இவ்வேழு சக்திகளுக்கும் ஆதாரமாக இருப்பது இறைவனுடைய உஜூதே என்றும்...

எட்டாவது வசனத்தில், இறைவன் என்றும் படைப்பு என்றும் வித்தியாசப்படுத்தி தோன்றச் செய்து மக்கராகக் காட்சிகளை நடத்தி வருபவனுடைய ரகசியம் இறைவனுக்கு மட்டுமே உரியதாக இருக்கிறதென்றும் நமக்குத் தெரியவருகிறது.

**ஏகத்துவத்தை குறித்த சில ஆதாரங்கள்**

ஏகத்துவத்தை குறித்து எத்தனையோ ஆதாரங்கள் வேதத்திலும் நபிமொழியிலும் கூறப்பட்டிருந்தாலும் நாம் அவைகளையெல்லாம் நோட்டமிட்டுப் பாராது மறதியில் ஆழ்ந்து கிடப்பதால் அதனை வெளிப்படுத்திய ஞானவான்களையும் உதாசீனப்படுத்தி ஏளனமும் செய்து வருகிறோம். ஆம். எது உண்மையான சரீஅத்தாக இருக்கிறதோ அதை ஷிர்க்கென்றும், எது ஷிர்க்காக இருக்கிறதோ அதை ஷரீஅத்தென்றும் நாம் தவறாக விளங்கிக் கொண்டிருக்கிறோம் என்றால் மிகையாகாது. அதனால்தான் ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின்பேரர் இமாம் ஜைனுல் ஆபிதீன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்...

لَرُبَّ جَوْهَرِ عِلْمٍ لَوْ اَبُوْحُ بِهِ لَقِيْلَ اَنْتَ مِمَّنْ يَّعْبُدُ الْوَثَنَا

**“அபூர்வமான அறிவுகள் எத்தனையோ என்னிடம் இருக்கின்றன. அவற்றை நான் வெளிப்படுத்தினால் மக்கள் என்னை விக்ரஹங்களை ஆராதிக்கிறவன் எனக் கூறுவர்“**

என்பதாகக் கூறுகின்றனர். ஆம். ஏகத்துவம் என்பது இறைவனை அவனுக்கு அன்னியமின்றி அவனுடைய தன்மயம் மற்றும் குணாதிசியங்களைக் கொண்டு ஒன்றுபடுத்துவதாகும். எவ்வாறெனில், இறைவனுக்கு அவனது தன்மயத்துடைய தரப்பில் வரையறை, நிறம், குறி, ஒப்புவமை போன்ற எதுவுமே கிடையாது. அதேநேரம் குணாதிசியங்களுடைய தரப்பில் இவையனைத்தும் அவனுக்கு உண்டென அறிந்து **“தன்ஸீஹ் மஷ்லாய்“** அதாவது, எல்லாமே அந்த ஒரே மெய்ப் பொருளாகிய தன்மயமே அன்றி வேறல்ல என ஒன்றுபடுத்துவதே ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் பரிசுத்தமான விசுவாசமாகும். இதனை ஆதாரப்படுத்தும்வண்ணம்...

لَيْسَ كَمِثْلِهٖ شَيْءٌ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

**“இறைவனைப் போன்று ஒரு வஸ்துவும் இல்லை. அவனே கேட்கிறவனாகவும் பார்க்கிறவனாகவும் இருக்கிறான்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இந்த வசனம் தன்ஸீஹ் மஹ்லைச் சேர்ந்த வசனமாக இருப்பதால் இதை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டுமெனில், இறைவனைப் போன்று ஒரு வஸ்துவும் இல்லை. அவனே பார்க்கிறவனாகவும் கேட்கிறவனாகவும் இருக்கிறான் எனக் கூறப்படுவதால் கேள்வியும், பார்வையும் இறைவனுக்கேயன்றி வேறு எந்தப் பொருளுக்கும் இருப்பதற்கு இடமில்லை. அவ்வாறின்றி மற்ற பொருட்களுக்கும் உண்டென வாதிக்கும் நிலை ஏற்பட்டால் அதை அபத்தமென்றுதான் கூறுவோம். இப்படிப்பட்ட வழிகேட்டை விட்டும் இறைவன் நம்மை பாதுகாப்பானாக. இந்நிலையில் மனிதனும் மிருகமும் பறவைகளும் பார்க்கக் கூடியதாகவும் கேட்கக் கூடியதாகவும் இருப்பதற்குரிய ரகசியமென்ன என்பதை நாம் யோசித்துப் பார்த்தபோது அவைகள், தாம் சுயமாகப் பேசுவதற்கோ அல்லது கேட்பதற்கோ எந்தவொரு நிலையும் அவைகளுக்குள் இல்லையென வேதம் மறுப்பதால் ஏகத்துவக் கலிமாவின் கருத்துப்படி இறைவன்தான் தஷ்பீஹுடைய தரப்பில் பல்வேறு நாமரூபங்களை கொண்டு வெளிப்பட்டு ஒவ்வொரு பொருளிலும் தானே கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறானென்றும் அவனுக்கு அன்னியமான எந்தவொரு பொருளும் இல்லை என்பதையும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. மேலும்...

وَهُوَ الْآنَ كَمَا كَانَ عَلَيْهِ

**“இறைவன் முன்பு (தன்னோடு எந்தவொரு பொருளும் இல்லாமல்) எப்படி இருந்தானோ அப்படியே தான் இப்போதும்(தன்னோடு எந்தவொரு பொருளும் இல்லாமல்) இருக்கிறான்“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இந்த நபிமொழியும் தன்ஸீஹ் மஹ்லுடைய கருத்தைத்தான் உறுதிப்படுத்துகிறது. எவ்வாறெனில், முழு உலகமும் அதில் தான் தோன்றியுள்ளவைகளும் படைக்கப்படுவதற்கு முன் இறைவன் தன்னோடு எந்தவொரு பொருளும் இல்லாது தான் தானாக இருந்ததைப் போலவே இப்போதும் இருக்கிறான் எனில், இப்போது பற்பல உலகங்களாகவும் அவைகளிலுள்ள பொருட்களாகவும் இருப்பது எது? இந்த உலகமென்னும் தோற்றமனைத்தும் இறைவனுக்கு அன்னியமானதென்று சொல்லப்பட்டால் இப‘போது அவனோடு அவனுக்கு அன்னியமானவைகளும் சேர்ந்திருப்பதாக அர்த்தம் ஏற்பட்டு ஏகத்துவக் கருத்துக்கு முரணாக அல்லவா முடியும். (நவூதுபில்லாஹ்) இது கொஞ்சமும் பொருந்தாது. ஆகையால் பல்வேறு உலகங்களாகவும் அதில் பல்வேறு தோற்றங்களாகவும் வெளிப்பட்டுள்ளவை அனைத்தும் இறைவனுடைய தன்மயத்திற்குரிய தோற்றமேயன்றி வேறல்ல என்னும் கருத்தை கொண்டு வந்தால்தான் இந்த நபிமொழியின் கருத்து ஏகத்துவக் கருத்துக்கு நேர்படும். இந்நிலையில் தன்ஸீஹுடைய தரப்பை பற்றி தக்கலை பீர்முஹம்மது அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**கண்டதுங் கேட்டது மல்ல – அங்குக்**

**கருதி முடிந்த தலங்க ளுமல்ல**

**அண்டமும் பிண்டமு மல்ல – நல்ல**

**அகார வுகார சிகாரமு மல்ல**

**மண்டல மூன்றுக்கு எல்ல – மறை**

**வாக நின்றிடும் வாசியு மல்ல**

**அன்றாதி யெங்கு நிறைந்து – நம்மை**

**ஆளும் ரஹ்மானை கண்டு கொண்டேனே!**

என்றும், தஷ்பீஹுடைய தரப்பைப் பற்றி....

**கண்டதுங் கேட்டதும் தானே – அங்கு**

**கருதி முடிந்த தலங்களுந் தானே**

**அண்டமும் பிண்டமுந் தானே – நல்ல**

**அகார வுகார சிகாரமுந் தானே**

**மண்டல மூன்றதுந் தானே – மறை**

**வாக நின்றிடும் வாசியுந் தானே**

**அன்றாதி யெங்கு நிறைந்து – நம்மை**

**ஆளும் ரஹ்மானை கண்டு கொண்டேனே!**

என்றும் கூறுகின்றனர். மேலும் ஹழ்ரத் அமீருல் முஃமினீன் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்....

صَحْوُ الْمَعْلُوْمِ مَعَ مَحْوِ الْمَوْهُوْمِ

**“அறியப்பட்டவைளின் (ஹக்குடைய) தெளிவு சந்தேகிக்கப்பட்டது (கல்கு) அழிந்து போவதைக் கொண்டாகும்“** என்றும்...

فِكْرُكَ فِيْكَ يَكْفِيْكَ

**“உன்னை பற்றி சிந்திப்பது உனக்குப் போதுமானது“** என்றும்...

ஹழ்ரத் ஷைகு ஸஹ்ல் பின் துஸ்தரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

اِيَّاكَ وَلَا تَنْظُرُ الِاثْنَيْنِ وَلَا تَتَّبِعُ الْغَلَطَ اَنْتَ هُوَ فَقَطْ

**“(இணை வைப்பதை) உனக்கு அச்சமூட்டி எச்சரிக்கிறேன். இரண்டாகக் காணாதே. தவறானதை பின்பற்றாதே. நீதான் அவனாகும்“** என்றும், ஸையித் தாயிபா ஹழ்ரத் ஜுனைதுல் பகுதாதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

فَمَا الْوَجْهُ اِلَّا وَاحِدٌ غَيْرَ اَنَّهُ اِذَا اَنْتَ اَعْدَدْتَّ الْمَرَايَا تَعَدَّدَا

**“உனது முகம் என்பது ஒன்றேயன்றி பலதல்ல. ஆனால் நீ அவைகளில் அதிகப்படுத்துவாயின் அப்போது அந்த ஒரே முகம் அவைகளில் பலதாகத் தோற்றமளிக்கும்“**

என்றும், ஹழ்ரத் ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

اِذَا صِرْنَا الْعَوَالِمَ وَالْمَرَاتِبِ وَذَاتًا ثُمَّ اَسْمَاءً صِفَاتًا

**“நாங்கள் லோகங்களாகவும் படித்தரங்களாகவும் தன்மயமாகவும் குணங்களாகவும் என பல்வேறு விதமாக ஆகிவிட்டோம்“** என்றும்..

وَفِى التَّفْصِيْلِ لَمْ يُوجَدْ سِوَانَا وَلَمْ يُوجَدْ كَذَا فِى الْمُجْمَلَاتِ

**“(தோற்றத்தில்) பலதாகக் காட்சியளிக்கும் தரப்பில் நம்மையன்றி வேறொன்றும் காணப்படவில்லை. இன்னும் பிரிவற்ற தரப்பிலும் நம்மையன்றி வேறொன்றும் காணப்படவில்லை“** என்றும்...

وَمَا خَلْقٌ تَرَاهُ الْعَيْنُ اِلَّا عَيْنُ حَقٍّ

**“கண்ணால் பார்க்கப்படும் எந்தப் படைப்புமில்லை. அதுதானே ஹக்காக இருந்தேயொழிய“** என்றும் ஹழ்ரத் அப்துல் கரீம் ஜீலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

وَمَا الْخَلْقُ فِى التِّمْثَالِ اِلَّا كَثَلْجَةٍ وَاَنْتَ لَهُ الْمَاءُ الَّذِيْ هُوَ نَابِعُ

فَمَا الثَّلْجُ فِيْ تَحْقِيْقِنَا غَيْرُ مَائِهِ وَغَيْرَانُ فِيْ حُكْمٍ دَعَتْهُ الشَّرَائِعُ

وَلٰكِنْ بِذَوْبِ الثَّلْجِ يَرْفَعُ حُكْمَهُ وَيُوْضَعُ حُكْمُ الْمَاءِ وَالْاَمْرُ وَاقِعُ

**“படைப்பென்பது உவமையில் பனிக்கட்டியைப் போலவேயன்றி வேறில்லை. இதில் நீயோ படைப்புக்கு ஊற்றும் நீராக இருக்கிறாய். இந்நிலையில் பனிக்கட்டி என்பது நமது**

**நிச்சயதார்த்தத்தில் நீரின்றி வேறில்லை. (ஏகத்துவத்திற்குரிய) தீர்மானத்தில் ஷரீஅத்து வேற்றுமையை அழைத்துக் கொண்டு வந்துள்ளது. இருப்பினும் பனிக்கட்டி உருகுவதைக் கொண்டு பனிக்கட்டி என்னும் பெயர் நீங்கி விடும். அதற்குப் பதிலாக நீர் என்ற தீர்மானத்தையும் கொண்டு வரும். உண்மையில் விஷயம் அப்படித்தான் இருக்கிறது“** என்றும், ஹழ்ரத் ஷைகு நூருத்தீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்....

اَلتَّوْحِيْدُ تَجْرِيْدُ الْقَلْبِ عَمَّا سِوَي الله

**“ஏகத்துவம் என்பது இறைவனல்லாததை விட்டும் உள்ளத்தை தூய்மைப்படுத்துவதாகும்.“** என்றும், ஹழ்ரத் இப்னு அதாயி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

اَلتَّوْحِيْدُ فِيْ مُشَاهَدَةِ الْجَمَالِ الْوَاحِدِ حَتّٰي يَكُوْنَ قِيَامُكَ بِالْوَاحِدِ بِالتَّوْحِيْدِ

**“ஏகத்துவம் என்பது ஒரே ஜமாலை தரிசித்து ஒன்று என்பதில் நிலைப்பதாகும்“** என்றும், ஹழ்ரத் மன்சூர் ஹல்லாஜ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

فَقُلْتُ وَمَا ذَنْبِيْ فَقَالَتْ مُجِيْبَتَهُ     وُجُوْدُكَ ذَنْبٌ لَايُقَاسُ بِهٖ ذَنْبٌ

**“நான் (ஒரு பெண்ணிடம்) என்னுடைய பாவம் என்ன? என்று கேட்க, அதற்கவள், உனக்கென்ன ஒரு உள்ளமை இருப்பதாகக் கூறுவதேயாகும். அதற்கு நிகரான பாவம் என்பது வேறெதுவுமில்லை எனக் கூறினாள்“** என்றும், ஹழ்ரத் மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**கடலை அலையது தேடில் - அதைக்**

**காணாது காணாது வேறெண்ணுமாகில்**

**மடையர் தானல்ல வேறென்னில் - ரப்பை**

**மாளுமட் டுமவர் காணார்கள கண்ணில்!** என்றும்...

**நப்ஸை யறிந்தால் நீயாகும் - இந்த**

**நப்ஸென் றதுதான் இலாஹது வாகும்**

**தபமாம் இலாஹல்லா வாகும் - இதைச்**

**சார்ந்தறிந் தாலோ உஜூத் ஒன்றாகும்**

என்றும், ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**பார்க்குமிட மெல்லாம் பரி பூரணமாக**

**ஏற்கையுட னின்ற வியல்பே நிராமயமே!**

என்றும்...

**உனையன்றி யாவு முளதோவென் றோதியபின்**

**எனையென் னனத்தில்வைத் திசைப்பாய் நிராமயமே!**

என்றும்,...

**உனையன்றி வேறொன் றுளதோவுண் டாயினதை**

**இன்னதுவா மென்றே யியம்பாய் நிராமயமே!**

என்றும், கீழக்கரை தைக்கா சாஹிப் வலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**நாட்டம் நீயாகும் நாடுவோனும்**

**நாடப்பட்டோனும் நீயேயாகும்**

**தேட்டம் நீயாகும் தேடுவோனும்**

**தேடப் பட்டோனும் நீயேயாகும்**

**வாட்டம் நீயாகும் மகிழ்ச்சிகளும்**

**வணக்கங் கள்தானும் நீயேயாகும்**

**ஆட்டம் நீயாகும் ஆடுதலும்**

**அடங்க லுனையன்றி வேறில்லையே!**

என்றும்...

**காணுஞ் சொரூபமெல்லாம் கத்தன் மழ்ஹரென்றே**

**பேணி ஷுஹூதுசெய்து பெலக்கும் நாளெந்நாளோ!**

என்றும், சூபியாக்கள்...

شُهُوْدُ الْوَحْدَةِ فِى الْكَثْرَةِ

**“அதிகத்தில் ஒன்றை பார்க்குதல்“** என்றும்....

شُهُوْدُ الْكَثْرَةِ فِى الْوَدَةِ

**“ஒன்றில் அதிகத்தை பார்க்குதல்“** என்றும்

خَلَقَ اللهُ آدَمَ عَلٰى صُوْرَتِهٖ

**“திடனாக இறைவன் மனிதனை தனது தோற்றத்தில் படைத்தான்“** என்றும் ஹதீதெ குத்ஸியில் கூறியுள்ளான். மேலும்…

مَنْ عَرَفَ اللهُ بِالرُّوْحِ فَهُوَ عَارِفٌ

**“ஆன்மாவைக் கொண்டு இறைவனை அறிந்தவன் ஆரிப்“** என்றும்…

رَأَيْتُ رَبِّيْ بِرَبِّيْ

**“எனது ரப்பை கொண்டு ரப்பை கண்டேன்“** என்றும்…

مَنْ عَرَفَ اللهُ بِاللهِ فَهُوَ مُوَحِّدٌ

**“இறைவனைக் கொண்டு இறைவனை அறிந்தவனே ஏகத்துவவாதியாகும்“**

என்றும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளனர். அடுத்து அமீருல் முஃமினீன் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்…

عَرَفْتُ رَبِّيْ بِرَبِّيْ

**“என்னுடைய ரப்பைக் கொண்டு ரப்பை அறிந்தேன்“** என்றும்…

அடுத்து அமீருல் முஃமினீன் உமர் பின் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்…

مَارَأَيْتُ شَيْئًا اِلَّا وَرَأَيْتُ اللهَ قَبْلَهُ

**“நான் ஒரு பொருளை பார்ப்பதில்லை. அதற்குமுன் அப்பொருளில் இறைவனைப் பார்த்தே ஒழிய“**

என்றும், ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உஸ்மான் பின் அஃப்பான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்…

مَارَأَيْتُ شَيْئًا اِلَّا وَرَأَيْتُ اللهَ بَعْدَهُ



www.sufimanzil.org

**“நான் ஒரு பொருளைப் பார்ப்பதில்லை. அதில் பின்னர் இறைவனைப் பார்த்தே ஒழிய“**

என்றும், ஹழ்ரத் அமீருல் முஃமினீன் அலி பின் அபீதாலிப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்...

مَا رَأَيْتُ شَيْئًا اِلَّا وَرَأَيْتُ اللهَ فِيْهِ

**“நான் ஒரு பொருளை பார்ப்பதில்லை. அதில் இறைவனைப் பார்த்தே ஒழிய“** என்றும்...

مَا رَأَيْتُ شَيْئًا اِلَّا وَرَأَيْتُ اللهَ مَعَهُ

**“நான் ஒரு பொருளை பார்ப்பதில்லை. அதனோடு இறைவனை பார்த்தே ஒழிய“**

என்றும் கூறுகின்றனர். ஆகையால் மேற்கண்ட வாக்கியங்களின் கருத்துக்களை நாம் ஆராய்ந்தறிந்து தாத் என்னும் தன்மயத்துக்கு ஸிபாத் என்னும் குணங்கள் அன்னியமென்னும் வேற்றுமையை விட்டும் நீங்கி தன்ஸீஹ் மஹ்லில் (கலப்பற்ற நிலையில்) நிலைத்து நிற்பதே ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் விசுவாசமாகும்.

**ஷைகு முரீதுக்கு தோட்டம் காண்பித்தல்**

ஒரு ஷைகு தனது முரீதுகளில் ஒருவரை “வா!“ நாம் தோட்டத்தை பார்த்து விட்டு வரலாம் எனக் கூறி அழைத்துச் சென்றார். தோட்டத்திற்கு சென்றபின் ஷைகு முரீதிடம், அங்குள்ள ஒவ்வொரு பொருட்களையும் சுட்டிக்காட்டி, இது மாமரம், இது தென்னை மரம், இது ரோஜா செடி, இது மயில், இது குதிரை, இது வண்டி, இது குளம், இது மாளிகை என ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் காட்டியபின், சரிவா! வீட்டுக்கு போகலாம் என்று சொல்ல,

அதைக் கேட்ட முரீத், தனது ஷைகை நோக்கி, ஷைகவர்களே தாங்கள் இப்போது காட்டிய எல்லாவற்றையும் பார்த்தேன். ஆனால் தோட்டத்தைக் காட்டுவதாகக் கூறி அழைத்து வந்தீர்களே! அதை மட்டும் இன்னும் காட்டவில்லையே! என்று கேட்க, அதுகேட்ட அவனுடைய ஷெய்கு முரீதுடைய அறியாமையை எண்ணி வருத்தப்பட்டவராக, மகனே! இதுவரை நான் உனக்கு காட்டியவைகளுக்குப் பெயர்தான் தோட்டமேயன்றி வேறல்ல. இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்துள்ள தன்மைக்குப் பெயர்தான் தோட்டமென்று சொல்லப்படும். ஆனால் அதேநேரம் ஒவ்வொன்றையும் தனித்தனியாக சுட்டிக்காட்டி பேசும்போது அவைகளின் தோற்றத்திற்குரிய பெயரைக் கொண்டுதான் அவைகள் அழைக்கப்படுமென்று கூறினார்.

இதன் மூலம் தாத்தென்றும் தன்மயத்துடைய அரூப அம்சத்திற்கும் ஸிபாத்தென்னும் குணங்களின் ரூப அம்சத்திற்கும் பொதுவாகச் சொல்லப்படும் பெயர் தான் அல்லாஹ் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**ஃபகீருக்கு ரொட்டி கொடுத்தல்**

ஒருநாள் ஒருவன் ஒரு தோட்டத்தின் வழியாக சென்று கொண்டிருக்கும்போது, அங்கே ஒரு பகீர் தமது காதுகளில் ஒன்று அறுக்கப்பட்டு ரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கும் நிலையில் எதிரே

வந்து கொண்டிருப்பதைக் கண்டான். அதைக் கண்ட அவன் பரிதாபத்தோடு அவரை நோக்கி, இக்கொடுமையை செய்த பாதகன் யார்? என்று கேட்க, அதற்கவர், அதை பிறகு சொல்கிறேன். இப்போது எனக்கு மிகவும் பசியாக இருப்பதால் உணவு ஏதேனும் இருந்தால் கொண்டுவா! என்று சொல்ல, அதுகேட்ட அவன் கிராமத்திற்கு ஓடிப் போய் ஒரு ரொட்டியை வாங்கிக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான்.

ரொட்டியை வாங்கிக் கொண்ட ஃபகீர் அதை சாப்பிடத் துவங்கினார். அப்போது அவன் மீண்டும் அவரை நோக்கி, உங்களுடைய காதை அறுத்தவன் யார்? என்று கேட்க, அதற்கு அந்த ஃபகீர் சிரித்துக் கொண்டே, ரொட்டி கொடுத்தவன்தான் காதை அறுத்தான் என்று சொல்ல, அதுகேட்ட அவன் திடுக்கிட்டு போனவனாக அந்த பகீரைப் பார்த்து கோபத்தோடு, இதென்ன அபாண்டமாக பேசுகிறீர்? என்று கேட்க, அதற்கந்த பகீர் முன்பை விட அதிகமாக சிரித்துக் கொண்டே திரும்பவும், ரொட்டி கொடுத்தவன்தான் காதை அறுத்தான் என்று சொல்ல, அதை கேட்ட அவன் அந்த ஃபகீரை இழித்துரைத்து விட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

இக்கதையின் கருத்து, ஏகத்துவத்தை உணர்ந்துள்ள விசுவாசிகள், சகல தோற்றங்களும் ஒரே மெய்ப்பொருளாகிய இறைவனுடைய வெளிப்பாடுகளே என்பதை சந்தேகமின்றி அறிந்துள்ளனரென்றும், ஏகத்துவத்திற்குரிய கலிமாவை அறியாதவர்கள் இறைவனை அறியாது வேற்றுமையில் சிக்கிக் கொண்டிருப்பதால் உண்மையைக் கூறும் ஞானிகளை தூற்றுவோராக இருக்கின்றனரென்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**ஷைகு முரீதை மீனிடம் அனுப்புதல்**

ஒரு ஷைகிடம் முரீது பெற்றிருந்த ஒருவன் அவரிடமிருந்து பல்வேறு வகையான கல்விகளை கற்று வந்தான். ஒருநாள் அவன் தனது உள்ளத்தில், நமது ஷைகு நமக்கு எல்லாவகையான கல்விகளையும் கற்றுக் கொடுத்துள்ளார். ஆனால் இறைவனை அறியும் கல்வியை மட்டும் இதுவரை நமக்குக் கற்றுத் தரவில்லையே! எனறு எண்ண, அவனுடைய உள்ளத்தில் தோன்றிய அந்த எண்ணத்தை அவனுடைய ஷைகு தமது கஷ்ப் என்னும் ஞாதிருஷ்டியைக் கொண்டு அறிந்து கொண்டவராக முரீதை அழைத்து, இப்போது உனது உள்ளத்தில் நான் உனக்கு இறைவனை அறியும் கல்வியை மட்டும் கற்றுத்தரவில்லையென நினைத்தாயல்லவா! என்று கேட்க, அதற்கவன், ஆம் என்று கூறினான்.

அதைகேட்ட அவனுடைய ஷைகு அவனை நோக்கி: நீ இங்கேயுள்ள ஆற்றோரத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு கல்லுக்கு மேலே ஏறிநின்று ஆற்றை பார்த்துக் கொண்டிரு. அப்போது ஒரு மீன் வரும். அதற்கு எனது ஸலாமைக் கூறி, உனது கேள்வியை அதனிடம் நான் கேட்கச் சொன்னதாகக் கேள் என்று கூறினார். அவனும் அவ்வாறே ஆற்றோரத்திற்குச் சென்று மீனிடம் தனது கேள்வியை கேட்க, அதற்கந்த மீன்...

மனிதா! இறைவனை அறியும் கல்வியை என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவா வந்திருக்கிறாய்.! உனது கேள்வி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. நீ இவ்வுலகில் மனிதத் தோற்றத்தில் மனிதனாகப் பிறந்திருந்தும் உன்னை நீ உய்த்துணராது பஞ்சமா பாதகத்திற்கு அடிமையாகி விட்டதால் உனது உள்ளத்தில் இருள் படர்ந்து அது உனது அறிவை மறைத்து விட்டது. இருப்பினும் நீ உனது ஷைகவர்களின் கட்டளைக்கேற்ப என்னிடம்

வந்திருப்பதால் உனக்குள் மறைந்துள்ள அந்த மெய்யறிவை வெளிப்படுத்த வேண்டியது எனது கடமையாகிவிட்டது.

இருப்பினும் இறைவன் பரிசுத்தமானவனாக இருப்பதால் முதலில்நான் சுத்தமாக இருந்து கொண்டுதான் அக்கல்வியை உனக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது தான் நான் எனது மனைவியோடு உறவு கொண்டுவிட்டு குளிப்பு விதியான நிலையில் வந்திருப்பதால் முதலில் நான் குளித்துவிட்டு வந்து அதன்பின் அதை உனக்கு சொல்லிக் கொடுக்கிறேன். அதற்காகத்தான் நானும் தண்ணீரைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். தண்ணீர் எங்கே இருக்கிறது என்பது மட்டும் இன்னும் எனக்குத் தெரியவில்லை. ஆதலால் தண்ணீர் கிடைத்ததும் குளித்துவிட்டு வந்து உனது கேள்விக்கு பதில் சொல்கிறேன் எனக் கூறி ஆற்றுக்குள் மறைந்து போனது.

மீன் சொன்ன பதிலைக் கேட்ட அவனுக்கு அப்போதே மெய்யறிவுத் தோன்றி தனக்கென ஒரு தனி உள்ளமைக்குரிய தோற்றமென்பது உண்டு என்னும் வேற்றுமை நீங்கி ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான கருத்து அவனுடைய உள்ளத்தில் தோன்றியது. ஆக இதனுடைய கருத்து என்னவென்றால்இ ஒவ்வோர் மனிதனுடைய பகிரங்கமும் அந்தரங்கமும் இறைவனுடைய உள்ளமை தோற்றத்திற்கு அன்னியமில்லாது இருக்கும்போது சிலர் அதை உணரும் ஆற்றலின்றி நான் பல கல்விகளையெல்லாம் கற்றிருக்கிறேனே! அதைக் கொண்டு இறைவனை அறியும் ரகசியத்தை என்னால் இன்னும் தெரிந்து கொள்ள முடியவில்லையே! எனக் கலங்குகின்றனர். இத்தகையோர் ஒரு காமிலான ஷைகிடத்தில் பைஅத்துப் பெற்றுக் கொண்டால் அவர் அக்கலக்கத்தை நீக்கி அவர்களுக்கு மெய்யறிவாகிய ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்தை கற்பிப்பார்.

**வேற்றுமைக்கு மன்னிப்பு இல்லை**

اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ

**"வேற்றுமை தான் பாவங்களிலெல்லாம் மிகப்பெரிய பாவமாகும்"** என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். மேலும் ஷிர்க் என்னும் வேற்றுமைக்குரிய பதத்திற்கு ஜனங்கள் பல்வேறு வகையான கருத்துக்களை தமக்குள் கொண்டுள்ளனர். மேலும் சிலர் ஷிர்க்கென்று சொன்னால் அதற்குரிய அர்த்தம் இதுதான் என்பதை இன்னமும் விளங்கிக் கொள்ளாமலேயே இருக்கின்றனர். இந்நிலையில் ஷிர்க்கென்று சொல்லப்படுவதற்குரிய அர்த்தம் என்னவென்றால், வேற்றுமை என்பதாம். வேற்றுமை என்றால் இறைவனுக்கு ஒரு உள்ளமையும் தனக்கு ஒரு உள்ளமையும் இருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பதாம். இது பாவங்களிலெல்லாம் மிகப்பெரியதும் பாவ மன்னிப்பை கொண்டு கூட மன்னிக்கப்பட முடியாத ஒன்றுமாகும். இதைப் பற்றி...

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَرٰۤى اِثْمًا عَظِيْمًا

**“இறைவனுக்கு இணை வைக்கப்படுவதை அவன் ஒரு போதும் மன்னிக்க மாட்டான். அதல்லாத மற்றவைகளை அவன் விரும்பியவர்களின் விஷயத்தில் மன்னிப்பான். இந்நிலையில் யார் இறைவனுக்கு இணை வைக்கிறாரோ அவர் மகத்தானதொரு பாவத்தை உற்பத்தி செய்து கொண்டவராவார்“.**

என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறுகிறான். ஆதலால் வேற்றுமை என்னும் இணையை விட்டும் நீங்கி ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்தில் நம்மை நாம் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த வசனத்தில் ஷிர்க் (வேற்றுமை) மன்னிக்கப்பட மாட்டாதென தெளிவாக்க கூறப்பட்டிருப்பதால் ஷிர்க்கை பாவமன்னிப்பைக் கொண்டு இறைவன் மன்னிப்பானென நம்புவதற்கும் அறவே இடமில்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**கலிமாவின் மாபெரும் தத்துவம்**

சிலர் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் நான்கு ஷர்த்துக்களில் முந்திய ஷரத்தைகொண்டு ஏகத்துவத்திற்குரிய கலிமாவை வாயால் சொல்பவர்களாகவும், இரண்டாவது ஷரத்தின்படி அதனுடைய அர்த்தத்தை காதால் கேட்பவர்களாகவும், மூன்றாவது ஷரத்தின்படி அதனுடைய அர்த்தத்தை உள்ளத்தைக் கொண்டு சந்தேகத்திற்கிடமின்றி அறிந்து கொண்டவர்களாகவும் யார் இருக்கிறார்களோ அவர்கள்...

قُلْ لَوْكَانَ الْبَحْرُ مِدَادًا لِّكَلِمَاتِ رَبِّيْ لَنَفِدَ الْبَحْرُ قَبْلَ اَنْ تَنْفَدَ كَلِمَاتُ رَبِّيْ وَلَوْ جِئْنَا بِمِثْلِهٖ مَدَدًا

“(நபியே!) **கூறும் எனது இரட்சகனுடைய கலிமாக்களை எழுதுவதற்கு கடல் முழுவதும் மையாகிப் போனாலும் எனது ரட்சகனுடைய கலிமாக்களை எழுதித் தீர்க்குமுன் கடலின் மை முழுவதும் தீர்ந்து போய்விடும். மேலும் அதன் உதவிக்காக அக்கடலைப் போன்று இன்னொரு கடலை நாம் கொண்டு வந்தாலும் சரியே!“**

என்பதாக இறைவன் கூறும் இவ்வசனத்தின் கருத்தையும் அவர்கள் அறிந்தோராக இருப்பர். அவ்வாறின்றி ஒருவர் ஆலிம் எனக் கூறுப்படுவதை நாம் ஒப்புக் கொள்ளத்தானே வேண்டுமென்றும், இது அறிவுக்கு விளங்கவில்லையென்றும்இ நம்மை மடையனென்று நினைத்துக் கொள்வார்களே என்றும் வெட்கப்பட்டுக் கொண்டு விஷயத்தை விளங்கிக் கொண்டவரைப் போல நடித்துக் கொண்டுஇ சுப்ஹானல்லாஹ்! உண்மைதானென தலையை மட்டும் ஆட்டுவாரேயாயின் அவர் வெளித்தோற்றத்தில் முஸ்லிமைப் போல தோன்றினாலும் அந்தரங்கத்தில் அவர் ஏகத்துவத்திற்குரிய கலிமாவை அறியாத வழிகேடராகவே இருக்கிறார்.

காரணம் அவருடைய உள்ளத்தில் கலிமாவை எழுதுவதற்கு சுமார் நான்கு அல்லுது ஐந்து சொட்டு மை இருந்தால் போதும் என்றிருக்க, கடல் முழுவதும் மையாகிப் போனாலும் கலிமாவை எழுதி முடிக்க முடியாது என்றும், இன்னும் அந்த கடலைப் போலவே இன்னொரு கடலை உருவாக்கி அதையும் மையாக்கினாலும் எழுதி முடிக்க முடியாதென்றும் சொன்னால், இதென்ன! புத்திக்கு விளங்க முடியாத விஷயமாக இருக்கிறதே! என்றுதான் யோசிப்பார். ஆனால் அதேநேரம் லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை அறிந்துள்ள ஞானிகள் அவ்வாறு எண்ணாது காண்பவை, கேட்பவை, முகர்பவை,

மொழிபவை, செய்பவை, உணர்பவை, அறிபவை என்ற அனைத்துமே கலிமாவாகத்தான் இருக்கிறதென்பதாக அறிந்து விசுவாசம் கொண்டுள்ளனர். மேலும் ஹழ்ரத் முஹம்மது தாஹிர் ஆரிப் பில்லாஹ் என்பார் எழுதிய “கடவுள் தூதும் அவர் வாக்கியமும்“ என்னும் நூலில்…

வேதம் என்பது இறைவனுடைய பேச்சாகவும். நீ இந்த லோகத்தில் பார்ப்பவைகளெல்லாம் அவனுடைய செயலின் வேதமாகவும் இருக்கின்றன என்பதாகக் கூறுகின்றனர். இதனாலேயே…

وَالَّذِيْ نَفْس مُحَمَّدٍ بِيَدِهٖ لَوْ اَنَّكُمْ دَلَّيْتُمْ بِحَبْلٍ اِلَى الْاَرْضِ السُّفْلٰى لَهَبَطَ عَلَى اللهِ

**“முஹம்மதுடைய உயிர் யாருடைய கைவசம் உள்ளதோ அவன் மீதாணையாக நீங்கள் நீர் அள்ளும் பாத்திரத்தை ஒரு கயிற்றில் கட்டி கீழ் பூமியாகிய பாதாளத்தில் இறக்குவீர்களாயின் அது கண்டிப்பாக இறைவன் மீதுதான் விழும்“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இன்னும் ஷைகு முஹம்மத் பின் ஃபழ்லு ரஹிமஹுல்லாஹ் என்பார்….

وَاَنَّ ذَالِكَ الْوُجُوْدَ لَيْسَ لَهُ حَدٌّ وَّلَا شَكْلٌ وَّلَا حَصْرٌ وَّمَعَ هٰذَا ظَهَرَ وَتَجَلّٰى بِالشَّكْلِ وَالْحَدِّ

**“இறைவனுடைய உள்ளமைக்கு ஒரு அளவு, ரூபம், மட்டுதிட்டம் போன்ற எதுவும் இல்லாமல் இருப்பதைப் போலவே (அதுதான்) ரூபம், அளவு, மட்டுதிட்டம் போன்றவற்றை கொண்டு வெளிப்பட்டுள்ளது“** என்றும், ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்…

فَاِنْ قُلْتَ بِالتَّنْزِيْهِ كُنْتَ مُقَيِّدًا وَاِنْ قُلْتَ بِالتَّشْبِيْهِ كُنْتَ مُحَدِّدًا

**“தஷ்பீஹ் (ரூப அம்சம்) இன்றி தன்ஸீஹை(அரூப அம்சத்தை) கொண்டு மட்டும் இறைவனை அறிவதைக் குறித்து பேசுவானாயின் நீ இறைவனை தன்ஸீஹில் (அரூப அம்சத்தில்) மட்டும் கட்டுப்படுத்தியவனாகி விடுவாய். இவ்வாறே தன்ஸீஹ் (அரூப அம்சம்) இன்றி தஷ்பீஹை (ரூப அம்சத்தை) கொண்டு மட்டும் இறைவனை அறிவதைக் குறித்து பேசுவாயாயின் இறைவனை நீ தஷ்பீஹில் (ரூப அம்சத்தில்) மட்டும் கட்டுப்படுத்தியவனாகி விடுவாய்“**

وَاِنْ قُلْتَ بِالْاَمْرَيْنِ كُنْتَ مُسَدِّدًا وَكُنْتَ اِمَامًا فِى الْمَعَارِفِ سَيِّدًا

**“மேற்கண்ட இருவகைகளை கொண்டும் அவ்விரண்டுக்கும் இடையில் (அரூப அம்சமென்றும் ரூப அம்சமென்றும் பிரிக்காது) ஒன்றுபடுத்தி தன்ஸீஹ் மஹ்லா(கலப்பற்ற தூய்மையா)க பேசுவாயேயாளின் மஃரிபாவுடைய வழியை நீ தெரிந்து கொண்டவனாகி**

**விடுவாய். அத்துடன் மஃரிபாவை தேடுவோருக்கு நீ இமாமாகவும் ஆகி விடுவாய்"** என்று கூறுகின்றனர்.

மேற்கண்ட ஆதாரங்களை கொண்டு இப்பூமி முழுவதும் இறைவனுடைய தோற்றமாகத்தான் இருக்கிறதென்றும், அதேநேரம் இறைவனுடைய உள்ளமை தோற்றம் மட்டுதிட்டம், ஒப்புவமை, நிறம் குறி போன்ற தன்மைகளை விட்டும் பரிசுத்தமாக இருப்பதோடு அதுதானே மட்டுதிட்டம், நிறம்குறி, ஒப்புவமை போன்ற தன்மைகளாகவும் வெளிப்பட்டுள்ளது என்றும், இறைவனை அவனது தன்மயத்துடைய தரப்பில் மட்டுதிட்டம், நிறம்குறி, ஒப்புவமை போன்ற தன்மைகளை விட்டும் தூய்மையானவன் என ஒப்புக் கொள்ளுதல் அவனை தன்ஸீஹில் (அரூப அம்சத்தில்) கட்டுப்படுத்தியதாக ஆகிவிடுகிறதென்றும், அவ்வாறின்றி அவனை ஸிபாத்தாகிய குணங்களுடைய தரப்பில் மட்டுதிட்டம், நிறம்குறி, ஒப்புவமை போன்ற தன்மைகளைக் கொண்டு வெளிப்பட்டிருக்கிறான் என ஒப்புக் கொள்ளுதல் தஷ்பீஹி(ரூப அம்சத்தி)ல் அவனை கட்டுப்படுத்தியதாக ஆகிவிடுகிறதென்றும் தெரியவருவதால் இறைவன் தனது தன்மயத்துடைய தரப்பில் மட்டுதிட்டம், நிறம்குறி, ஒப்புவமை போன்றவைகளை விட்டும் பரிசுத்தமாக இருப்பதைப் போல அவனே சிபாத்தாகிய குணங்களுடைய தரப்பில் மட்டுதிட்டம்இ நிறம்குறி, ஒப்புவமை போன்றவைகளை கொண்டு வெளியாகி இருக்கிறானென ஒப்புக் கொள்வதுதான் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் பரிசுத்தமான விசுவாசமாகும்.

ஆதலால் தாத் என்னும் தன்மயத்திற்குரிய தரப்பில் மட்டும் இறைவனை விசுவாசித்து ஸிபாத் என்னும் குணாதிசியங்களின் தரப்பில் இறைவனை நிராகரித்தல் என்பது ஏகத்துவத்திற்குரிய விசுவாசமாகாது. மாறாக இதுதான் வேற்றுமைக்குரிய விசுவாசமாகும். எனவே மேற்கண்ட ஆதாரங்களை கொண்டு லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் மாபெரும் மகத்துவவம் இதுதான் என்பதை ஆராய்ந்துணர்ந்து நாம் நமது விசுவாசத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**மனிதன் அடிமைதனத்தை விட்டும் நீங்குதல்**

اَلنَّاسُ نِيَامٌ فَإِذَا مَاتُوا انْتَبَهُوا

**"மனிதர்களெல்லாம் உறங்கிக் கொண்டுள்ளனர். இறந்தால் விழித்து எழுவார்கள்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இந்த நபிமொழிக்கு ஹழ்ரத் ஸையத் முஹம்மத் தானீ ஷுத்தாரி ரஹிமஹுல்லாஹ் தமது "பயானுல் அஸ்றார்" என்னும் நூலில்...

**"இந்த உறக்கம் வாஸிலான(முக்தியடைந்தவ)வர்களை விட்டு மட்டும்தான் அகலுமேயன்றி மற்றவர்களை விட்டும் அகலாது. அதாவது, உனது "நான்" என்பது இறைவனுக்கு ஒரு உள்ளமை தோற்றம் உண்டென்றும், உனக்கு ஒரு உள்ளமை தோற்றம் உண்டென்றும் இரண்டாகப் பிரிப்பதால் அவ்விரண்டு உள்ளமைத் தோற்றத்தையும் நீ உன்னை விட்டும் நீக்க வேண்டும். இன்னும் உன்னை நீ சிருஷ்டியல்லாத தரப்பில் மெய்ப்பொருளென்றும் சிருஷ்டியென்னும் தரப்பில் படைப்பென்றும் புரியாது உனது வேற்றுமையை கொண்டு நீ**

**வேறு என்றும் மற்றவைகளெல்லாம் வேறு என்றும் எண்ணிக் கொண்டிருப்பதால் அது உனது உள்ளத்தில் ஒரு தோற்றமாக உருப்பெற்று நிற்பதால் அதை உன்னால் உனது உள்ளத்திலிருந்து அழிக்க முடியாது.**

**ஆதலால் அந்த உருவத்தை வெளிரங்கமான மரணம் வந்து உன்னை பிடிக்குமுன் அழித்துவிடு. அப்படிச் செய்தால் நீ மெய்ப்பொருளாகி விடுவாய். ஆகையால் வெளிரங்கமான மரணம் வந்து உன்னை பிடிக்குமுன் பயபக்தியை கொண்டு உன்னை நீ அழித்து மௌத்தே இறாதியிலாகி கமால் அஸ்மாயியுடைய குணத்தை எடுத்து தூய்மையாகி விடுவாயாயின் அப்போது தான் உனது படைப்பென்ற குணம் மாறும். நீயும் ஹக்காக மாறுவாய்“**

எனக் கூறுகின்றனர். ஆதலால் நாம் நம்மை அடிமையென்னும் எண்ணத்தை விட்டும் நீங்கி நமது பூர்வீக நிலையாகிய வெட்டவெளி என்னும் தாத்து முத்லக்கில் ஐக்கியமடைய வேண்டும்.

**ஆரிப் காமிலாவதும் வலியின் ரகசியமும்**

وَالْمُرَادُ بِالْمَعَارِفِ هُنَا الْكَامِلُ الْمُتَصَرِّفُ فِي الْوُجُوْدِ لَا الَّذِيْ يَعْرِفُ الْحَقَائِقَ وَصُوَرَهَا وَلَا تُصَرَّفُ لَهُ

**“ஆரிப் என்பவர் தனது உள்ளமை தோற்றத்தை திருப்புகிறவராக இருக்க வேண்டும். அகமியத்திற்குரிய கல்வியை கற்றுக் கொள்வதைக் கொண்டு மட்டும் அல்லுது அதை விளங்கிக் கொள்வதை கொண்டு மட்டுமல்ல. காரணம் அவர்களுக்கு தஸர்ருப் என்னும் மாற்றிப் பிடித்தல் இல்லாததே காரணமாகும்“**

என்பதாக ஷைகுல் அக்பர் முஹ்யித்தீனு இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர். இதற்கு ஹழரத் ஸையத் முஹம்மது தானீ ஷுத்தாரி ரஹிமஹுல்லாஹ் தமது “பயானுல் அஸ்றார்“ என்னும் நூலில்...

உஜூதை திருப்புகிறவர்கள் ஹகாயிக் என்னும் அகமியத்தையும் அதனுடைய தோற்றத்தையும் அறிந்து தனது உஜூதை திருப்பிக் கொண்டனர். இதில் உஜூதை தஸர்ருப் (மாற்றிப் பிடித்தல்) செய்தல் என்பதற்குரிய கருத்தானது...

1.கல்வத். தனித்திருக்க வேண்டும். 2. உஜ்லத். உள்ளத்தால் சிருஷ்டிகளை விட்டும் நீங்கியிருக்க வேண்டும். 3. ரியாழத். உள்ளத்தை பழக்கி வர வேண்டும். 4. ஷுஹூது. உலகை வெறுத்திருக்க வேண்டும். 5. ஸுஹ்து. இறைவன் மற்றும் அவனது தூதருடைய கட்டளைகளை தவறாது செயல்படுத்தி வரவேண்டும். 6. முறாகபா. ஷைகை பின்பற்றி அவர் கூறிய திக்ருகளை உள்ளத்தில் சதா நோட்டமிட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதாவது, உண்ணும் போதும், குடிக்கும்போதும், உறங்கும்போதும், படுக்கும்போதும், விழிக்கும்போதும், அமரும்போதும், நடக்கும்போதும், மலஜலம் கழிக்கும்போதும் என எல்லா நேரமும் இடைவிடாது திக்ரை சுவாசத்தில் நடத்திக் கொண்டிருக்க வேண்டும். 7. முஷாஹதா.

இறைவனுடைய தரிசனை என்னும் ஷுஹூதில் இருந்து வர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செயல்பட்டு வந்தால் படைப்புக்குரிய தீய குணங்கள் அனைத்தும் மாறி உள்ளம் தூய்மையாகும். இதனால்தான்...

تَخَلَّقُوا بِاَخْلَاقِ اللّٰهِ تَعَالٰى

**“இறைவனுடைய குணத்தை கொண்டு நீங்கள் குணம் பெறுங்கள்“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இந்த நபிமொழியின் கருத்து, இறைவனுடைய திருநாமங்களில் பேசப்படும் குணங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாம். அவ்வாறு எடுத்துக் கொண்டால் அவனுடைய தரிசனை கிடைக்கும். அதன்பின் “முஆயனா“ என்னும் உள்ளத்தின் கண்களைக் கொண்டு காணும் பாக்கியம் கிடைக்கும். அப்போது அகக் கண் புறக்கண் ஆகிய இரண்டுக்கும் எல்லா வஸ்துக்களுடைய எதார்த்தமும் வெளியாகும். இதைத்தான் “**கஷ்ஃபே நப்ஸானி**“ எனக் கூறப்படுகிறது.

அடுத்து “**கஷ்ஃபே மலக்கானி**“ மூன்றாவது “**கஷ்ஃபே ரஹ்மானி**“**யாகும்**. அப்போது உனது உஜூது என்னும் உள்ளமைக்குரிய தோற்றம் இறைவனுடைய உள்ளமைக்குரிய தோற்றமாக மாறிவிடும். அந்நிலையில் அவர் காமில் என்னும் இரண்டாம் நிலைக்குமாறி தனது அசலாகிய நூரே முஹம்மதிய்யாவை தரிசித்து ஐக்கியத்தையும் பெற்றுக் கொள்வார். இப்படிப்பட்டோருக்குத்தான் உஜூது தஸர்ருப் சாத்தியமாயிற்று எனச் சொல்லப்படும். அதன்பின் அவர் குத்பாகி லோகத்தை பாதுகாப்பார். உலகம் அவருடைய கட்டளைக்கேற்ப செயல்படும். இவர்களைத்தான் ஆரிப் காமில் எனக் கூறப்படுகிறது.

இனி இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் ஒருவர் பெறாது அகமியம், ஏகத்துவம் மற்றும் மஃரிபாவுடைய கல்விகளை கொண்டு மட்டும், தான் இன்னாரென்றும் லோகம் இன்னதென்றும் மற்ற படைப்புக்களெல்லாம் இன்னதென்றும் இறைவனை அறிய வேண்டிய முறைப்படி அறிந்திருப்பாரேயானால் அவரை ஆரிப் நாகிஸ் என்று சொல்லப்படும். காரணம் அவர் அவ்வாறு அறிந்திருந்தாலும் முஷாஹதா போன்ற முயற்சியை மேற்கொள்ளாததால் என்க. இதில் இதைக்கூட அறியாது இருப்பவரை இன்ஸான் ஹைவான் என்றும் இன்ஸான் நாதிக் என்றும் சொல்லப்படும். அடுத்து...

اَلَآ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

**“உஷார்! இறைவனுடைய நேசர்களுக்கு அச்சமோ சலிப்போ கிடையாது“**

என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறுகிறான். இந்த வசனத்தின் கருத்துஇ மனிதன் தனக்கொரு உள்ளமைக்குரிய தோற்றம் உண்டென்னும் வேற்றுமைக்குரிய எண்ணத்தை கொண்டிருப்பதால் அவன் காலமெல்லாம் பாவ புண்ணியத்தை காணக் கூடியவனாகவும் அதன் காரணமாக கவலைக்கு ஆட்படுகிறவனாகவும் இருக்கிறான். இந்நிலையில் தனக்கொரு உள்ளமைக்குரிய தோற்றமுண்டு என்னும் வேற்றுமையை நீக்கி இறைவனில் ஐக்கியமடைந்து

விடுவானாயின் அப்போது நிலைத்திருப்பது இறைவனேயன்றி வேறெதுவும் இல்லாமலாகி விடும். மேலும் இவன் என்னும் ஒருபொருள் இருக்குமாயின் அது பயம் கவலை போன்றவற்றை விட்டு ஒருபோதும் நீங்காது என்பதாம். இதே கருத்தை ஹழரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**பாவ புண்ணியத்தை பறக்கவிட்ட பக்தர்தமக்**

**கேவல் விலகலிலை யென்றாய் நிராமயமே!**

என்றும், ஹழ்ரத் மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது இர்பானுஸ் ஸபா" என்னும் நூலில்...

**ஆதியே யவ்வலுமாய் ஆகிறும் ழாஹிருமாய்**

**நீதியே பாத்தினுமாய் நிற்பதால் - கோதி**

**அவனை யவனறிந்து மவனையவன் கண்டு**

**மவனாய்நிற் கின்றா னவன்!**

என்றும், தக்கலை பீர் முஹம்மத் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**சரியா மஃரிபத் தேறிப்பாருஞ்**

**சாற்றுங் குருவேறு நாமும்வேறோ**

**வரிய பெரியோனு மலக்குகளு**

**மண்ணல் முஹம்மது நபிமார்களு**

**முரிய படைப்புகள் குலமுநாமு**

**மொன்றே குலமல்லா துபாதியுண்டோ**

**தரத்தில் பெரியவர் சிறியவருந்**

**தன்னை யறிந்தவர் தலைவராமே!**

என்றும் கூறுகின்றனர். உண்மைநிலை இவ்வாறு இருப்பதாலேயே...

قُلُوْبُ الْمُؤْمِنِيْنَ عَرْشُ اللهِ تَعَالٰي

**"விசுவாசிகளுடைய உள்ளம் இறைவனுடைய தெய்வாசன பீடமாகும்"** என்றும்...

مَنْ عَرَفَ رُوْحَهُ فَقَدْ عَرَفَ نَفْسَهُ وَمَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ وَمَنْ عَرَفَ رَبَّهُ جَهِلَ نَفْسَهُ

**“யார் தனது ஆன்மாவை அறிந்தாரோ அவர் தனது நப்ஸை அறிந்தார். யார் தனது நப்ஸை அறிந்தாரோ அவர் தனது ரட்சகனை அறிந்தார். யார் தனது ரட்சகனை அறிந்தாரோ அவர் தன்னை (ஒரு பொருளாக) உணர மாட்டார்“**

என்றும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். மேலும்...

قُلْ لِمَنْ طَلَبَنِيْ وَجَدَنِيْ وَمَنْ وَجَدَنِيْ عَرَفَنِيْ وَمَنْ عَرَفَنِيْ عَشِقَنِيْ وَمَنْ عَشِقَنِيْ اَحَبَّنِيْ وَمَنْ

اَحَبَّنِيْ قَتَلْتَهُ وَاَنَا ذِمَّتَهُ

**“(நபியே! கூறும்) என்னை தேடியவனே என்னை கண்டான். என்னை கண்டவனே என்னை அறிந்தான். என்னை ஆசித்தவனே என்னை நேசித்தான். என்னை நேசித்தவனை நான் கொன்று (என்னில் ஐக்கியமாக்கி) விட்டு அவனுக்கு நான் பொறுப்பாக (நான் அவனாக) இருக்கிறேன்“**

என்பதாக இறைவன் நபியவர்களுக்கு ஹதீதெ குத்ஸியில் கூறுகிறான். மேற்காணும் இந்தத நபிமொழியைக் கொண்டு ஆரிப் காமிலாவதற்கு நடந்து கொள்ள வேண்டிய முறை இதுதான் என்பதையும் இறைநேசர்கள் எனப்படுவோரின் ரகசியம் எந்த மெய்ப்பொருளுக்குரியதாக இருக்கிறதென்பதையும் ஆழமாக சிந்திப்போர் அறிந்து கொள்வர்.

இதில் ஏகத்துவத்திற்குரிய வாடையைக்கூட நுகராத சிலர், வலிமார்கள் இறந்துபோய் விட்டதால் அவர்களுக்கு எந்தவிதமான சக்தியும் இல்லையென்றும், நமது தேவைகளை அவர்களிடம் முறையிடுவது இஸ்லாமியக் கொள்கைக்கு விரோதமானது என்றும் பேசி வருகின்றனர். இதற்குக் காரணம், இவர்கள் ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்தை விட்டும் வெகுதூரம் விலகிப் போய் இறைவனை அறியாது வேற்றுமைக்குரிய கொள்கையில் சிக்கிக் கொண்டிருப்பதேயாகும். இதனாலேயே ஹழ்ரத் மௌலானா ரூமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது மஸ்னவி ஷரீபில்...

یک زمانے صحبت با اولیاء    بہتر از صد سال طاعت بے ریا

**“ஒரு சொற்பகாலம் வலிமார்களின் சகவாசத்தில் இருப்பது நூறுவருடம் கலப்பற்ற வணக்கம் புரிவதைவிட மேலானதாகும்“** என்றும்...

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا بَلْ اَحْيَاءٌ

**“இறைவனுடைய பாதையில் வெட்டப்பட்ட (வேற்றுமையை இன்மையாக்கிய)வர்களை நீங்கள் இறந்தோரென்று எண்ண வேண்டாம். எனினும் அவர்கள் உயிரோடுதான் இருக்கின்றனர்.“**

என்றும் இறைவன் வேதத்தில் குறிப்பிடுகிறான். மேலும்...

اَلَا اِنَّ اَوْلِيَآءَ اللهِ لَا يَمُوْتُوْنَ بَلْ يَنْتَقِلُوْنَ مِنْ دَارٍ اِلٰى دَارٍ

**"இறைவனுடைய வலிமார்கள் இறப்பதில்லை. எனினும் அவர்கள் ஒரு இல்லத்திலிருந்து இன்னொரு இல்லத்திற்கு மாறுகின்றனர்"** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூறுகின்றனர். இன்னும்...

اَلصُّوْفِيَةُ لَا يَمُوْتُوْنَ لٰكِنْ قَدْ غَابُوْا عَنْ اَبْصَارِ الْخَلْقِ لِيُقَعَ عَلَيْهِمْ اِسْمَ الْمَوْتِ

**"சூபியாக்கள் மரணிக்க மாட்டார்கள். எனினும் மரணமென்னும் சொல் அவர்கள் மீது நடத்தப்பட வேண்டுமென்பதற்காக மனிதர்களின் பார்வையை விட்டும் மறைந்து கொள்வார்கள்"**

என்பதாக சூபியாக்கள் கூறுகின்றனர். ஆதலால் யார் தன்னை வெளித்தோற்றத்தில் மட்டும் முஸ்லிமென சொல்லிக் கொண்டு அந்தரங்கத்தில் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை அறியாமல் இருக்கிறாரோ, அவர் இறைவனுடைய "**அஸ்மாவுல் ஹுஸ்னா**" எனப்படும் தொன்னூற்று ஒன்பது திருநாமங்களில் "**அல் வலிய்யு**" என்னும் திருநாமத்திற்குரிய கருத்தை விளங்கிக் கொள்ளவில்லை என்றுதான் கூறுவோம். ஏனெனில் அவர் அறிந்திருப்பாராயின் ரஹ்மான் என்றும், ரஹீம் என்றும், ஹாதி என்றும், கனி என்றும், கரீம் என்றும், ஷாபியீ என்றும், ரஸ்ஸாக் என்றும் அழைத்துப் பிரார்த்தனை செய்தது இறைவனிடம்தான் என்பதை அறிந்திருப்பதைப் போல "**வலி**" என அழைத்துப் பிரார்த்திப்பதும் இறைவனிடம்தான் என்னும் உண்மையை அறிந்திருப்பர். இதைக் குறித்து...

اَللهُ وَلِيُّ الَّذِيْنَ آمَنُوْا يُخْرِجُهُمْ مِنَ الظُّلُمَاتِ اِلَى النُّوْرِ

**"இறைவன் விசுவாசிகளுக்கு வலியாக இருக்கிறான். அவன் எப்படிப்பட்டவன் எனில், அவர்களை இருளிலிருந்து வெளிச்சத்தின்பால் கொண்டு வருவான்"**

என்பதாக இறைவன் கூறியிருப்பதை புரிந்து கொண்டிருப்பார்கள்.

மேலும் ஹழ்ரத் கௌதுல் அஃழம் குத்புல் அக்தாப் சுல்தான் ஸையித் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களும், எண்ணற்ற குத்புமார்களும், வலிமார்களும் இறந்தோரையெல்லாம் உயிர்ப்பித்துள்ளனர். இறந்தோரை உயிர்ப்பித்தலும், உயிரோடு இருப்பவரை இறக்கச் செய்வதும் இறைவனுக்குரிய வல்லமை என்பதாக இறைவேதத்தில் கூறப்பட்டிருப்பதால் மனிதனும் இறந்தோரை உயிர்ப்பித்து விட்டால் அது வேதத்தின் கூற்றுக்கு முரணாகி வேதம் பொய்யென்னும் தோஷம் வந்து சேரும். (நவூதுபில்லாஹ்) இறைவன் நம்மை பாதுகாப்பானாக.

ஆதலால் இறைவன் அவனுடைய வேதத்தில் கூறியிருப்பதற்கு முரணாக எந்தவொரு காரியமும் நடைபெற முடியாததாகையால் அக்கருத்துக்கு முரண்படாவண்ணம் இப்படிப்பட்ட விஷயங்களை நாம் ஆராய்ந்தறிய வேண்டும். எனவே ஹழ்ரத் குத்பு நாயகம்



www.sufimanzil.org

அவர்களுடையவும், மற்ற வலிமார்களுடையவும் மனிதப் பண்பானது இறைவனில் அழிந்துபோன பின் இருப்பது இறைவனேயன்றி வேறல்லவாதலால் அந்தந்த மழ்ஹர்களில் அவன் தனது நாமங்கள் மற்றும் குணாதிசியங்களை கொண்டு வெளியாகி உயிர்ப்பித்தது இறைவனேயன்றி வேறில்லை. ரகசியம் இவ்வாறு இருப்பதாலேயே ஹழ்ரத் குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்...

أَنَا الذَّاكِرُ الْمَذْكُوْرُ ذِكْرًا اَلذَّاكِرًا أَنَا الشَّاكِرُ الْمَشْكُوْرُ شُكْرًا بِنِعْمَتِيْ أَنَا الْعَاشِقُ الْمَعْشُوْقُ فِيْ

كُلِّ مُضْمَرٍ أَنَا السَّامِعُ الْمَسْمُوْعُ فِيْ كُلِّ نِعْمَتِيْ

**“நான் திக்ரு செய்பவனாகவும் திக்ரு செய்யப்பட்டவனாகவும் திக்ரு செய்வோனுக்கு திக்ராகவும் இருக்கிறேன். இன்னும் நான் ஷுக்ரு செய்பவனாகவும் எனது நிஃமத்தைக் கொண்டு ஷுக்ராகவும் இருக்கிறேன். இன்னும் நான் எல்லா உள்ளங்களையும் நேசிப்பவனாகவும், நேசிக்கப்பட்டவனாகவும் இருக்கிறேன். இன்னும் எனது நிஃமத்துகளை வேண்டுபவனாகவும் வேண்டப்பட்டவனாகவும் இருக்கிறேன்“** என்றும்...

أَنَا السِّرُّ مَعْنَي السِّرِّ فِيْ لَفْظِ قَوْلِهِ وَيَخْلُقُ مَالَا تَعْلَمُوْنَ بِحِكْمَةِ

وَأَمْرِيْ أَمْرُ اللهِ اِنْ كُنْتَ كُنْ يَكُنْ وَكُلٌّ بِاَمْرِ اللهِ اَحْكُمُ بِقُدْرَةِ

**“நான் நீங்கள் அறியாத ஒன்றை இறைவன் அவனுடைய ஹிக்மத்தைக் கொண்டு உருவாக்குபவன் எனக் கூறியுள்ள சொல்லின் ரகசியமாகவும் அந்த ரகசியத்தின் அந்தரங்கமாகவும் இருக்கிறேன். இன்னும் எனது கட்டளையானது இறைவனுடைய கட்டளையாகும். நான் ஆகு என்று சொன்னால் அது உடனே ஆகிவிடும். மேலும் இறைவனது கட்டளையைக் கொண்டும் அவனுடைய ஆற்றலைக் கொண்டும் சிருஷ்டிகளனைத்துக்கும் நான் நீதி வழங்குபவனாகவும் இருக்கிறேன்“** என்றும் கூறியுள்ளனர். மேலும்...

لَاتَتَحَرَّكُ ذَرَّةٌ اِلَّا بِاِذْنِ اللهِ

**“இறைவனின் அனுமதியின்றி ஒரு அணுகூட அசையாது“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்.

ஆதலால் மேற்காணும் வாக்கியங்களின் உண்மையான கருத்தை இறைவனை அறிந்த ஞானவான்களே அறிவர். இதுதான் வேதத்தின் கருத்துக்குச் சரியான கருத்தாகும். இவ்வாறு அறியாதவர்கள் வேதத்திற்கு தமது மனம்போன போக்கில் பொருள் கூறிக் கொண்டுள்ளனர். பின்னும் இவர்கள் இறைநேசர்களை குறித்து தவறாக எண்ணியதும் பேசியதும் எந்த அசலில்

போய் சேருகிறது என்னும் ரகசியத்தை இனியேனும் இவர்கள் ஆராய்ந்துணர்ந்து இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி தங்களின் தீய கொள்கையை விட்டும் நீங்கி ஏகத்துவத்திற்குரிய உலமாக்களிடம் இதுகுறித்த விளக்கங்களை கேட்டறிந்து தங்களின் விசுவாசத்தை புதுப்பித்து தங்களை காப்பாற்றிக் கொள் வேண்டும். இனி யார் மந்த புத்தியுள்ளவராகவும் ஏகத்துவத்திற்குரிய கருத்தை விளங்கிக் கொள்ளும் ஆற்றலில்லாதவராகவும் இருக்கிறாரோ அக்கல்வியின் தரத்தை புரிந்து கொள்ள மாட்டார். இதனாலேயே இமாம் ஜைனுல் ஆபிதீன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்...

اِنِّيْ لَاَكْتُمُ مِنْ عِلْمِيْ جَوَاهِرَهُ كَيْلَا يَرَى الْحَقَّ ذُوْ جَهْلٍ فَيُفْتِنَنَا

**“மடையர்கள் இறைவனை அறிந்து கொள்ளக் கூடாதென்பதற்காகவே ரத்தினங்களை போலுள்ள கல்விகளையெல்லாம் நான் மறைத்துக் கொண்டேன். ஏனெனில் அவர்கள் நம்மை வம்பிலும் வழக்கிலும் இழுத்து விட்டு விடக் கூடாதென்பதற்காக“** எனக் கூறுகின்றனர்.

**இறைவனல்லாதது எதுவுமே இல்லை**

هُوَ الْاَوَّلُ وَالْاٰخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ

**“அவனே முன்னவன். அவனே பின்னவன். அவனே வெளியீடானவன். அவனே அந்தரங்கமானவன்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இனி இந்த வசனத்தின் கருத்தை நாம் ஆழமாகக் கவனிக்கும்போது அரூப அம்சமும் ரூப அம்சமும் இறைவனாகவே இருக்கிறதென்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. இன்னும்..

لَيْسَ فِى الدَّارَيْنِ اِلَّا هُوَ

**“இரு லோகத்திலும் அவனையன்றி வேறு யாருமில்லை“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூறியிருப்பதால் முன்னும், பின்னும், உள்ளும், புறமும் இறைவனை அன்றி வேறு எதுவுமே இல்லையென்னும் கருத்தை நபியவர்களின் இந்த நபிமொழி நமக்குத் தெளிவுபடுத்துகிறது. மேலும் ஹழ்ரத் தின்னூனில் மிஸ்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்...

اَلتَّوْحِيْدُ اَنْ تَعْلَمَ لَيْسَ فِى السَّمٰوَاتِ الْعُلٰى وَلَا فِى الْاَرَضِيْنَ السُّفْلٰى مُدَبِّرٌ غَيْرُ اللهِ تَعَالٰى

**“ஏகத்துவம் என்பது மிகவுயர்ந்த விண்ணிலும் கீழான பூமியிலும் ஏன்! பாதாளம் வரைகூட இறைவனல்லாத ஒன்றிருந்து ஆட்சி நடத்தவில்லை என்பதை நீ அறிந்து கொள்வதாகயிருக்கும்“**

என்றும், ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்…

**ஊணாகி யூணிலுயி ராகியெவ்**

**வுலமா யெர்றா யிரண்டுமாகி**

**உள்ளாகி வெளியாகி யொளியாகி**

**யிருளாகி யூருடன் பேருமாகி**

**கானாகி மலையாகி வளைகடலு**

**மாகிமலை கானக விலங்குமாகிக்**

**கங்குல்பக லாகிமதி யாகிரவி**

**யாகிவெளி கண்டபொரு ளெவையுமாகி**

**நானாகி நீயாகி யவனாகி**

**யவளாகி நாதமொடு பூதமாகி**

**நாடுமொளி புரியவடி யேனுமுமை**

**நம்பினே னன்மைசெய் தாளுதற்கே**

**வானோரு மடிபணித லுள்ளநீர்**

**பின்தொடர வள்ளலிர ஸூல்வருகவே**

**வளருமரு ணிறைகுணங் குடிவாழு**

**மென்னிருகண் மணியே முஹ்யித்தீனே!**

என்றும், மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்…

**வீணிற் திரிந்தலை யாதே – உன்னை**

**விட்டுப் புறம்பிலே ரப்பைத் தேடாதே**

**காணவுன் னால்முடியாதே – உன்னைக்**

**காட்டு முர்ஷிதை தேடிடிப் போதே!**

என்றும் கூறுகின்றனர். மேலும்...

اِنَّ اللهَ تَعَالٰى يَقُوْلُ لِعَبْدِهٖ مَرِضْتُ فَلَمْ تَعِدْنِيْ وُجِعْتُ فَلَمْ تُطْعِمْنِيْ وَسَئَلْتُكَ فَلَمْ تُعْطِنِيْ اِلٰى

آخِرِهٖ

**“நான் நோய்வாய்பட்டிருந்தேன். நீ எனது நோயை விசாரிக்க வரவில்லை. நான் பசியோடு இருந்தேன். நீ எனக்கு உணவளிக்கவில்லை. நான் கேட்டேன். நீ எனக்குக் கொடுக்கவில்லை“**

என்பதாக இறைவன் ஹதீதே குத்ஸியில் கூறுகிறான். சிருஷ்டிகளுக்குரிய இப்பண்புகளை எல்லாம் இறைவன் தன் பக்கமாகக் கூறியிருப்பதற்குக் காரணம்இ படைப்பென்ற தோற்றமும் அவனாகவே இருப்பதால்தான். இதனாலேயே...

اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ

**“உஷார்! படைப்புக்களின் செயல்களும் (ரூஹுடைய ஹகீகத்தும்) இறைவனுக்கே உரியது“**

என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறுகிறான். இன்னும்...

لَا يَزَالُ عَبْدِيْ يَتَقَرَّبُ اِلَيَّ بِالنَّوَافِلِ حَتّٰى اُحِبَّهُ فَاِذَا اَحْبَبْتُهُ كُنْتُ سَمْعَهُ الَّذِيْ يَسْمَعُ بِهٖ وَبَصَرَهُ

الَّذِيْ يَبْصُرُ بِهٖ وَيَدَهُ الَّتِيْ يَبْطِشُ بِهَا وَرِجْلَهُ الَّتِيْ يَمْشِيْ بِهَا

**“எனது அடியான், அவனை நான் உகந்து கொள்ளும்வரை நபிலான வணக்கங்களை கொண்டு இடைவிடாது என்னை நெருங்கிக் கொண்டிருப்பான். எப்போது நான் அவனை உகந்து கொள்வேனோ அப்போது நான் அவனுடைய கேள்வியாகவும் அவன் பார்க்கும் பார்வையாகவும் அவன் பிடிக்கும் கையாகவும் அவன் நடக்கும் காலாகவும் ஆகி விடுகிறேன்“**

என்பதாக இறைவன் ஹதீதே குத்ஸியில் கூறுகிறான். மேலும் நமது கண்களுக்கு குளிர்ச்சியான எஜமான் ஸையிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அண்ணலெங்கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவன் அறிவித்ததாகக் கூறுவது யாதெனில்...

يَاغَوْثُ الْاَعْظَمُ مَا اَكَلَ الْاِنْسَانُ شَيْئًا وَمَا شَرِبَ وَمَا قَامَ وَمَا قَعَدَ وَمَا نَطَقَ وَمَا صَمَتَ وَمَا فَعَلَ

فِعْلًا وَمَا تَوَجَّهَ اِلٰى شَيْءٍ اِلَّا اَنَا فِيْهِ سُكُوْنَهُ وَمُحَرِّكُهُ وَمُسَكِّنُهُ

**“கௌதுல் அஃலமே! மனிதன் ஒருபொருளை திண்பதில்லை. ஒரு பானத்தை குடிப்பதில்லை. எழுவதும் இல்லை. அமர்வதும் இல்லை. பேசுவதும் இல்லை. மௌனமாக இருப்பதும் இல்லை. ஒரு காரியத்தை செய்வதில்லை. ஒன்றை விட்டு மறைவதில்லை. நான் அவனை அதில் அடங்கச் செய்பவனாகவும் உசும்பச் செய்பவனாகவும் இருந்தேயொழிய“** என்று கூறுகிறான்.

ஆதலால் மேற்கண்ட ஆதாரங்களைக் கொண்டு இறைவனல்லாதது எதுவுமே இல்லை என்னும் ஏகத்துவத்திற்குரிய கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**கலிமாவை ஏற்றோர் கடைபிடிக்க வேண்டிய முறை**

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ

**“(நபியே! கூறும்) நீங்கள் இறைவனை நேசிப்பவர்களாயின் என்னை பின்பற்றுங்கள். அவ்வாறாயின் இறைவன் உங்களை நேசிப்பான்“** என்றும்...

مَنْ يُّطِعِ الرَّسُوْلَ فَقَدْ اَطَاعَ اللهَ

**“யார் இறைதூதருக்கு வழிப்பட்டாரோ திடனாக அவர் இறைவனுக்கே வழிப்பட்டார்“**

என்றும் இறைவன் தனது வேதத்தில் குறிப்பிடுகிறான். இந்த வசனத்தில் இறைவனை நேசித்தல் என்பதன் கருத்துஇ முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உளமாற நேசித்து அவர்களின் நடைமுறைகளை பின்பற்றி வருவதே என்றும், நபியவர்களுக்கு வழிப்படுதல் இறைவனுக்கு வழிப்படுவதாகவே இருக்கிறதென்றும் தெரியவருவதால் முதலில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எதார்த்தமென்ன என்பதை தெரிந்து அவர்களை சொல்லாலும் செயலாலும் வெளிரங்கத்தாலும் அந்தரங்கத்தாலும் பின்பற்றி நடப்பதை வைராக்கியத்தோடு பிடித்துக் கொண்டு வஹ்தத்துல் உஜூதை(உண்மைத் தோற்றம் ஒன்றே) என்பதை முறாகபா செய்துவர வேண்டும்.

இதில் முறாகபா என்பதற்கு பல்வேறு கருத்துக்கள் உள்ளன. இதைக் குறித்து சில ஞானவான்கள் கூறுவது யாதெனில்இ தனக்குள்ளிருந்து வெளிப்படும் தத்துவங்கள் அனைத்தும் இறைவனுடைய தத்துவமென்றும் செயல் என்றும் தானும் சர்வமும் இறைவன் தானென்றும் உள்ளத்தைக் கொண்டு சதா நோட்டமிட்டுக் கொண்டிருப்பதற்கு முறாகபா என்று சொல்லப்படும். இவ்வாறு செய்துவந்தால் நம்மிடமுள்ள வேற்றுமை என்னும் தீய குணங்களனைத்தும் அகன்று பரிசுத்தமான ஹக்கானிய்யத்தின் குணம் உண்டாகும்.

மேற்காணும் முறைப்படி முறாகபா செய்வதற்கு ஒழு இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஒழு இருந்தால் நல்லது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் முறாகபா செய்ய வேண்டுமென்ற ஷரத்தும் இல்லை. இதேபோல சுவாம் உள்ளே செல்லும்போதும் வெளியேறும்போதும் முறாகபா செய்தல் சிறப்பு என்ற கட்டாயமும் இல்லை. ஆனால் இறைவனுக்கு நாம் அன்னியம் என்னும் வேற்றுமையை மட்டும் நம்மை விட்டும் நீக்கி நம்மை இறைவனுடைய தோற்றம் என்பதாக உறுதியாக நம்ப வேண்டும். மேலும் இந்த நிலையில்தான் முறாகபா செய்ய வேண்டும் என்ற கட்டாயமும் கிடையாது. நிற்கும்போதும், அமர்ந்திருக்கும்போதும், நடக்கும்போதும், படுத்துக் கொண்டிருக்கும்போதும், வியாபாரம் செய்யும்போதும், உண்ணும்போதும், குடிக்கும்போதும், மலஜலம் கழிக்கும்போதும், உறவு கொள்ளும் போதும் என எல்லா நிலைகளிலும் முறாகபா செய்யலர். இதைக் குறித்து...

اِنَّ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ اللَّيْلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِي الْاَلْبَابِ الَّذِيْنَ يَذْكُرُوْنَ

اللّٰهَ قِيَامًا وَّقُعُوْدًا وَّعَلٰى جُنُوْبِهِمْ

**"வானம், பூமி போன்ற படைப்புக்களின் சிருஷ்டிப்பிலும் இரவு பகலின் வேறுபாட்டிலும் அறிவாளர்களுக்கு மெய்யாகவே அத்தாட்சிகள் உள்ளன. அவர்கள் நின்றிருக்கும்போதும் அமர்ந்திருக்கும் போதும் படுத்திருக்கும் போதும் இறைவனை தியானம் செய்வார்கள்"** என்றும்...

وَاذْكُرْ رَبَّكَ فِيْ نَفْسِكَ تَضَرُّعًا وَّخِيْفَةً وَّدُوْنَ الْجَهْرِ مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ وَالْاٰصَالِ وَلَا تَكُنْ مِّنَ

الْغَافِلِيْنَ

**"உள்ளத்தின் உருக்கத்தோடும் பயபக்தியோடும் சொல்லில் சப்தமின்றி காலையிலும், மாலையிலும் உள்ளத்தால் உமது நாளை தியானிப்பீராக. மேலும் நீர் மறதியாளர்களில் நின்றுமிருக்க வேண்டாம்"**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இன்னும்....

اَفْضَلُ مَاقُلْتُ اَنَا وَالنَّبِيُّوْنَ مِنْ قَبْلِيْ لَا اِلٰهَ اِلَّا اللّٰه

**"என்னிடமும் எனக்கு முன்னுள்ள நபிமார்களிடமும் சொல்லப்படும் வார்த்தைகளில் மிகச்சிறந்த வார்த்தையானது லா இலாஹ இல்லல்லாஹ்(என்னும் கலிமா)வாகும்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். மேலும் இதைக் குறித்து ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**என்ன விதமென்று சொல்வேன் முழக்க**

**முழங்குவ தெனக்குள் ளாலே – ஒரு**

**அன்ன மிருந்தே யழகு பிறக்க**

**அசைந்தசைந் தாடுவ தாலே – அதன்**

**முன்னாலே யான்செய்த பாக்கியம் கண்டு**

**மூன்றாசை யில்லாத தாலே- அது**

**தன்னாலே யானந்த வெள்ளம் பெருகித்**

**தடையறப் பாய்வத னாலே – பயிர்**

**அன்னம் பிடிப்பத னாலே – உனக்**

**கென்ன குறைலா இலாஹ**

**இல்லல்லா ஹுவென் றென்னை மறந்துகொண்**

**டிருப்பா யென்னெஞ்சமே!**

என்றும் கூறுகின்றனர். மேலும்...

வேற்றுமை என்னும் சிருஷ்டிக்கு சிருஷ்டிகர்த்தா வேறு என்னும் கொள்கையை நீக்கி **லா இலாஹ இல்லல்லாஹ்** என்னும் ஏகத்துவக் கலிமாவை அப்பியசிக்கும்போது நமது உள்ளத்தில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் அறவே இடம் கொடாமல் திடனாக நான் இறைவனுக்கு வேறல்ல. அவன்தான் இருக்கிறான் என உறுதியாக நம்ப வேண்டும்.

இனி வேறொரு வகை முறாகபா என்னவெனில், எதைப் பற்றியும் சிந்திக்காமல் எந்தவொரு நாட்டமுமின்றி நினைவற்று இருப்பதாகும். இதனை மகான்கள் “**சும்மா இருக்கும் நிலை**“ என்றும், “**மகத்தான சாதனை**“ என்றும் கூறுகின்றனர். இதைப்பற்றி...

**நினைவின்றி நிற்பதுவே அகண்டமாகும்**

**நினைவின்றி நிற்பதுவே நிஷ்டையாகும்**

**நினைவின்றி நிற்பதுவே ஞானமாகும்**

**நினைவின்றி நிற்பதுவே மோட்சமாகும்**

என்பதாக ஒரு ஞானி கூறுகிறார். இன்னும் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள், **“நானினைவு மற்றுய்வனோ“** எனக் கூறியுள்ளதையும்

இங்கேநாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்னும் இதைப்பற்றி ஹழ்ரத் முஹம்மத் தாஹிர் ஆரிப்பில்லாஹ் அவர்கள் **“தமது கடவுள் தூதும் அவர் வாக்கியமும்“** என்னும் நூலில்...

**“அப்பியாசங்களில் யோகம் வேண்டாம். அதில் கணக்கில்லாத ஆபத்துகள் இருக்கின்றன. உனது உள்ளத்தை வசப்படுத்தி உனது சிந்தனையை வலுவாக்கிக் கொள்ள எத்தனையோ அப்பியாசங்கள் உள்ளன. உனது மனதை கொஞ்சம் கூட அசையாமல் செய்வதற்கு நான் ஒரு வழியைசல் சொல்கிறேன். இது மகான்களின் ரகசியம். வேதங்களின் முடிவு. அனைத்தையும் விடச் சிறந்தது. இதை தகுதி இல்லாதோருக்கு சொல்லி கொடுக்க அனுமதியில்லை. இதில் உனக்கு சந்தேகம் வருமாயின் அது உனது துர்பாக்கியமே. சத்தியமாகச் சொல்கிறேன். பெரும்பாலோர் இதனுடைய உண்மை நிலையை அறியவில்லை. அதாவது, நீ உனது தேகத்தையும் உலகிலுள்ள உல்லா வஸ்துக்களையும் உனது உள்ளத்தை கொண்டு அழித்து மேல், கீழ், முன், பின் என்னும் திசைகளற்ற முடிவில்லாத ஆகாயமாக இருந்து கொள்.**

**அப்போது உனது உள்ளத்தில் பல்வேறு உருவங்களும் எண்ணங்களும் ஓடிவரும். அதை நாசம் செய்து கொண்டிரு. சில காலத்திற்குப் பின் உனக்கு சிறிது நாசமுண்டாகும். அதற்கு மேல் ஒரு சப்தம் வரும் அதையே கேட்டுக் கொண்டு வா. அதில் உனது சுவாசம் அழிந்து போகும். அந்த சப்தம் உனக்குள் எப்போதும் மாறாமல் கேட்டுக் கொண்டே இருக்கும். முடிவில் அந்த சப்தமாகவே நீ மாறி விடுவாய்.**

**அதற்குமேல் அஞ்ஞானமாகிய இருள் திரையை கடப்பாய். பின்னர் ஞானமாகிய ஒளியின் திரையை கடப்பாய். பின்னர் சிருஷ்டி மயமாகிய பார்வையின் திரையை கடப்பாய். பின்னர் ஆசையாகிய இச்சையின் திரையை கடப்பாய். அதற்குமேல் பூரணத்துவத்தை அடைவாய். இதனிடையே எண்ணற்ற சூட்சமத்திற்குரிய உலகங்களை எல்லாம் பார்ப்பாய். வானவர்களையும் மகான்களின் ஆத்மாக்களையும் பார்ப்பாய். அதைக் கொண்டு உனக்கு சத்சங்கல்பம் உண்டாகும்.**

**அதன்பின் உனது எண்ணத்திற்கு மாறாக எதுவுமே நடக்காது. எல்லா சித்துக்களுக்கும் நீயே ஆதாரமாவாய். நீயே கடவுளாக இருப்பாய். உனது மகத்துவத்தை யாரால் சொல்ல முடியும்? மண்ணை பொன்னாக்குவாய். பொன்னை மண்ணாக்குவாய். இதற்குமேல் உனக்கு தவமில்லை. மற்ற அப்பியாசங்களை கொண்டு நீ சில பதவிகளைத்தான் பெற முடியும். எல்லாப் பதவிகளையும் பெறமாட்டாய். நீ வைரத்தை ஒரு சாதாரணக் கல்லாகவும் முத்தை நத்தையாகவும் நினைத்து இதை தோற்று விடாதே. இதை வாயால் அபவிக்குகளுக்கு சொல்வதே பெரும் பாவமாகும்“**

எனக் கூறுகின்றனர். இந்த அப்பியாசம் தான் எல்லா அப்பியாசங்களை விட மிக மிக முக்கியமானதாகும் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகும். இன்னும் இந்த அப்பியாசத்தை மேற்கொள்வோர் இயன்றவரை ஒரு தனி இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறப்பாகும்.

**உஜூத் ஒன்றே**

"**துஹ்பத்துல் முர்ஸலா**" என்னும் நூலில் உஜூத் என்னும் உள்ளமைக்குரிய தோற்றத்தை குறித்து கூறப்பட்டுள்ள சில விஷயங்களை உங்களின் பார்வைக்கு தருகிறோம். உஜூத் என்னும் உள்ளமைக்குரிய தோற்றம் ஒன்றுதான். ஆனால் அதனுடைய உடைகள் தான் பல்வேறு வகைகளாக நாமங்கள் தோற்றங்கள் என்னும் பெயரில் காணப்படுகின்றன. இன்னும் அந்த உஜூதென்னும் உள்ளமைக்குரிய தோற்றம்தான் சகல சிருஷ்டிகளின் அந்தரங்க பகிரங்கத்திற்கு ஹகீகத்தாகிய மூலமாக இருக்கிறது. அணுமுதல் சர்வ சிருஷ்டிகளும் அந்த உள்ளமைக்குரிய தோற்றத்தை விட்டும் தனிமைப்பட முடியாது.

இதில் இறைவனை சமீபித்தல் என்பது இரு வகைப்படும். ஒன்றுக்கு "**குர்பு நவாபிலி**" என்றும், மற்றொன்றுக்கு "**குர்பு பராயிலி**" என்றும் சொல்லப்படும். இதில் குர்பு நவாபிலி என்பது ஸிபத்துல் பஷரிய்யா என்னும் மனிதப் பண்புகளனைத்தும் ஒருவனை விட்டும் நீங்கி இறைவனுடைய பண்புகள் அவனில் வெளிப்படுவதாகும். அப்போது அவன் இறைவனுடைய கட்டளையை கொண்டு இறந்தோரை உயிர்ப்பிப்பான். உயிரோடு இருப்போரை இறக்கச் செய்வான். கண், காதைக் கொண்டு மட்டுமின்றி சர்வாங்கத்தாலும் பார்ப்பான், கேட்பான். இவ்வாறே பார்ப்பவைகளை தொலைவிலிருந்தும் பார்ப்பான். கேட்பவைகளை தொலைவிலிருந்தும் கேட்பான். இதுபோன்றே மற்ற பண்புகளையும் ஊகித்துக் கொள்க. இதுதான் இறைபண்பில் மனிதனுடைய பண்பு அழிந்து போகுதல் என்பதன் பொருளாகும்.

அடுத்து குர்பு ஃபராயிழி என்பது, மனிதன் அனைத்தையும் மறந்து தன்னையும் மறந்து இறைவனுடைய தோற்றத்தை தவிர வேறு எதுவுமே அவனது பார்வையில் படவில்லை என்னும் அளவுக்கு இறைவனில் ஐக்கியமாகி விடுவதாகும். இதுதான் அடிமை இறைவனில் அழிந்து போகுதல் என்பதாகும். அதாவது வெட்ட வெளியில் ஐக்கியமடைவதாகும்.

இந்நிலையில் வஹ்தத்துல் உஜூதை ஒப்புக் கொண்டோரில் சிலர் இறைவனை அனைத்து சிருஷ்டிகளுடையவும் அவைகளின் அந்தரங்கத்தை உடையவுமான ஹகீகத்தென சந்தேகமின்றி தங்களின் திட அறிவைக் கொண்டு அறிந்துள்ளனர். அதேநேரம் அவர்கள் இறைவனை சிருஷ்டிகளில் ஷுஹூது செய்ய மாட்டார்கள்.

வேறுசிலர் உள்ளத்தை கொண்டு ஹாலிய்யாவா ஷுஹூதாக இறைவனை உள்ளத்தில் ஷுஹூது செய்வார்கள். இது முந்திய படித்தரத்தை விட சிறந்ததும் உயர்ந்ததுமாகும்.

இன்னும் சிலர் இறைவனை படைப்புக்களிலும் படைப்புக்களை இறைவனிலும் ஷுஹூது செய்வதில் ஒன்று மற்றொன்றை தடுக்காத வண்ணம் ஷுஹூது செய்வார்கள். இது முந்தைய இரு படித்தரங்களை விட சிறந்ததும் உயர்ந்ததுமாகும். மேலும் இது நபிமார்களுடைய படித்தரமாகும். நபிமார்களை பின்பற்றுவதைக் கொண்டு இந்தப் படித்தரம் குத்புமார்களுக்கும் வாய்க்கிறது.

இன்னும் மவ்ஜூதாத் என்னும் சிருஷ்டிகளனைத்தும் இறைவனுடைய உஜூதெனும் தரப்பில் அவை இறைவனாகத்தான் இருக்கின்றன. அதேநேரம் அவைகள் கண்டங்கள் என்னும் தரப்பில் இறைவனுக்கு வேறாகவும் இருக்கின்றன. இந்த வேறு என்பது எதார்த்தமல்லாத வெறும் கற்பனைதான். அதேநேரம் கற்பனைக்கு ஆதாரம் எதார்த்தம் தான் என்பதை நோக்க சர்வமும் அந்த மெய்ப்பொருளாகவே இருக்கிறது என்பதாம்.

ஆக மேற்கண்ட விளக்கங்களை கொண்டு ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான அர்த்தமும் கருத்தும் இறைவனென்னும் படைப்பென்றும் நாமங்கள் தரித்து சர்வமுமாக இருப்பது இறைவனை அன்றி அவனுக்கு அன்னியம் என்பது அறவே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**ஷைகிடம் பைஅத்துப் பெறுவதன் அவசியம்**

இதுவரை நாம் மேலே எடுத்துக் கூறியவாறு ஏகத்துவத்தில் பூரணமடைய வேண்டுமாயின் காமிலான ஒரு ஷைகிடம் பைஅத்துப் பெறுவது அவசியமாகும். ஏனெனில்...

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللّٰهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ

**“விசுவாசிகளே! இறைவனை அஞ்சுங்கள். இன்னும் உண்மையாளர்களோடு இணைந்திருங்கள்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இந்த வசனத்திற்கு **“தப்ஸீர் ரூஹுல் பயான்“** என்னும் நூலில்...

**“விசுவாசம் கொண்டவர்கள் என்பதன் கருத்து, கலிமாவை நாவால் மொழிவதோடு உள்ளத்தைக் கொண்டும் உண்மையாக்கி வைத்தவர்களாகும். அடுத்து இறைவனை அஞ்சுங்கள் எனக் கூறப்பட்டதன் கருத்து, இறைவனுக்கு பொருத்தமில்லாத காரியங்களிலாகும். இவ்வாறே உண்மையாளர்கள் என்பது இறைவனில் சேர்த்து வைக்கக் கூடிய பாதையில் வழிகாட்டக் கூடிய ஷைகுமார்களாகும். ஆதலால் இறைவனைத் தேடுபவர் இந்த ஷைகுமார்களை அண்மித்து அவர்களுக்கு ஊழியம் செய்வாராயின் அவர்களுடைய நேசத்தை கொணடும் பயிற்சியை கொண்டும் விலாயத்துடைய பலத்தை கொண்டும் இறைவனுடைய பாதையில் நடந்து அவனல்லாததை விட்டொழித்து உயர்ந்த பதவியை பெற்றுக் கொள்வார்“**

மேலும் அந்த தப்ஸீரில் ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறியுள்ளதாக கூறப்பட்டுள்ளது யாதெனில்...

**“உஜூது இலாஹியை கொண்டு உனது தன்மயம் பூரணமடைவதற்காக உனக்குள் எழும் பல ஊசாட்டங்களை தடுத்து உன்னை நேர்வழியில் நடத்தக்கூடிய ஒரு ஷைகை தேடிக் கொள். அவ்வாறு ஒரு ஷைகை தேடி பெற்றுக் கொள்வாயாயின் அவரது மகத்துவம் உனக்குள் உண்டாகி விலாயத்துடைய பதவியை பெற்றுக் கொள்வாய்“**

எனக் கூறப்பட்டுள்ளது. இன்னும்...

اَلشَّيْخُ فِيْ قَوْمِهِ كَالنَّبِيِّ فِيْ اُمَّةٖ

**“ஒரு கூட்டத்திற்கு ஷைகாக இருப்பவர் ஒரு சமூகத்திற்கு நபியாக இருப்பவரை போன்றவராகும்“** என்றும்...

مَنْ لَّا شَيْخَ لَهُ فَشَيْخُهُ الشَّيْطَانِ

**“யாருக்கு ஷைகில்லையோ அவருடைய ஷைகு ஷைத்தானாகும்“**

என்றும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளனர். மேலும் சுல்தானுல் ஆரிபீன் ஹழ்ரத் பாயஸீத் பிஸ்தாமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

مَنْ لَّمْ يَكُنْ لَهُ اُسْتَاذٌ وَاِمَامَهُ الشَّيْطَانِ

**“யாருக்கு ஆசிரியர் இல்லையோ அவனுடைய ஆசிரியர் ஷாத்தானாகும்“**

என்றும், ஹழ்ரத் இப்றாஹீம் முத்தஸூகி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாக அல்லாமா அப்துல் வஹ்ஹாப் ஷ:ரானி ரஹிமஹுல்லாஹ்,

طَلَبُ الشَّيْخَ فِى الطَّرِيْقَةِ وَاجِبٌ عَلٰى مُرِيْدٍ وَلَوْكَانَ مِنْ اَكَابِرِ الْعُلَمَاءِ

**“மார்க்கத்தில் ஒரு ஷைகை தேடுவது முரீதின் மீது வாஜிபாகும். அவர் உலமாக்களுக்கு எல்லாம் தலைவராக இருந்தாலும் சரியே“**

என்றும், இமாம் ஜுனைதுல் பகுதாதி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

يَجِبُ عَلَى الْمُرِيْدِ اَنْ يَّتَاَدَّبَ بِشَيْخٍ فَاِنْ لَّمْ يَكُنْ لَهُ اُسْتَاذٌ لَا يُفْلَحُ اَبَدًا

**“ஷைகுக்கு வழிப்பட்டு நடப்பது முரீதின் மீது வாஜிபாகும். அவனுக்கு ஆசிரியர் இல்லையேல் அவன் ஒருபோதும் வெற்றி பெற மாட்டான்“**

என்றும், ஹழ்ரத் மன்ஸூர் பின் ஹல்லாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

يَشْهَدُ الْمُسْلِمُوْنَ بِكَلِمَةِ الشَّهَادَةِ اِفْتَرَاءً عَلَى الشَّرِيْفَةِ الْمُحَمَّدِيَّةِ يَعْنِيْ مَنْ لَّا يَتَّبِعُ بِشَيْخٍ مُرْشِدٍ لَّمْ يَصِحَّ اِيْمَانُهُ فِيْ مَذْهَبِنَا لِاَنَّهُ لَا يَعْرِفُ حَقِيْقَةَ الشَّهَادَةِ وَلَا يَعْلَمُ مُشَاهَدَةَ الْحَقِّ وَلَمْ يُوَحِّدَ اللهَ بِوَحْدَانِيَّتِهِ وَلِاَجْلِ ذَالِكَ اَنَّهُمْ مُشْرِكُوْنَ عِنْدَ الْمُحَقِّقِيْنَ فَيَجِبُ عَلَى الْاِنْسَانِ اَنْ يَّعْرِفَ الْحَقَّ فَلَا يَحْصُلُ الْمَعْرِفَةَ اِلَّا بِالشَّيْخِ الْمُرْشِدِ

**“முஸ்லிம்கள் முஹம்மதிய்யாவுடைய மார்க்கதில் இருப்பதாக பொய்சாட்சி கூறுகின்றனர். அதாவது, யார் நேர்வழியில் நடத்தும் ஒரு ஷைகை பின்பற்றவில்லையோ அவருடைய**

**விசுவாசம் நமது மத்ஹபில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. காரணம் அவர் கலிமா ஷாஹதத்துடைய எதார்த்தத்தையும் இறைவனை தரிசிப்பதற்குரிய விபரத்தையும் அறிய மாட்டார். இன்னும் இறைவனை ஒன்றுபடுத்துவது கொண்டு ஏகத்துவமாக்கவும் மாட்டார். இதன் காரணமாக இத்தகையோர் திட ஞானிகளிடத்தில் இணை வைப்போராக இருக்கின்றனர். மேலும் இறைவனை அறிவது மனிதன் மீது கடமையாகும். ஒரு காமிலான ஷெய்கை பின்பற்றினாலே ஒழிய இறைவனை அறியும் ம:ரிபா என்பது சாத்தியமாகாது"**

என்றும், பஹ்ருல் உலூம் அல்லாமா ஜலாலுத்தீன் ரூமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்கள் "மத்னவி ஷரீப்"பில்...

شیخ نورانی ز حق آگاه کند   با سخن هم نور را هم راه کند

**"நூரானியத்துடைய ஷைகானவர் இறைவனைக் கொண்டு உணர்ச்சியூட்டக் கூடியவராக இருக்கிறார். இவ்வாறே பேச்சைக் கொண்டும் ஒளியைக் கொண்டும் வழிகாட்டக் கூடியவராகவும் இருக்கிறார்"** என்றும்...

پیر راه ذات خدارا ایک نه دید
نه مریدو نه مریدو نه مرید

**"யார் தனது ஷைகையும் இறைவனுடைய தன்மயத்தையும் ஒன்றெனக் காணவில்லையோ அவர் முரீதல்ல! முரீதல்ல! முரீதல்ல!"** என்றும் கூறுகின்றனர். மேலும்...

لَا يَتِمُّ الْاِيْمَانُ اِلَّا بِمُرْشِدٍ

**"முர்ஷித் இல்லையேல் விசுவாசம் பூரணமாகாது"** என்றும்...

مَنْ لَّا لَهُ شَيْخٌ فَلَا لَهُ نَبِيٌّ وَمَنْ لَّا لَهُ نَبِيٌّ فَلَا لَهُ دِيْنٌ وَمَنْ لَّا لَهُ دِيْنٌ فَلَيْسَ لَهُ حَقٌّ

**"யாருக்கு ஷெய்கு இல்லையோ அவனுக்கு நபியில்லை. இனி யாருக்கு நபியில்லையோ அவனுக்கு மார்க்கமில்லை. இனி எவனுக்கு மார்க்கமில்லையோ அவனுக்கு ஹக்கும் இல்லை"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இதுபோன்றே பெரிய நூஹ் வலியுல்லாஹ் அவர்கள்...

**அந்த நாளையி லிருந்ததுவும்**

**அதைவிட்டே கர்ப்ப மானதுவும்**

**மிந்தப் பூமியிற் பிறந்ததுவும்**

www.sufimanzil.org

**மினிமே லிதைவிட்டே யேகுவதும்**

**சொந்த மாகவே யிருப்பதுவும்**

**துய்யோன் தீதாறு காண்பதுவும்**

**விந்த விதமெல்லா மறியபறுழ்**

**மெய்பின் பீர் முரீதானவர்க்கே!**

என்றும், ஹழ்ரத் காட்டானை ஷைகு வலியுல்லாஹ் அவர்கள்...

**ரப்பை யறியஎழுகடலுக் கப்புறமாம்**

**குருவை யறிந்துகுரு வாகி – குரவாகிப்போல்**

**கோலமெல்லாம் கொண்டு குருவடிவ மானதன்பின்**

**ஆலநபி என்றே யறி! என்றும்...**

**அஞ்செழுத்தை தந்தகுரு ஐம்பத்தோ ரட்சரமாம்**

**நெஞ்சகத்தில் நின்றவினை வானோர்காண் - துஞ்சமற்ற**

**ஆதி இரசூல் ஆதம் இம்மூன்றும்**

**பேதலியா தேமனமே பீர்!**

**என்றும்இ மௌலா முஹம்மத் கௌஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...**

**ஆதி பீரையும் ஆண்டவன் தன்னையும்**

**பேத மின்றிப் பிரியாம லொன்றெனக்**

**காதல் கொண்டு கலப்பறக் காண்கிலார்**

**நீத மானநிஜ முரீதல்லவே! என்றும்....**

**பீரு மாவாய் பின்னும் ரசூலாவாய்**

**நேர வேரப்பு மாகிடு வாய்நிஜம்**

**பீரு மற்றுப்பின் பேசாப் பொருளா வாய்**

**ஆர பார வறிவிது வாகுமே!**

என்றும் கூறியுள்ளனர். ஆதலால் மேற்கண்ட ஆதாரங்களை கொண்டு மனிதன் எத்தனை வகையான கல்விகளை கற்று செயல்பட்டாலும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவில்

பூரணமடைவதற்குரிய வழி என்பது ஒரு காமிலான ஷெய்கிடத்தில் முரீது பெற்று அவர்களின் கட்டளைக்கேற்ப நடந்து வருவதேயாகும். அத்துடன் ஷெய்குடைய மகத்துவத்தைப் புரிந்து ஃபனாபிஷ் ஷைகு, ஃபாஃபிர் ரஸூல், ஃபனாஃபில்லாஹ் போன்ற படித்தரங்களை பெற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். மேலும் வலிமார்கள் எனப்படுவோரும் இம்முறையை கடைபிடித்தே வலித்தன்மையை பெற்றார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும்...

مَنْ لَّمْ يُوْلَدْ مَرَّتَيْنِ لَمْ يَدْخُلِ الْجَنَّةَ

**“யார் இருமுறை பெறப்படவில்லையோ அவர் சுவர்க்கம் செல்லமாட்டார்“**

என்பதாகவும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் கூறப்பட்டுள்ள நபிமொழியின் கருத்தையும் நாம் ஆராய்ந்தறிய வேண்டும். அதாவது, ஒவ்வொரு மனிதனும் தனது தாயின் கர்ப்பத்திலிருந்து இவ்வுலகுக்கு ஒரு தேகத்தைக் கொண்டு பிறந்து வந்திருப்பதைப் போல அவனை மரணம் வந்து பிடிக்கும் முன் அவன், தான் என்னும் வேற்றுமையை தனது ஷைகில் ஃபனாவாக்கி நூரானிய்யத் என்னும் இரண்டாம் பிறவியாகிய தனது சுயத்தோற்றமாகிய நூரே முஹம்மதிய்யாவை தரிசித்துக் கொள்ள வேண்டும் என்பதாம்.

மேலே கூறப்பட்டவாறு முரீதாக வேண்டியதன் அவசியத்தை தெரிந்துள்ளோரிலும் சிலர், அதை செய்து கொள்ளாது இருக்கட்டும். இன்னும் கொஞ்சகாலம் கழித்து முரீது பெற்றுக் கொள்ளலாமென்றும், குடும்பத் தொல்லைகள் அதிகமாக இருப்பதால் அதற்கெல்லாம் ஒரு ஏற்பாடு செய்துவிட்டு அதன் பின் முரீது பெற்று சதா வணக்கத்திலேயே ஈடுபட்டு விடலாமென்றும் எண்ணிக் கொண்டுள்ளனர்.

இவர்கள் குடும்பத் தொல்லை எனக் குறிப்பிடுவதுஇ மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றும் விஷயத்தில் கஷ்டப்படுவதைத் தான் இவ்வாறு குறிப்பிடுகின்றனர். இப்பிரச்சனையில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவ்வாறு குடும்பம் நடத்தினர் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்றி நடப்பார்களாயின் அவர்களுக்கு எவ்வித கஷ்டமும் நேர்ந்திருக்காது. அதற்கு மாறான கொள்கையை கடைப்பிடித்து உலகாசை மேலிட்டு தங்கத்தாலும் வெள்ளியாலும் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டுமென்றும்இ மாளிகைமேல் மாளிகை கட்டி வாழவும் விரும்பியதன் விளைவு! இவர்கள் நரக வேதனைக்கு ஆளாக நேரிட்டு விட்டது. மனைவி மக்களை மார்க்கச் சட்டத்துடைய வரம்புக்குள் கட்டுப்படுத்தி நடத்த வேண்டியது ஒவ்வொரு ஆண்களின் மீதுமுள்ள பொறுப்பாகும். அதற்கு வழிப்பட அவர்கள் மறுப்பார்களாயின்...

يَاأَيُّهَا النَّبِيُّ قُلْ لِّأَزْوَاجِكَ إِنْ كُنْتُنَّ تُرِدْنَ الْحَيٰوةَ الدُّنْيَا وَزِيْنَتَهَا فَتَعَالَيْنَ أُمَتِّعْكُنَّ وَأُسَرِّحْكُنَّ سَرَاحًا

جَمِيْلًا

**'நபியே! உமது மனைவிமார்களை நோக்கிக் கூறும். நீங்கள் இவ்வுலக வாழ்வையும் அதனுடைய அலங்காரத்தை மட்டுமே விரும்புவீர்களாயின், வாருங்கள்! உங்களுக்கு ஏதேனும் கொடுத்து நல்ல முறையில் உங்களை விலக்கி விடுகிறேன்"**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறியிருப்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டி அச்சமூட்டி எச்சரிக்கை செய்து தனது மனைவி மக்களின் விசுவாசத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவர் மீதுள்ள கடமையாகும். இதனாலேயே...

اِعْمَلُوْا فَكُلٌّ مُيَسَّرٌ لِّمَا خُلِقَ لَهُ

**"மனிதர்கள் எதை செய்வதற்காக படைக்கப்பட்டுள்ளார்களோ அது அவர்களுக்கு இலேசாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் நீங்கள் செயலாற்றுங்கள்"**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். மேலும்...

قُلْ كُلٌّ يَّعْمَلُ عَلٰى شَاكِلَتِهٖ

"(நபியே!) **அனைத்தும் அதனதன் கோலத்திலேயே செயல்படும் எனக் கூறுவீராக**" என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இந்த வசனத்தின் உண்மையான கருத்து என்ன என்பதை ஒரு காமிலான ஷெய்கிடத்தில் பைஅத்துச் செய்து கொண்டால் ஒழிய வேறு எந்த வகையிலும் விளங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் இது ஷுஹூதுடைய ரகசியத்தை சேர்ந்த ஒன்றாகும். மேலும் ஒரு ஷைகிடம் முரீது பெற்றுக் கொள்ளாதிருக்கும் நிலையில் ஒருவருக்குத் திடீரென வாதம் அடித்து விட்டது. அல்லது மாரடைப்பு ஏற்பட்டு விட்டது. அல்லது ஜன்னி கண்டு விட்டது என்னும் பெயரில் மரணம் வந்து விடுமாயின் அது மிகப்பெரும் கைச்சேதம்தான். ஆம். சாத்தான் ஷைகாக வந்து அவனை நரகத்தின் படுகுழியில் தள்ளி விடுவான் என்பதில் அறவே சந்தேகமில்லை. ஆதலால் இதை நாம் புரிந்து விரைவாக ஒரு ஷைகை தேடி பைஅத்துப் பெற்று நம்மை நேர்வழியிலாக்கிக் கொள்ள வேண்டும்.

**ஜாஹிலான ஷைகை விட்டும் நீங்குதல்**

ஏகத்துவத்திற்குரிய வாடையை அறவே தெரிந்து கொள்ளாத சில ஜாஹில்(மடையர்)கள் நீளமான தஸ்பீஹ் மணியை கையில் பிடித்துக் கொண்டும், கழுத்தில் மாட்டிக் கொண்டும் தம்மை மிகப் பெரிய ஷெய்கு என்றும்இ மஷாயிகு என்றும் விளம்பரப்படுத்திக் கொண்டு பாமரர்களில் சிலருக்கு முரீது கொடுத்து வருகின்றனர். இப்படிப்பட்டோரின் செயல்பாடுகளை நாம் கவனிப்போமாயின் இவர்கள் சதா பொருளாசை கொண்டு அலைவதும் அடுத்தவர்களை பற்றி புறம் பேசுவதும் தொப்பையை நிரப்பி கொள்வதற்காக சதா சாப்பிடுவதுமே இவர்களின் தொழிலாக இருப்பதை நாம் பார்க்கலாம்.

இன்னும் இவர்களில் சில ஹராமிகள் ஏழைப் பெண்களை ஏமாற்றி அவர்களுக்கு முரீது கொடுத்து இறுதியில் அவர்களை மானக் கேட்டுக்கு ஆளாக்கி விட்டு ஓடி விடுகின்றனர்.

இப்படிப்பட்ட சாத்தான்களின் கையை பிடித்தவர்களின் கதி முடிவில் அதோ கதியாகத்தான் முடியும்.

ஆதலால் தம்மை நேர்வழியில் சேர்த்து வைக்கக்கூடிய ஷைகு என்பவர், அப்பாதைக்கு தேவையான ரகசிய அறிவைப் பெற்றவர்களாகவும், அதற்கேற்ப செயல்படுபவராகவும் அத்துடன் வெளிரங்கமான அறிவையும் பெற்று மார்க்கத்திற்கு இம்மியளவு கூட மாற்றமில்லாமல் நடப்போராகவும் இருக்க வேண்டும். அத்தகையோரை தேடி அவர்களிடம் முரீது பெறுவதுதான் அறிவுடையோரின் இலட்சணமாகும்.

**ஏகத்துவக் கருத்தை உணராத குறைஞானிகள்**

சிலர் முரீது பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது அத்தனை முக்கியமானதல்ல என எண்ணி அதைப்பற்றி எந்தவொரு முயற்சியும் செய்யாதிருந்து முடிவில் இறந்து போகின்றனர். இன்னும் சிலர் பரக்கத்திற்காக யாருடைய கையையாவது பிடித்துக் கொண்டால் அதுவே போதுமென்றும், இறப்புக்குரிய நேரத்தில் அந்த ஷைகு பிரசன்னமாகி நம்மை காப்பாற்றி விடுவாராதலால் நமக்கு எந்தவொரு பயமும் தேவையில்லை என்றும் எண்ணிக்கொண்டு தொழுகை, நோன்பு போன்ற மார்க்கத்திற்குரிய கடமைகளை செயல்படுத்தாது ஞானவான்களால் எழுதப்பட்டுள்ள சில கவிதைகளை மட்டும் படித்துக் கொண்டு அதற்கு தனது மனம்போன போக்கில் அர்த்தமும் கருத்தும் வைத்து, அதை ஒன்றுமறியாத பாமரர்களிடம் படித்துக் காட்டி தம்மை மஸ்தான் என்றும், தாங்கள் ஒன்றுபட்ட பதவியில் இணைந்து விட்டோமென்றும், எல்லாமே ஒரே உள்ளமைப் பொருளுக்குரிய தோற்றமாக இருப்பதால் யார் யாரை கேள்விக் கேட்டு சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் அனுப்புவார்களென்றும் உளறிக் கொண்டு கணக்கில்லாத கஞ்சாப் பொட்டலங்களை தமது நண்பர்களோடு சேர்ந்து புகைத்துக் கொண்டு அதனுடைய போதை தலைக்கேறி மயக்கமுற்ற போது தனக்கு விண்ணும் மண்ணும் தெரிவதாக புலம்பித் திரிகின்றனர்.

இப்படிப்பட்ட அரைகுறைகளுக்கு மரணம் வரும்போது விண்ணுலகக் காட்சிகளைக் காண்பதற்கு அப்போதும் கஞ்சா பொட்டலங்களைத்தான் இவர்கள் தேடுவார்கள். தென்னியப் பகுதியில் மஸ்தான்களுக்கெல்லாம் கிரீடமாக விளங்கிய ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள், கஞ்சா, அபின், கள்ளு போன்ற ளாஹிரி வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாதென கண்டித்துக் கூறியிருக்கும் பாடல்களையெல்லாம் இவர்கள் பார்க்கவில்லை போலும். மேலும் இவர்கள் ஞானவான்களின் பாடல்களுக்கு சரியான முறையில் கருத்துக் கொள்ளாது போனதாலேயே தமது மனம்போன போக்கில் உளறத் துவங்கினார்கள். இதனாலேயே இப்படிப்பட்டோரை குறித்து குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**பாட்டைப் படித்ததனாற் பகர்ஞான வானென்ப**

**தேட்டுச் சுரைக்காய்க் கியல்பாம் நிராமயமே!**

எனக் கூறியிருப்பதை இவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**ஷைகிடம் முரீது பெற்றோரின் கடமை**

சில சகோதரர்கள் உண்மையான ஏகத்துவத்தை தெரிந்துள்ள ஷெய்குமார்களிடம் முரீது பெற்றிருந்தாலும் அவர்களின் கட்டளைக்கேற்ப செயல்படாது ஷைகும் நம்மைப் போன்றே ஒரு மனிதராகத்தானே இருக்கிறார் என்றும், அவருடைய கட்டளைக்கேற்ப நடக்க இப்போது வசதியில்லையாதலால் பிறகு பார்த்துக் கொள்ளலாமென்றும், இதனால் என்ன நஷ்ம் வந்துவிடப் போகிறதென்றும் அலட்சியமாக எண்ணிக் கொண்டு உலக சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே மும்முரமாக இருக்கின்றனர்.

இப்படிப்பட்டோருக்கு நோய் ஏதேனும் வந்துவிட்டால் உடனே மருத்துவரை அழைத்து வந்து அவர் கொடுக்கும் மருந்து மாத்திரைகளை நேரம் தவறாமல், பத்தியம் கெடாமல் சர்வ ஜாக்கிரதையாக சாப்பிட்டு வருவதை நாம் பார்க்கலாம். இதற்குக் காரணம், மருத்துவரின் கட்டளைப்படி நடக்காவிட்டால் நோய் நம்மை விட்டும் அகலாதென்னும் நம்பிக்கை இவர்களுக்கு இருப்பதுதான். இவ்விஷயத்தில் இத்தனை புத்திக்கூர்மையோடு செயல்படும் இவர்கள் உள்ளத்தின் நோயை நீக்கி மோட்சத்தின் பக்கமாக வழிகாட்டும் மருத்துவராகிய ஷைகுடைய கட்டளைக்கேற்ப நடக்காவிட்டால் தமது உள்ளத்தை பிடித்துள்ள நோய் தம்மை விட்டும் நீங்காமல் தாம் அழிந்து போய்விடுவோமென்னும் நம்பிக்கை மட்டும் இவர்களுக்குள் ஏற்படாதிருப்பது ஆச்சரியம்தான்.

இப்படிப்பட்ட நடைமுறைகளுக்கெல்லாம் காரணம், இவர்களுடைய உள்ளத்தில் உலகின் மீதுள்ள இச்சை பாசியாகப் படர்ந்து புத்தியின் ஒளி அதில் பிரகாசிக்க வழியில்லாது மறைந்து விட்டதேயாகும். இந்நிலையில் உலகின் மீதுள்ள இச்சையை கொஞ்சங்கொஞ்சமாகக் குறைத்து வந்தால்தான் இந்த இருள் அகலுமேயன்றி இறக்கும்வரை உலக சுகத்தை விட மாட்டேனெனப் பிடித்துக் கொண்டிருந்தால் கடைசிவரை முக்தியை பெறவே முடியாது. ஆதலால் அகமிய நிலையைக் கொண்டுள்ள ஷெய்குமார்களிடம் பைஅத்துப் பெற்றோர் தாங்கள் முரீது பெற்றதன் நோக்கம் என்னவென்பதை ஆராய்ந்தறிந்து அவர்களின் கட்டளைகக்கேற்ப நடந்து வருவதே பயன்பெறும் வழியாகும். இதனாலேயே...

وَمَنْ أَرَادَ الْآخِرَةَ وَسَعَىٰ لَهَا سَعْيَهَا

**"எவன் மறுமையை விரும்பினானோ அவன் அதற்குரிய முயற்சியை செய்வான்"**

என இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். மேலும் இதைப் பற்றி **"கீமியாயெ ஸஆதத்"** என்னும் நூலில் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார்...

"**இனி இவன்** பின்பற்றுவதற்கு ஒரு இமாம் தேவைப்படுகிறார். அந்த இமாம் என்பவர் யாரெனில் ஷைகேயாகும். ஷைகின்றி காரியம் கைகூடாது. ஏனெனில் வழி என்பது மறைவாக இருப்பதாலும் ஹக்குடைய வழியோடு சாத்தானுடைய வழியும் கலந்திருப்பதால் ஹக்குடைய வழி என்பது ஒரே வழியாகவும் ஷாத்தானுடைய வழி என்பது பல வழிகளாகவும் இருப்பதால் (வழி நடத்தக் கூடிய) ஷைகின்றி எப்படி நேர்வழியில் நடக்க முடியும்?

பின்னர் ஷைகு கிடைத்து விட்டால் காரியங்கள் அனைத்தையும் அவருடைய பொறுப்பில் விட்டுவிட வேண்டும். தனக்கென்று சுயதந்திரம் எதுவும் இருக்கக் கூடாது. தான் செய்யும் ஒரு காரியத்தில் தனக்குக் கிடைக்கும் பிரயோஜனத்தை விட ஷைகு செய்யும் தவறான ஒரு

காரியத்தில் தான் தனக்கு அதிகமான பிரயோஜனம் உண்டு என்பதை அவன் அறிந்திருக்க வேண்டும். மேலும் ஷைகைக் கொண்டு நிகழும் ஒரு தவறான காரியத்திற்குரிய காரணம் தெரியாமல் போனால் அப்போது கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த நிகழ்ச்சி ஷைகு முரீதுகளுக்காகவே வேதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

முரீதுடைய சிந்தனைக்கு எட்டாத எத்தனையோ ரகசியமான விஷயங்களை எல்லாம் ஷைகுமார்கள் அறிந்திருப்பர். ஆகவே முரீது தனது காரியம் அனைத்தையும் ஷைகின் பொறுப்பில் விட்டுவிட்டால் ஷைகானவர் முதலில் ஆபத்துக்கள் வந்து அணுகாதவாறு ஒரு அரணை ஏற்படுத்தும் கோட்டைக்குள் அவனை அமர்த்துவார். அக்கோட்டை நான்கு சுவர்களை கொண்டதாகும். அவை தனித்திருத்தல், வாய்மூடி இருத்தல், பசித்திருத்தல், விழித்திருத்தல் என்பவைகளாகும். பசித்திருத்தல் சாத்தானுடைய பாதையை அடைக்கும். விழித்திரு'த்தல் உள்ளத்தில் பிரகாசத்தை ஏற்படுத்தும். வாய்மூடி இருத்தல் பல்வேறு எண்ணங்களை விட்டும் அவனது உள்ளத்தை பாதுகாக்கும். தனித்திருத்தல் ஜனசஞ்சாரம் என்னும் இருளை அவனை விட்டு அகற்றுவதோடு கண், காது போன்றவைகளின் சிதறலுக்குரிய பாதையையும் அடைக்கும்.

அப்தால் என்னும் படித்தரத்தை எய்திய அனைவரும் பசித்தும் தனித்தும் வாய்மூடியும் விழித்தும் இருந்ததாலேயே அப்படித்தரத்தை எய்தினர் என்பதாக ஸஹ்ல் பின் துஸ்தரி ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகின்றனர். சிந்தனை சிதறல் என்னும் வழியிலிருந்து அகன்று விட்டால் பின்னர் நடக்கத் துவங்க வேண்டும். முதலில் வழியில் சன்னல் பின்னலான கஷ்டங்களை எல்லாம் அறுத்தெறிய முயல வேண்டும். அவை என்னவெனில், முரீது எந்தக் காரியங்களை விட்டு விட வேண்டுமோ அந்தக் காரியங்களுக்கு விதையாக இருக்கும் பொருளாசை, கௌரவப் பிரியம், உணவின் மீதுள்ள ஆசை, உடைகளின் விருப்பம், பெருமை, புகழாசை போன்றுள்ள குணங்களாகும்.

உள்ளத்தில் அலைக்கழிப்பை ஏற்படுத்துவதற்குரிய மூலக்கருவை உள்ளத்திலிருந்து அறுத்தெறிந்து விட்டால் உள்ளம் சுத்தமாக ஒழிந்திருக்கும். ஒருவன் இக்குணங்கள் அனைத்தையும் விட்டு நீங்கியவனாகவும் ஏதாவதொரு குணத்தில் சிக்கிக் கொண்டவனாகவும் இருப்பதுண்டு. அவன் அந்த குணத்தையும் விட்டு நீங்குவதற்கு ஷைகானவா எந்த வழியை சரியானதென நினைக்கிறாரோ எது அவனுக்குத் தகுந்தது என எண்ணுகிறாரோ அந்த வழியாக அதை அகற்ற முயற்சி செய்ய வேண்டும்.

இப்போது மனமாகிய உள்ளத்தை சுத்தப்படுத்தில விட்டபடியால் இனி விதை தூவத் துவங்க வேண்டும். விதை என்பது இறைவனுடைய தியானமாகும். இதில் இறைவனல்லாத மற்ற வஸ்துக்களை விட்டும் மனம் சுத்தமாகி விட்டால் தனிமையான ஓரிடத்தில் அமர்ந்து அல்லாஹ் அல்லாஹ் என சதா ஓயாமல் நாவாலும் மனதாலும் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். உள்ளத்தில் தியானம் மிகைத்து விட்டால் நாவால் சொல்வதை நிறுத்தி விட வேண்டும். பின்னர் மனமும் அதை சொல்லாமல் நின்றுபோய் அச்சொல்லின் பொருள் மட்டும் உள்ளத்தில் மிகைத்திருக்க வேண்டும். அப்பொருளில் அட்சரமோ அல்லது அரபி பார்ஸி போன்ற பாஷைகளோ இருக்கக் கூடாது. காரணம் உள்ளத்தால் சொல்வதும் பேச்சேயாகும். பேச்சு என்பது அவ்விதைக்கு தோலும் கவசமுமேயன்றி உட்பொருளாகிய மணியல்ல.

எனவே அப்பொருள் எவ்வாறு உள்ளத்தில் பதிந்திருக்க வேண்டும் எனில்இ பிரயாசை இன்றியே மனதை அதில் நிலைநிறுத்தும்வண்ணம் ஆகிவிட வேண்டும். அதேபோல பிரயாசைக் கொண்டு கூட மனதை அதிலிருந்து எடுக்க முடியாத அளவுக்கு அப்படியே அதில் உறைந்து போய்விட வேண்டும். உலகச் சந்தேகங்கள் என்னும் முட்களிலிருந்து உள்ளத்தை சுத்தப்படுத்தி இந்த விதையை அதில் நட்டுவிட்டால் பிறகு தனது தந்திரத்தால் ஆகப்போவது என்பது எதுவுமேயில்லை. விதை விதைக்கப்படும் வரைதான் நமது தந்திரம் என்பதெல்லாம். இனிமேல் என்ன நடக்கிறது.? என்ன விளைகிறது? என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். பெரும்பாலும் இந்த விதை வீணாகாது. ஏனெனில்....

مَنْ كَانَ يُرِيدُ حَرْثَ الْآخِرَةِ نَزِدْ لَهُ فِي حَرْثِهِ

**“யார் மறுமையின் வேளாண்மையை விரும்பினானோ அவனுடைய வேளாண்மைமைய நாம் அவனுக்கு அதிகப்படுத்துவோம்“**

என்பதாக இறைவன் அவனுடைய வேதத்தில் கூறுகிறான். இந்த இடத்தில் முரீதுகளின் நிலைமைகள் மாறுபடும். ஒருவனுக்கு கலிமாவின் பொருளை புரிந்து கொள்வதில் கஷ்டம் ஏற்படும். தப்பான எண்ணங்களெல்லாம் வந்து கொண்டே இருக்கும். இன்னொருவன் இவைகைள விட்டெல்லாம் நீங்கியிருப்பான். ஆனால் கனவில் தோன்றுவது போல அவனுக்கு வானவர்களின் பிரகாசமும் நபிமார்களுடைய ஆன்மாக்களும் அழகான தோற்றங்களில் தோன்றத் துவங்கும். அல்லது விழிப்புடைய நிலையிலும் அவைகளை காண்பான். அதன்பின் வேறு வகையான நிலைமைகள் தோன்றும். இவைகளின் விளக்கம் மிக நீளமாகும். இவற்றை விபரிப்பதால் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் இது சாதிக்கும் வழியேயன்றி வாதிக்கும் வழியல்ல.

ஒவ்வொருவருக்கும் வெளவேறு காட்சிகள் தோன்றும். இந்த வழியில் நடப்பவன் அக்காட்சிகளில் இருந்து எதையும் கேட்காதிருப்பதே அவனுக்கு நல்லது. காரணம் அதை எதிர்பார்ப்பது கூட அவனுக்குள் ஒரு சிந்தனை சிதறலை ஏற்படுத்தி அதுவே ஒரு திரையாகி விடும். கல்வியின் விளக்கத்தை கொண்டு சொல்லிக் கொடுக்க வேண்டிய விஷயங்கள் இது மட்டும்தான். இதைகூட நாம் சொன்னதற்கு காரணம் இதில் நம்பிக்கை இல்லாதோருக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே. இருப்பினும் பெரும்பாலான உலமாக்கள் இதை மறுப்பவர்களாகவே இருக்கின்றனர். ஏனெனில் எது வழக்கத்தில் படிக்கக் கூடிய கல்விக்கு மாற்றமாக இருக்கிறதோ அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. வல்லாஹு அஃலம்.“

மேற்கூறப்பட்ட விஷயத்தில் இமாம் அவர்கள், தான் செய்யும் ஒரு காரியத்தில் தனக்கு ஏற்படும் பிரயோஜனத்தை விட ஷைகு செய்யும் தவறான ஒரு காரியத்தில் தான் தனக்கு அதிகமான பிரயோஜனம் இருக்கிறதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறியிருப்பது அகமியத்தை அறிந்த காமிலான ஷைகுடைய கட்டளைக்கு வழிப்பட்டு அவர் சொல்லிக் கொடுக்கும் ரகசியமான கல்விகளையும் அமல்களையும் புரிந்து நடப்பதைக் கொண்டேயன்றி பணத்தாசை பிடித்து ஷைகென்றும் வேடம் தரித்து முரீது கொடுத்தபின் தொழ வேண்டாமென்றும் நோன்பு நோற்க வேண்டாமென்றும் கஞ்சா பிடிக்கும் பழக்கமுள்ள சாத்தான்களுடைய விஷயத்திலல்ல என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**பாவ மன்னிப்பும் வலியை பின்பற்றுவதும்**

அன்பார்ந்த வாசகர்களே! நாம் இவ்வுலகில் இதுநாள் வரை நமது தவறான போக்கினால் அல்லது கவனக் குறைவால் லா இலாஹ இல்லல்லாஹ் என்னும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் உண்மையான அர்த்தத்தையும் கருத்தையும் உணராது அதற்கு மாற்றமான வேற்றுமை என்னும் ஷிர்க்கான கொள்கையை கைக் கொண்டு அதனால் கணக்கில்லாத துன்பங்களுக்கும் கேவலத்திற்கும் ஆளாகி நிற்பதை நாம் எண்ணிப் பார்ப்போமாயின் நமது உள்ளம் கலங்கி கண்கள் கண்ணீரை சிந்தாமல் இருக்க முடியாது. இதனாலேயே ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

**காதருங் கண்ணீராற் கரைபுரள நின்றவர்க்குச்**

**சூதுதருங் கண்ணீர் தொலையும் நிராமயமே!** என்றும்...

**கடலின்மடை கண்டதெனக் கண்ணீர் கரைபுரளும்**

**அடியன்முகம் பார்த்திறங்கி யருளாய் நிராமயமே!**

என்றும் இறைவனிடம் அழுது புலம்புகின்றனர். ஆம். நமது பாவங்களை என்றும் நினைத்து உண்மையாகவே நமது உள்ளம் கவலைப்படுகிறது என்பதற்கு கண்ணீர் வடிப்பதே சரியான ஆதாரமாகும். இவ்விஷயத்தில் கண்ணீர் விட்டழுவது மிகப்பெரும் பலனை கொடுக்கம். இக்காரணத்தாலேயே...

اَنِيْنُ الْمُذْنِبِيْنَ اَحَبُّ اِلَيَّ مِنْ زَجَلِ الْمُسَبِّحِيْنَ

**"பாவிகளுடைய அழுகையின் முனகலானது என்னை துதிப்போரின் ஓசையை விட எனக்கு மிகவும் பிரியமானதாகும்"**

என்பதாக இறைவன் ஹதீதெ குத்ஸியில் கூறுகிறான். எனவே இறைவன் எனப்படுவோன் மன்னிப்போர்க்கு எல்லாம் மன்னிப்போனாக இருப்பதால் தனிமையான ஓரிடத்தில் அமர்ந்து நமது பாவங்களை நினைத்து அழுது மனமுருகி கண்ணீர் விட்டு பாவமன்னிப்புக் கோரி இனியேனும் வேற்றுமைக்குரிய கொள்கைகளிலும் பாவமான காரியங்களிலும் ஈடுபடமாட்டேன் என உறுதியோடு நின்று ஒரு காமிலான ஷைகிடத்தில் முரீது பெற்று அவருடைய கட்டளைக்கேற்ப அவருக்கு வழிப்பட்டு நடந்து வருவதை உறுதியாக பிடித்துக் கொள்ள வேண்டும்.

மேலும் இப்பாதையில் நிலைத்து நின்று பூரணமடைவதற்கு ஏகத்துவக் கருத்துக்கு முரண்படாத வகையில் பேணுதலோடும் பயபக்தியோடும் விலமார்களின் உதவியை தேடிப் பெற வேண்டும். ஏனெனில் இந்த தேகத்தைக் காப்பாற்றுவதற்குக் கூட பொருள் வேண்டும். அப்பொருளை பெறுவதற்கு பொருளுடையோரின் உதவி நமக்குத் தேவைப்படுகிறது. அதாவது ஒரு தொழிலை செய்து அதில் லாபமடைவதற்கு முதலில் மூலதனம் தேவைப்படுவதால் அதை பொருளுடையவரிடமிருந்து தான் நாம் பெற வேண்டியுள்ளது. அல்லது ஒருவரிடம்

ஊழியம் செய்து அவரிடமிருந்து அதற்குரிய கூலியை பெற வேண்டியுள்ளது. இல்லையேல் பொருள் தேடி நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அதேநேரம் இந்த தேகமோ அழிந்து போகும் ஒரு பொருளாகும். இதுபோன்றே அழியாப் பொருளாகிய இறைவனை அடைவதற்கு அதற்குரிய பொருளை தம்மிடம் வைத்துள்ள வலிமார்களிடம் சென்று அவர்களிடம் உதவி தேடுவதன் மூலமாகத்தான் அதை நாம் பெற வேண்டும்.

மேலும் வலிமார்களின் அகமியத்தை அறியாத சிலர் வலிமார்களிடம் உதவி தேடுவது மார்க்கத்திற்கு புறம்பானது என்றும் நமக்குத் தேவையான உதவியை நாம் இறைவனிடம்தான் கேட்டுப் பெற வேண்டுமென்றும் இறைவனை அறிந்த ஞானியைப் போல விதண்டாவாதம் பேசி வருகின்றனர். அல்லாஹ் என்னும் இஸ்மு தாத்துக்குரிய கருத்தென்ன என்பதைக் கூட அறியாத இவர்கள் தமக்குப் பசித்தால் அதற்கு எந்த வழியை தேர்ந்தெடுக்கின்றனர் என்பதை கூடவா இவர்கள் புரிந்து கொள்ளவில்லை?

இன்னும் தண்ணீர் தாகத்தை தீர்த்தது. கத்தி கையை அறுத்தது எனக்கூறுவது கூட ஏகத்துவவாதிகளிடம் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் அல்லாஹ் என தமது நாவைக் கொண்டு சொல்லும் அரபி வாக்கியத்திற்கு இவர்கள் தமது உள்ளத்தில் எந்த மாதிரியான பொருளை கொண்டுள்ளனர் என்பது தான் நமக்குப் புலப்படவில்லை. ஒருவேளை இறைவனை இவர்கள் தனியான ஓரிடத்தில் கட்டுப்படுத்தி அவனுக்கு தங்களின் உள்ளத்தில் ஒரு உருவத்தையும் கற்பனை செய்து வைத்துள்ளதாகவே நமக்குத் தோன்றுகிறது. இப்படிப்பட்டோர் மீது நாம் அனுபதாபப்படுவதோடு இவர்களுக்கு இறைவனுடைய ஏகத்துவத் தன்மையாகிய கலிமாவின் உண்மையான கருத்தை இறைவன் விளங்க வைக்க வேண்டுமென பிரார்த்திக்கிறோம். இதனாலேயே...

مَنْ اَرَادَ اَنْ يَّجْلِسَ مَعَ اللهِ فَلْيَجْلِسْ مَعَ اَهْلِ التَّصَوُّفِ

**“எவரேனும் இறைவனோடு இருக்க வேண்டுமென ஆசைப்படுவாராயின் அவர் தஸவ்வுபுடையவர்(வலிமார்)களோடு இணைந்து கொள்வாராக“**

என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இன்னும் அல்லாமா ஜலாலுத்தீன் ரூமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

ابلهان تعظیم مسجد میکنند — در جفائے اہل دل جد میکنند
ان مجاز است این حقیقت اے خران — نیست مسجد جز درون سروران
مسجد کو اندرون اولیاست — سجدگاه جمله است انجا خداست

**“மடையர்கள் மஸ்ஜிதுக்கு மரியாதை செலுத்துகின்றனர். அதேநேரம் கல்பை உடையோருக்கு வருத்தம் கொடுக்க முயலுகின்றனர். அது(மஸ்ஜிதானது) வெளிரங்கமாக இருக்கும். இது (கல்புடையோர்) அந்தரங்கமாக இருக்கின்றனர். ஏ!கழுதைகளே! மஸ்ஜித் என்பது தலைசாய்ப்பவர்களின் கல்பேயன்றி வேறில்லை. ஆம். மஸ்ஜித் என்பது**

www.sufimanzil.org

**வலிமார்களின் கல்பாகும். அது அனைவருக்கும் சஜ்தா செய்யும் இடமாகவும் இறைவன் இருக்கும் ஸ்தானமாகவும் இருக்கும்**“ எனக் கூறுகின்றனர். இன்னும்...

وَإِذْ قُلْنَا لِلْمَلَٰئِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ أَبَىٰ وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ

**“ஆதமுக்கு ஸஜ்தா செய்யுமாறு நாம் வானவர்களுக்கு கட்டளையிட்டபோது இப்லீஸைத் தவிர வானவர்கள் ஸஜ்தா செய்தனர். மேலும் இப்லீஸ் விலகிக் கொண்டு பெருமை பேசினான். இன்னும் அவன் (இறைக் கட்டளைக்கு வழிப்படாத காரணத்தால்) இறை மறுப்பாளர்களில் நின்றுமாகி விட்டான்“**

என்பதாக இறைவன் தனது வேதத்தில் கூறுகிறான். இந்த வசனத்தில் ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் வானவர்களும் இறைவனுடைய சிருஷ்டிகளாக இருக்க, சிருஷ்டிகர்த்தாவாகிய இறைவன் வானவர்களை தனக்கு ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிடாது சிருஷ்டிப் பொருளாகிய ஆதமுக்கு ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டதற்குரிய ரகசியமென்ன என்பதை நாம் ஆய்ந்தறிய வேண்டும். மேலும் இப்போதும் கூட நம்மிலுள்ள ஆதமுக்கு நம்மிடமுள்ள வானவர்கள் ஒருவினாடி நேரம் கூட ஓய்வில்லாது இரவுபகலாக ஊழியம் செய்து வருவதன் ரகசியத்தையும் உய்த்துணர வேண்டும்.

இக்கருத்தை ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்துக்குச் சரியாக அறிந்து கொண்ட நமது இந்திய தேச இஸ்லாமியர்களால் ஷரீஅத்துடைய புலி என கண்ணியத்தோடு அழைக்கப்பட்டு வந்த கீழக்கரை ஹழ்ரத் ஷைகு ஸதக்கத்துல்லாஹ் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்...

يَا صَاحِبَ النَّاهُوْرِ كُنْ لِيْ نَاصِرِيْ    فِي السَّمْعِ وَالْأَعْضَا وَحُسْنِ الْبَاصِرِ

وَبِطُوْلِ عُمْرٍ لَّا بِعُمْرٍ قَاصِرٍ    يَا مَجْمَعَ الْخَيْرَاتِ عَبْدَ الْقَادِرِ

**“நாகூர் எஜமானே! கேள்வியிலும் அழகான பார்வையிலும் சகல அவயங்களிலும் எனக்கு உதவி செய்யுங்கள். இன்னும் எனது வாழ்நாளை அதிகப்படுத்தித் தந்தருள்வதில் எனக்கு அருள் புரியுங்கள். அதேநேரம் குறைந்த வயதைக் கொண்டல்ல. நன்மைகள் அனைத்தும் சேகரமாகி இருக்கும் ஸ்தானமே! அப்துல் காதிர் நாயகமே!“**

என்பதாக நாகூர் ஹழரத் குத்புல் அக்தாப் குத்புல் மஜீத் பர்துல் வசஹீத் ஸிர்ருல் உஜூத் சர்வஜீவ ரட்சகர் ஸையிதினா ஷாஹுல் ஹமீத் காதிர்வலி கஞ்ச பக்ஷ் கஞ்ச ஸவாயி பாதுஷா நாயகம் அவர்களிடம் உதவி தேடுகின்றனர். இதில் ஏகத்துவத்திற்குரிய எதார்த்தத்தின் கருத்தை நோக்க, வலிமார்களிடம் கேட்பது உண்மையில் இறைவனிடம் தான் கேட்பதாக இருக்கிறது. எவ்வாறெனில், மேலே கூறப்பட்ட “வலி“ என்னும் நாமமும் இறைவனுக்குரிய நாமமாகவே இருப்பதால், இன்னும் ஹழ்ரத் குணங்குடி மஸ்தான் சூபி அப்துல்காதிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அண்ணலெங்கோமான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அகமியத்தைக் குறிக்கும் வகையில்...

www.sufimanzil.org

**கோடானு கோடிமறை யாலுமறி யாக்குணங்**

**குடிகொண்ட கருணை வடிவே**

**ஹூலாஇ லாஹஇல் லல்லாஹு வென்பதற்**

**குரியமஹ் மூதுநபியே!**

என்றும், ஹழ்ரத் மஹ்பூப் சுப்ஹானி மஃஷூகுர் ரஹ்மானி குத்புல் அக்தாப் கௌஸுல் அஃழம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரகசியத்தைப் பற்றி...

**மன்னிய தவத்தினர்க் கருடந்த குருவுநீ**

**மாதா பிதாவு நீயே**

**மட்டறு பவக்கட றொலைக்குமொரு கவிழா**

**மரக்கலமு நீயல்லவோ**

**அன்னியம தானபிர பஞ்சமாம் பெருநெருப்**

**படக்கும் பெரும்பாலமா**

**மன்புட னெனைப்பெற்ற வப்பனே யருடந்த**

**வாண்டவனு நீயல்லவே**

**என்னையுனை யன்றியினி யாள்வரெவ ரைய்யனே**

**யெந்தையே யெம்பிரானே**

**இகபர மிரண்டினுஞ் சுகதுக்க மற்றுயா**

**னீடேற வுருள்புரிவாயே**

**நன்னிலைய மாகவென் முன்னிலையில் வந்துமெந்**

**நாளும்ரட் சித்தருள்வையே**

**நற்குணங் குடிகொண்ட பாதுஷா வானகுரு**

**நாதன் முஹ்யித்தீனே!**

என்றும், நாகூர் ஹழ்ரத் குத்புல் அக்தாப் குத்புல் மஜீத் பர்துல் வஹீத் ஸையிதினா ஷாஹுல் ஹமீது காதிர்வலி கஞ்ச பக்ஷ் கஞ்ச ஸவாயி பாதுஷா நாயகம் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ரகசியத்தைப் பற்றி...

**திக்குத் திகந்தமுங் கொண்டாடி யேவந்து**

**தீன்கூறி நிற்பர்கோடி**

**சிங்காச னாதிபர்கள் நஸரேந்தி யேவந்து**

**ஜெய ஜெயா வென்பர் கோடி**

**ஹக்கனருள் பெற்றபெரி யோர்களளொலி மார்களணி**

**யணியாய் நிற்பர்கோடி**

**அஞ்ஞான வேரறுத்திட்டமெய் ஞானிக**

**ளணைந்தருக நிற்பர்கோடி**

**மக்கநக ராளும் முஹம்மதிர சூல்தந்த**

**மன்னரே யென்பர் கோடி**

**வசனித்து நிற்கவே கொலுவீற் றிருக்குமுன்**

**மகிமைசொல வாயுமுண்டோ**

**தக்கபெரி யோனருட் டங்கியே நிற்கின்ற**

**தவராஜ செம்மேருவே**

**தயவுவைத் தெனையாளும் நற்குணங் குடிகொண்ட**

**ஷாஹுல் ஹமீதரசரே!**

எனக் கூறப்படும் இக்கவிதைகள் ஒவ்வொன்றும் ஏகத்துவத்திற்குரிய கலிமாவின் கருத்தை உள்ளடக்கியதாகவே இருப்பதை நாம் உணர வேண்டும்.

எனவே அன்னியம் என்னும் வேற்றுமையாகிய எண்ணங்களை விட்டும் நீங்கி ஏகத்துவத்திற்குரிய விசுவாசத்திற்கு நேரான முறையில் வலிமார்களை பின்பற்றி ஷைகுடைய கட்டளைக்கேற்ப நடந்து வந்தால் சம்பூரண மகா திருச்சமூகமாகிய மழ்ஹருல் அதம்மு என்னும் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹுர்மத்தாகிய கண்ணியத்தின் பொருட்டால் ஃபனாஃபிஷ்ஷைகு, ஃபனாஃபிர்ரஸூல்,

ஃபாஃபில்லாஹ்வாகிய படித்தரத்தை எய்தி முக்தி சாதனத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் ஜீவன் முக்தி என்பது, தேகத்தோடு அல்லது தேகத்துடைய அனுபவத்தோடு நமது எண்ணத்தைக் கொண்டு நம்மை மெய்ப்பொருளாக அறிதல் அல்லது நமது எண்ணத்தில் மட்டும் நம்மை மெய்ப்பொருளாக சிந்தித்தல், அல்லுது நமது செயல்களை மெய்ப்பொருளுடைய செயலாகக் கருதிக் கொள்ளல் என்பதாகும்.

இவ்வாறு நமது எண்ணங்களும் செயல்களும் ஆற்றலும் எப்போதும் சிந்தனை மூலமாக மெய்ப்பொருளில் நிலைத்திருக்குமாயின் அதை ஜீவன் முக்தி என்றும் இத்தகையோர் தமது இறப்புக்குப் பின் விதேக முக்தி நிலையினை பெறுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

மேலும் விதேகமுக்தி என்பது எந்தவொரு செயலும் நினைவுமற்று தாத்து முத்லக் என்னும் வெட்டவெளியைப் போல சலனமற்று இருப்பதாகும். இதனுடைய மகத்துவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. இதைத்தான் பரிபூரண நிலையெனக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட அப்பியாசத்தில் இருக்கும்போது உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் வந்து அலைமோதுவதை தகர்த்தெறிந்து விட வேண்டும். எந்தவொரு எண்ணமும் உள்ளத்தில் தோன்றாதவாறு செய்துவிட வேண்டும். இதுமிகப் பெரும் பிரயாசையைக் கொண்டே சாதிக்கப்படக் கூடியதாகும். மேலும் இந்த நிலையை அடைந்தால் தான் உள்ளம் தூய்மையாயிற்று என்னும் நிலைக்கு வந்து சேர முடியும். இவ்வாறு செய்வதற்கு நமக்கு சக்தி ஏற்பட்டு விடும்பட்சத்தில் அப்போதே நாம் அடிமை என்னும் தளையை விட்டும் பூரணநிலையை அடைந்தவர்களாகி விடுவோம். சர்வ சக்தனாகிய அல்லாஹ்வும் அவனது ஜோதியாகிய ரஸூலும் இப்படிப்பட்ட நிலையை நமக்கு அருள் புரிவார்களாக. ஆமீன் பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன் ஸலவாத்துல்லாஹி தஆலாஅலைஹி வஆலிஹி வ அஸ்ஹாபிஹி வ அஹ்லி பைத்திஹி அஜ்மயீன்.

முற்றும்.